# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 232 ஆனி 32ஆம் நாள் திங்கட்கிழமை 16 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு நடைமுறைப்படுத்த முடியாதது

*மாகாண சபையில் சிறப்பு அமர்வு நடைபெறவுள்ள நிலையில் விக்கி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு மாகாண சபையில், டெனீஸ்வரன் விவகாரம் தொடர்பில் இன்று சிறப்பு அமர்வு நடைபெறவுள்ள நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்த முடியாதது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் >> 25

## இன்றைய விவாதம் தேவையற்றதாம்

சிறப்பு அமர்வில் ரெலோ பங்கேற்காது

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு மாகாண சபையில், டெனீஸ்வரன் விவகாரம் தொடர்பில் இன்று நடைபெறும் சிறப்பு அமர்வில் பங்கேற்பதில்லைஎன்றுரெலோ முடிவு செய்துள்ளது. இன்றையசிறப்புஅமர்வுதேவையற்ற ஒன்று என்றும், இந்த அமர்வில் பங் >> 25

## ஆளுநர், அவைத் தலைவருடன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சந்திப்பு

விக்கியின் உரைக்கு எதிர்க்கட்சி தலைவரும் இன்று பதிலடி

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு மாகாண சபையின் இன்றைய சிறப்பு அமர்வு தொடர்பாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆளுநருடனும், அவைத் தலைவருடனும் சந்திப்பு நடத்தியுள்ளனர். வடக்கு மாகாண முதலமைச்சர் கடந்த அமர்வில் ஆற்றிய உரைக்கு, வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் >> 25

## பொலிஸாரிடமிருந்து தப்பித்தோடிய முச்சக்கரவண்டியால் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
முச்சக்கரவண்டி, அடுத்தடுத்து மூன்று உந்துருளிகளுடன் மோதியது. இந்த விபத்தில் சிக்கி கால்முறிந்த நிலையில் மூவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுன்னாகம் பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட முச்சக்கர வண்டி, மூன்று உந்துருளிகளை மோதித் தள்ளியதில் இந்த விபத்துச் சம்பவித்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் மதவடியில் நேற்று மாலை 7 மணியளவில் பொலிஸார் வீதிக் கடமையில் நின்றுள்ளனர். வீதியால் பயணித்த முச்சக் >> 25

# வன்னியிலிருந்து ஏன் முதலமைச்சர் வரக்கூடாது?

## கேள்வி எழுப்புகிறார் ரெலோ முன்னாள் எம்.பி. வினோ

வவுனியா, ஜூலை 16
வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரனா? மாவையா? என்று பேசிக் கொண்டிருக்கின்றோம். வன்னியைச் சேர்ந்த ஒருவரின் பெயரை ஏன் உங்களால் உச்சரிக்க முடியவில்லை? இங்கு எத்தனை இயக்கப் போராளிகள் இருக்கின்றார்கள். அவர்களிலிருந்து ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக ஏன் உச்சரிக்கமுடியவில்லை? இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். >> 25

## சரணடைந்த எனது அப்பா எங்கே?

*சிறுமியின் கேள்வியால் கண்ணீர்விட்ட பணியாளர்கள்*



கிளிநொச்சி, ஜூலை 16
2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் அருட்தந்தையுடன் சரணடைந்த எனது அப்பா எங்கே? இவ்வாறு 9வயதுச் சிறுமி உருக்கமாகக் கோரிக்கை விட்டார். இதன் போது அமர்விலிருந்த பலரும் கண்ணீர் விட்டழுதனர். >> 25

## வடக்கில் முகாம்கள் அகற்றப்படமாட்டாது

*இராணுவத் தளபதி திட்டவட்டமாகத் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 16
வடக்கு - கிழக்கில் எந்தவொரு இராணுவ முகாமும் அகற்றப்படமாட்டாது என்று இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் சில பணிகள் தொடர்பிலும் அரசியல்வாதிகளாலும், ஊடகங்களிலும் பிழையான செய்திகள் வெளியிடப்படுவதாகவும், நாட்டு மக்கள் மத்தியில், இராணுவம் தொடர்பிலான தவறான அபிப்பிராயம் ஏற்படுவதாகவும் >> 06

## இளைஞர்களை உசுப்பேற்றிய தலைவர்களே முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்குக் காரணம்

இப்படிச் சொல்கிறார் ஆனந்தன் எம்.பி.

வவுனியா, ஜூலை 16
வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை - தமிழீழம் கோரிய - தனிநாடு அறிவிப்பை எடுத்த மிதவாதத் தலைவர்கள், இளைஞர்களை உசுப்பேற்றி விட்டனர். இவர்களே முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு காரணம். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந் >> 25

முறைப்பாடு கிடைத்தால்

## இந்திய ராணுவத்தையும் பணியகம் விசாரிக்கும்

*ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஜூலை 16
இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில்நிலைகொண்டிருந்த காலப் பகுதியில், இந்திய இராணுவத்தினரால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாடு கிடைத்தால், அது தொடர்பில் இந்திய இராணுவத்தையும் விசாரிப்போம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர்பணிய >> 06

## அதிகாரிகளின் கண்ணில் மண்தூவி விவரங்களைப் பெற்றது ரி.ஐ.டி

கிளிநொச்சி, ஜூலை 16
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மே மாத இறுதிக் காலப் பகுதியில் பிறந்த குழந்தைகளின் விவரத்தைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளதாகத்தெரியவருகின்றது. இந்தவிவரங்களை வழங்கவேண்டாம் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியிருந்த நிலையில், அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத்தூவி இந்த விவரங்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் பெற்றுள்ளமை தற்போது >> 06




## ஓ.எம்.பியை ஒருபோதும் நம்பத் தயாராக இல்லை

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்பு >> 25

## தன்மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆற அமர இருந்து விக்கி பதில்

யாழ்ப்பாணம், ஜூலை 16
தனக்கு எதிராக கடந்த 14 நாள்களுக்குள் முன்வைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆற அமர இருந்து யோசித்துப் பதிலளித்துள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். வடக்கு மாகாண முதலமைச்சரின் வாராந்த கேள்வி - பதில் அறிக்கையிலேயே, எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வழங்கியுள்ளார். இது தொடர்பில் முதலமைச்சர் பணியகத்தால் அனுப்பிவைக்கப் >> 06

## ஹேரொயின் வைத்திருந்த நபர் கைது

திருகோணமலை,ஜூலை 16
திருகோணமலையில் முப்பது மில்லிகிராம் ஹேரொயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.
திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவலைப்பின் போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.
சமுத்திராகமத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,40)

# போதையை ஒழிக்க சிறப்புப் படையணி

**கொழும்பு, ஜூலை 16**
**போதைப்பொருள் வியாபாரத்தை ஒடுக்குவதற்காகச் சிறப்புப் படையணியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.**

தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தி, போதைப்பொருள் வர்த்தகத்தை ஒடுக்குவதற்குப் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸாரின் சிறப்புப் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது இந்தப் பிரிவு ஈ.ஆர்.டி எனும் பெயரில் அமைக்கப்படவுள்ளது.
வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 200 கிலோவுக்கும் அதிகளவான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.
ஒரு கிலோ ஹெரோயினின் பெறுமதி தற்போது 1கோடியே 20 இலட்சம் ரூபாவாகக் காணப்படுகின்றது என்று போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் மூத்த அதிகாரியொருவர் கூறியுள்ளார்.
இந்தநிலையில், ஹெரோயின், கொக்கேய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களுடன் இதுவரை 17 ஆயிரத்து 472 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொழும்பு, புத்தளம், சிலாபம், யாழ்ப்பாணம் மற்றும் தென் பிராந்திய கடற்பகுதிகளிலேயே அதிகளவானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.
ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிலிருந்தே அதிகமாக போதைப்பொருட்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி4)





போரின் வடுக்களைப் பொது வெளியில் புரிய வைக்கும் காண்பியல் கலைக் கண்காட்சி மட்டக்களப்பு, பன்குடாவெளியில் நேற்று நடைபெற்றது. ஓவியர் சுசிமன் நிர்மலவாசனின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. போர்க் காலத்தில் நடந்த சம்பவங்களை அவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. (ரி4)

## உடனடித் தண்டம் விதிப்பு: நேற்றிலிருந்து ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 16
மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், புதிய உடனடித் தண்டம் விதிப்பு நேற்றுத் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏற்கனவே இருந்த 23 விதி மீறல்களில் ஒரு சில நீக்கப்பட்டு, 14 விதி மீறல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.
மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட, 2017 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கத் திருத்தத்துக்கு அமைய வெளியிடப்பட்டுள்ள, 2018 ஜனவரி 15 ஆம் திகதி 2054/09 எனும் அதி சிறப்பு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உடனடித் தண்டம் விதிப்பு தொடர்பிலான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், 18 வயதுக்கு உட்பட்டோர் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதநபரைச் சேவைக்கு அமர்த்துதல், ஆகிய மூன்று விதி மீறல்கள் புதிய திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளன. அவை நீதிமன்றில் வழக்குத் தொடருதல் அடிப்படையான குற்றத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
ஏற்கனவே இருந்த 23 விதி மீறல்களில், வாகன இலக்கத் தகடு மற்றும் வாகன இலக்கத் தகட்டின் வடிவம் ஆகிய இருவிதி மீறல்களும், ஒன்றாக்கப்பட்டு வாகன இலக்கத் தகடு எனும் ஆயிரம் ரூபா உடனடி அபராத விதிப்பு விதிக்கப்படும் புதிய விதி மீறலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
இந்த உடனடி அபராத விதிப்பில், மிகக் குறைந்த தண்டத் தொகை 500 ரூபா ஆகவும், அதி கூடிய தண்டத் தொகையாக 3 ஆயிரம் ரூபாவும் அதிக வேகமாக வாகனத்தைச் செலுத்துவது தொடர்பிலான விதி மீறல் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ளது.
அபராதத் தொகையைச் செலுத்த, அபராதச் சீட்டு வழங்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும் என்பதுடன், அதற்கு மேலதிகமாக வழங்கப்படும் மேலதிக 14 நாட்களுக்குள் அபராதத் தொகை செலுத்தப்படும் போது, அந்த அபராதத் தொகையை இரட்டிப்பாகச் செலுத்த வேண்டும்.
இந்த அபராதத்தொகையை, நாடு முழுவதிலுமுள்ள ஏதாவதொரு அஞ்சல் அலுவலகங்களிலோ அல்லது பிரதேச செயலகங்களிலோ செலுத்தலாம். (ரி4)

## கிண்ணியாவில் மண்டையோடு மீட்பு

திருகோணமலை,ஜூலை16
கிண்ணியா, மணியரசன் குளத்துக்கு அருகில் மனித மண்டையோடு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.
ஓராண்டுக்கு முன்னர் இந்தக் குளத்தில் இளைஞர் ஒருவரின் உடல் தலையற்ற நிலையில் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ரி4)

## தந்தையும் மகனும் விபத்தில் உயிரிழப்பு

அநுராதபுரம்,ஜூலை16
அநுராதபுரம், செப்புக் குளத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர்.
விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.
விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மிஹிந்தல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். ஹொரவபத்தானையைச் சேர்ந்த 41வயதுடைய தந்தையும் 8 வயதுடைய மகனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## அடிக்கல் நடும் நிகழ்வு

நுவரெலியா,ஜூலை 16
இந்திய அரசின் நிதி உதவியில், மலைநாட்டுப் புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சினூடாகப் பெருந்தோட்டப் பகுதி மக்களுக்குக் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டது.
நிகழ்வு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் தலைமையில் நுவரெலியாவில் நேற்று நடைபெற்றது.
அக்கரப்பத்தனை வெவர்லி தோட்டம், ஹட்டன் போடைஸ் தோட்டம் மற்றும் பொகவந்தலாவ லொய்னோன் தோட்டம் போன்ற இடங்களில் அமைக்கப்படவுள்ள வீடுகளுக்கே அடிக்கல் நடப்பட்டது.
நிகழ்வில் இந்திய உயர்தானிகராலயத்தின் அதிகாரி மஞ்சுநாத், மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், சிங் பொன்னையா எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி4)



## ரோமுக்குச் சென்றார் மைத்திரி



கொழும்பு,ஜூலை 16
ஆறாவது உலக வன வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாநாடு மற்றும் வன பாதுகாப்புச் சபையின் 24 ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று ரோம் நாட்டைச் சென்றடைந்தார்.
பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வனங்களின் பங்களிப்பை அதிகரித்துக்கொள்வதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வனப் பாதுகாப்புத் தொடர்பிலான புதிய பரிந்துரைகள் மற்றும் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் அடைவு தொடர்பில் உறுப்பு நாடுகளிடையே இதன் போது கலந்துரையாடப்படவுள்ளது.
இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று சிறப்பு உரையாற்றவுள்ளார்.
இதனைத் தொடர்ந்து நாளை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை மைத்திரிபால சிறிசேன ஜோர்ஜியா நோக்கிப் பயணிக்கவுள்ளர் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி4)

# தூக்குத் தண்டனைக் கைதிகள் விவரங்கள் நீதி அமைச்சிடம்

## சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**

**போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் விவரம் நீதிமற்றும் மறுசீரமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 18 கைதிகளுக்கு போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் துக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.**

அதேவேளை அலுகோசு (கைதிகளைத் தூக்கில் இடுபவர்) பதவிகளுக்காக விண்ணப்பங்களை கோருவதற்கு அடுத்த வாரம் முதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது என்று அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்குப் பெரும்பாலான அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் தகவல்களைத் தருமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரலவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

நாட்டின் வரலாற்றில் ஒருவரை நிலையாக நிற்க வைத்துக் கொலை செய்தல், தலையைத் துண்டித்துக் கொலை செய்தல், தண்ணீரில் அமிழ்த்திக் கொலை செய்தல் உட்பட மரண தண்டனை முறைமைகள் காணப்பட்டன. முதல் முறையாக ஒருவரைத் தூக்கில் தொங்க வைத்துத் தூக்குத்தண்டனைநிறைவேற்றப்பட்டமை 1812ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதியே ஆகும்.

இலங்கையில் கடைசியாக ஒருவர் தூக்கில் போடப்பட்டமை 1976ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி ஆகும். அன்று தொடக்கம் கடந்த 42 வருடங்களாக தூக்குத் தண்டனை நாட்டில் நடைமுறையில் இல்லை.

நாட்டுச் சட்டத்தின் படி, அரசுக்கு எதிராகச் சதி செய்தல், இராணுவக் கிளர்ச்சி செய்தல், போதைப் பொருள் வியாபாரம், கொலை செய்தல் போன்ற குற்றச் செயல்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது. (ற)



முல்லைத்தீவு, நெடுங்கேணி கற்பகா அறநெறிப் பாடசாலையால் பூமாலை கட்டும் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ற)

# பரீட்சை முறைகேடுகளை தடுக்கப் புதிய திட்டங்கள்

கொழும்பு, ஜூலை 16

பரீட்சை முறைகேடுகளை தவிர்க்கும்நோக்கில் அனைத்துப் பரீட்சை மத்திய நிலையங்களிலும் மேலதிக நிலைய பொறுப்பதிகாரியொருவரை நியமிக்க பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்க்கை எடுத்துள்ளது. அந்த மேலதிக நிலையப் பொறுப்பதிகாரியூடாகப் பரீட்சை கண்காணிப்புக்கள் மேற்பார்வை செய்யப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்துள்ளார். பரீட்சை மத்திய நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும் தொலைபேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்களை முடக்குவதற்கான நடவடிக்கைகளும் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தவுள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. அவை செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளன.

உயர்தரப் பரீட்சையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 21 ஆயிரத்து 469 பேர் தோற்றவுள்ளனர்.

2 ஆயிரத்து 267 பரீட்சை மத்திய நிலையங்கள் மற்றும் 311 ஒருங்கிணைப்பு மையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் மூன்று லட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சை 3 ஆயிரத்து 50 பரீட்சை மத்திய நிலையங்களில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்தார். (ற)

# பெரும் காட்டிக்கொடுப்பை செய்துவிட்டது கூட்டு அரசு

## குமுறுகின்றார் விமல்

கொழும்பு, ஜூலை 16

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்குவதானது இந்திய இலங்கை உடன்படிக்கையை விட மிகப் பயங்கரமான காட்டிக்கொடுப்பு என தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. அந்த முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

மத்தளவானூர்திநிலையத்துக்குத்தற்போதுவழங்கப்பட்டுள்ள ஆயிரத்து 600 ஏக்கருக்கு மேலதிகமாக மேலும் 24 ஆயிரம் ஏக்கர் சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனத்துக்கு வழங்க அரசு இணங்கியுள்ளது. மேலும் 40 ஆயிரம் ஏக்கர் காணியை மத்தள வானூர்தி நிலைளத்துக்கு அருகில் பாதுகாப்பு வலயமாக ஒதுக்கவும் அரசு இணங்கியுள்ளது.

கடற்கரை வரை இருக்கும் இந்த நிலத்தை அளவிடும் பணிகள் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல் கிடைத்துள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் வானூர்தி புகைப்படத் தகவல்களை அடிப்படையாககொண்டு குறித்த நிறுவனம் அளவிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை ஆபத்துக்கு உள்ளாகி மேற்கொள்ளப்படும் இந்தக் காட்டிக்கொடுப்பானது இந்திய இலங்கை உடன்படிக்கையை விட பாரதுரமான காட்டிக்கொடுப்பாக வரலாற்றில் பதியப்படும் - என்றார். (ற)

# அரசு எடுத்த முடிவுக்கு பொன்சேகா எதிர்ப்பு!

கொழும்பு, ஜூலை 16

போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த முப்படையினரின் நேரடியான பங்களிப்பை பெற்றுக்கொள்வது என அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு ஆதரவளிக்க மாட்டேன் என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் சில நபர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். இப்படியான சம்பவங்கள் கோத்தபாய ராஜபக்சவின் காலத்தில் நடந்தன.

போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த முப்படையினரின் பங்களிப்பை பெற அரசு எடுத்துள்ள தீர்மானத்தை நான் எதிர்க்கின்றேன். இது முப்படையினரின் பணியல்ல. அது பொலிஸாருக்கு உரிய கடமை என்றார்.

# வடக்கு முதலமைச்சரின் கருத்தால் இசுரு கவலை!

கொழும்பு, ஜூலை 16

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் நடவடிக்கைகள் தொடர்பில் வருத்தப்படுகின்றேன் என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

தன்னிடம் கேட்காமல் வடக்கில் இராணுவத்தினருக்குத் தகவல்களை வழங்கவேண்டாம் என முதலமச்சர் விக்னேஸ்வரன், அரச அதிகாரிகளிடம் அண்மையில் கூறியிருந்தார். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் இதனை விட புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும். இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் வட பகுதி அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் கவலையடைகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# புதையல் தோண்ட முயன்றோர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 16

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கூளாவடியில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்றுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நேற்று அக்கரைப்பற்று நீதிவான் ஏ.பீட்டர்போலிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் இணைந்த வகையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு மற்றும் கோளாவில் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# கனிய வளங்கள் ஏற்றிச்செல்ல பதிவு செய்திருப்பது அவசியம்

**புவிச்சரிதவியல் பணியகம் அறிவுறுத்து**

கொழும்பு, ஜூலை 16

அனுமதிப் பத்திரமின்றி கனிய வளங்களைக் கொண்டு செல்லும் டிப்பர் வாகனங்களைச் சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கனியப் பொருள்களைக் கொண்டு செல்லும் டிப்பர் வாகனங்கள், பதிவு செய்திருத்தல் அவசியம் எனப் பணிப்பாளர் நாயகம் சஜ்ஜன டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

டிப்பர் வாகனங்களை அடையாளங் காண்பதற்காக, ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் தொடர்பாடல் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்மூலம் கனிய வளங்களை ஏற்றிய வாகனங்கள், பயணத்தை ஆரம்பித்தது முதல், உரிய வகையில் பயணிக்கின்றதா என்பது தொடர்பில் கண்டறிய முடியும்.

கனிய வளங்களைக் கொண்டு செல்வதற்கு இதுவரை 5 ஆயிரத்துக்கும் அதிகமான டிப்பர் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன - என்றார். (ற)

## மாபெரும் தொழிற்சந்தை

யாழ்ப்பாணம்,ஜூலை 16
யாழ்ப்பாண மாவட்டச் செயலகமனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தால்நடத்தப்படும் மாபெரும் தொழிற்சந்தை எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும்.
காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ள இந்தச் சந்தையில் ஆடைத் தொழிற்சாலை, தனியார் உற்பத்தி நிறுவனங் கள், பாதுகாப்புச் சேவை, சந்தைப்படுத்தல்,கணக்கியல் துறை, காப்புறுதித்துறை, பொலிஸ் சேவை, தாதியர்,குழந்தை பராமரிப்பாளர், சுத்திகரிப்பாளர் மற்றும் விடுதி முகாமைத் துவ வேலைவாய்ப்புக்கள் போன்ற தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்த்தல் மற்றும் விடுதி முகாமைத்துவம், கணினித்துறைப் பயிற்சிகள், தாதியர் பயிற்சிகள், கப்பல்த்துறை தொடர்பான பயிற்சிநெறி, ஏனைய தொழில் பயிற்சி நெறிகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
தொழில் தேடுபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளுடன் வருகைதந்து பயன் பெறுமாறு மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
(250.147)



சண்டிலிப்பாய், கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற சங்கரப்பிள்ளை சிவானந்தராஜாவுக்குச் சேவைநலன் பாராட்டு நிகழ்வு மானிப்பாய், இந்துக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. (70)

# சண்டிலிப்பாயில் மீன்சந்தையை காலந்தாழ்த்தாது அமைக்கவும்

சண்டிலிப்பாய்,ஜூலை16

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் பல வருடங்களாக மீன்சந்தை இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இந்தப்பகுதி மக்களின் நலன்கருதி மீன் சந்தையை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென் மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் க.ஜெசீதன் தவிசாளரைக் கோரியுள்ளார்.

சந்தை அமைக்க வேண்டிய தேவைகுறித்து உறுப்பினர் தவிசாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய்ப் பகுதியில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், இதுவரை நிரந்தரமான மீன்சந்தை இல்லாமையால் அந்தப்பகுதி மக்கள் மீன்களைக் கொள்வனவு செய்வதில் சீரமங்களை எதிர்கொள்கின்றனர்.
கடந்த பல வருடங்களுக்கு முன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக இயங்கிவந்த மீன் சந்தை, இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டது என்று காரணம் காட்டி அகற்றப்பட்டது.
அன்றிலிருந்து இன்றுவரை சந்தை அமைப்பது தொடர்பாகப் பிரதேச சபையால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சில மீன் வியாபாரிகள் உரிமையாளரின் சம்மதத்தோடு தனியார் காணியில் வைத்து வியாபாரம் செய்து வந்தனர். இந்த வியாபாரமும் பிரதேசசபையால் தடுத்து நிறுத்தப் பட்டது. மக்களின் நலன்கருதி நிரந்தரமான மீன்சந்தை அமைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக வலி. தென்மேற்குப் பிரதேசசபைத் தவிசாளரிடம் "உதயன்" தொடர்பு கொண்டு கேட்டபோது, மீன்சந்தை அமைப்பதற்கான நிரந்தரக் காணி கிடைக்கவில்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் சண்டிலிப்பாயில் இந்தச் சந்தை இயங்கியது. எனினும் அதன்பின் சந்தை இயங்கவில்லை. அண்மையில் தனியார் ஒருவரின் காணியில் இயங்கி வந்தது. எனினும் அருகில் மாகியப்பிட்டிச் சந்தை இருக்கின்றமையால் ஒரே பகுதியில் இரு சந்தைகள் அமைக்கக்கூடாது என அந்தச் சந்தையும் அகற்றப்பட்டது.
தற்சமயம் மீண்டும் தற்காலிகமாக இன்னொரு இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்தச் சந்தையை நிரந்தரமாக அமைப்பதற்கான காணியைக் கோரியுள்ளோம். காணி கிடைக்கும் பட்சத்தில் சந்தையை மீள அமைப்பது தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார். (115 ,114)

## நலன்புரிச்சபையின் வெள்ளிவிழாவும் பாராட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜூலை 16
கனடா- குரும்பசிட்டி நலன்புரிச்சபையின் வெள்ளிவிழாவும் பாராட்டு நிகழ்வும் தெல்லிப்பழை, குரும்பசிட்டி ஆ.சி.நடராசா ஞாபகார்த்த பொது நூலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிலையத்தலைவர் அ. யோகநாதன் தலைமையில் இடம் பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்குப் பிரதேசசபை உறுப்பினர் தங்கராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி



யோ.நந்தகோபன், வலி.வடக்குப் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.ரஜிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப் பட்டன.



யாழ்ப்பாணம், வடமராட்சி தென்புலோலி குரும்பைசிட்டி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாள் உற்சவம் அண்மையில் இடம்பெற்றது. வைரவப்பெருமான் வீதி உலா வருவதையும் அடியவர்கள் பாற்செம்பு எடுத்துவருவதையும் படங்களில் காணலாம். (124)

## யூனியன் கல்லூரியின் வணிக நிகழ்வு

யாழ்ப்பாணம் ,ஜூலை16
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வணிக மன்றத்தால் வணிக நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மன்றத்தலைவி இ.கார்த்திகாயினி தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் மக்கள் வங்கியின் தெல்லிப்பழைக் கிளை முகாமையாளர் க.ரமேஷ் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் விருந்தினர்க ளாக கலந்து கொண்டனர். வணிக தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.
(113)



## போட்டோப் பிரதி இயத்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 16
யாழ்ப்பாணம், வேலணை செட்டிபுலம் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான போட்டோப் பிரதி இயத்திரம் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் இதைக் கொள்வனவு செய்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேலணைப் பிரதேசசபை உறுப்பினர்களான செ.பார்த்தீபன், சி.அசோக்குமார் ஆகியோர்களூடாக அண்மையில் வழங்கிவைத்தார்.



## தொழில்நுட்பவியல் கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூலை 16
மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமாக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கை நெறியானது மொறட்டுவ, தியகம, கோமாகவிலுள்ள தொழிநுட்ப நிறுவனத்தில் நடத்தப்படும்.
இதற்கான தகைமையாக இணைந்த கணிதம், உயர்கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் 2015.2016.2017 ஆகிய ஆண்டுப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டியதுடன் வயதானது 31.12.2017 இல் 24 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர், தொழிநுட்பவியல் நிறுவனம், மொரட்டுவப் பல்கலைக்கழகம் தியகம,கோமாகம என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# சனசமூக நிலையங்கள் அறநெறி கற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

இன்றைய இளைய தலைமுறைகளுக்கு இறைபக்தி சற்று குறைவாகவே காணப்படுகின்றது. ஒரு விதத்தில் எமது அறநெறிசார்ந்த வழிகாட்டல்கள் போதுமானதாக இல்லை என்பதையே இது வெளிக்கொணர்கின்றது. எனவே எமது இளைய சமூகத்தை அறநெறிப் பாதையில் இட்டுச் செல்ல சனசமூக நிலையங்களில் அறநெறிக் கற்கைநெறிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும் என வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கைதடி மேற்குச் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சமூகங்களுக்கிடையே வன்முறைக் கலாசாரம். போதைப் பொருள் பாவனை. களவு முயற்சிகள். வன்புணர்வுக் குற்றங்கள் எனப் பலதரப்பட்ட சமூக எதிர்மறை நிகழ்வுகள் அதிகரித்துவருவது கவலைக்குரியது. இவ்வாறான தீய பழக்க வழக்கங்களில் இருந்து எமது பிள்ளைகளைப்பாதுகாக்க வேண்டியது அந்தந்த கிராமங்களைச் சேர்ந்த பெரியவர்களினதும் சனசமூக நிலையங்களினதும் தலையாய கடமையாகும்.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் அங்கத்தவர் ஒருவர் தற்செயலாக சாவடைந்தால் அவரின் குடும்பத்தினருக்கு 15 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படும் எனவும் இது மீளச் செலுத்தப்பட வேண்டாத ஒரு உதவு தொகையாகவே கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகள் இங்குள்ள ஏழை மக்களுக்குப் பெரிதும் உதவுவன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்களில் நகர்ப்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையங்களைவிட கிராமப்புறங்களில் உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் நீண்டகாலம் தமது பணிகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று இன்று அந்தக் கிராமங்கள் அல்லது சமூகங்கள் உயர்ந்த நிலையை அடைந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

முன்னைய காலத்தில் சனசமூக நிலையங்களை அமைப்பதற்கு அந்தக் கிராமத்தில் அல்லது அந்தப் பகுதியில் வாழ்ந்த இளைஞர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டுஒருவாரத்துக்கோ அல்லது 10 நாள்களுக்கோ ஏதாவது வேலைகளுக்குச் சென்று அதில் கிடைத்த ஊதியங்களைக் கொண்டு சிறிய ஒரு கொட்டிலை அமைத்து அதில் சனசமூக நிலையங்களை ஆரம்பித்தார்கள்.

இன்று பல சனசமூக நிலைய உறுப்பினர்கள் எமது அலுவலகத்தை நாடி வருகின்றார்கள். தங்களுக்குக் கதிரைகள் தேவை, மேசைகள் தேவை, கட்டடங்கள் தேவை, விளையாட்டு உபகரணங்கள் தேவை எனப் பலதரப்பட்ட தேவைப்பாடுகளுடன் எம்மிடம் வருகின்றார்கள். கிராம மக்கள் பலர் தாமாக ஒன்று சேர்ந்து ஒரு சிறிய அபிவிருத்தியைக்கூட செய்வதற்கு முன்வருவதில்லை என்ற ஒரு குறை இருக்கத்தான் செய்கின்றது. எல்லாத் தேவைகளுக்கும் நாம் அரசின் கையை எதிர்பார்க்கத் தொடங்கினால் எமது அபிவிருத்திகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படும். - என்றார்.



யாழ்ப்பாணம், சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் கோவில் அலங்கார திருவிழாவின் இறுதி நாள் நகர்ப் பவனி கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றது.



## ஆண்டு நிறைவும் சான்றிதழ்கள் வழங்கலும்

சாவகச்சேரி, ஜூலை 16

யாழ்ப்பாணம், சாவகச்சேரி டி.வி.எம்.எஸ் கணினி கல்வி நிறுவனத்தின் ஆறாவது ஆண்டு நிறைவும் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

கல்வி நிறுவனத்தில் கணினி ஆங்கிலம் ,சிங்களம், வெளிநாட்டு மொழிக் கற்கை நெறிகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்த 140 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி இந்து ஆரம்ப வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் சியாமளா கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் வே.சுந்தரலிங்கம், கிளிநொச்சி கல்வி வலய பரந்தன் ஆசிரிய மத்திய நிலைய வழிகாட்டலும் ஆலோசனையும் - அலுவலர் சு.வீரசுதாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (9,159)

## சாலை விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சிப்பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சாலை விபத்துக்களில் நால்வர் காயமடைந்த நிலையில் மூவர் யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் தெற்குப் பகுதிச் சாலையில் உந்துருளியில் இருவர் சென்று கொண்டிருந்த வேளை தொலைபேசி அழைப்பு வரத் திடீரென உந்துருளியை மறுகரைக்குச் செலுத்தியுள்ளார். அவ்வேளையில் அந்தச் சாலையூடாக உந்துருளியில் வந்த ஒருவர் சாலையைக்கடக்கமுயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த எஸ். அருந்தவசீலன் (வயது 36) தங்கராசா சுதாகரன் (வயது 36) ஆகிய இருவருடன் மட்டுவில் தெற்கைச்சேர்ந்த கோணேஸ்வரன் டிலக்ஸன் (வயது 22) ஆகிய மூவரும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

இதேவேளை நேற்றுமுன்தினம் மாலை கைதடி தெற்கில் கிரவல் சாலையில் உந்துருளியில் பயணித்தவேளை சில்லு சறுக்கியதில் அதில் பயணித்த அந்தப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெகநாதன்(வயது33)என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (9)



யாழ்ப்பாணம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வை நோக்கிய பயணத்தின்போது நேற்று அதிகாலை இடம்பெற்ற 20 கிலோ மீற்றர் ஈருருளி ஓட்டப் போட்டியின் போது பெருமளவான வீரர்கள் பங்கு பற்றினர். (161)

## பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 16

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் முன்றலில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதுவரை காலமும் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார அலகினரும், செயலக பணியாளர்களும் இணைந்து பிரதேச செயலக முன்றலில் ஆடிப்பிறப்பு நிகழ்வினை நடத்திவந்தனர்.

இவ்வருடம் ஆடிப்பிறப்பின் மகத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை கிராம மட்டத்தில் நடத்த மேற்கொள்ள்ப்பட்ட முடிவுகளின் பிரகாரம் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கொண்டாடப் படவுள்ளது. (9)

## மாணிக்கவாசகர் குருபூசை

காரைநகர்,ஜூலை 16

காரைநகர், கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

# குடும்பத் தலைவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜூலை 16

மனைவியையும் பிள்ளைகளையும் தாக்கிக் காயப்படுத்தினார் குடும்பத் தலைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் தனது 2 பிள்ளைகளுடன் கணவனின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தப் பெண் கொடுத்த முறைப்பாட்டி னையடுத்து சாவகச்சேரி பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் இந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (9)

## திருவாசக அரண்மனையில் மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம் ,ஜீலை.16

யாழ்ப்பாணம் நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் மணிவாசகர் குருபூசை நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெவுள்ளது.சிறப்பு பூசை வழிபாடுகளுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இசை ஆசிரியர் வடிவாம்பிகை சுபதாஸவின் திருவாசக இன்னிசை இடம்பெறும். (113)

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம் ,ஜீலை.16

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் திருவாசக முற்றோதல் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிப் பூசையைத் தொடர்ந்து திருவாசகமுற்றோதல் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நண்பகல் மணிவாசகப் பெருமான் வீதி வலம் வருவதுடன் தொடர்ந்து மகேஸ்வரப் பூசையும் இடம் பெறும் என ஆலயத் தலைவர் தெரிவித்துள்ளார். (113)

## காசோலை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஈலிங் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி கையளிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில்வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 23 பல்கலைக்கழக மாணவர்களுக்கும், 37 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் காசோலைகளைக் கையளித்தனர். (114)



### காதலனுக்கு வேறொரு பெண்ணுடன் திருமணம்

## இளம்பெண் தவறான முடிவெடுத்துச் சாவு

காதலன் பிறிதொரு பெண்ணைத் திருமணம் செய்யவுள்ளதாகக் கூறியமையால், தவறான முடிவு எடுத்து இளம் பெண் உயிரிழந்துள்ளார். இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 21வயது இளம்பெண்ணே இவ்வாறு உயிரிழந்ததாக யாழ்ப்பாண மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இளம்பெண் நீண்டகாலமாக இளைஞன் ஒருவனைக் காதலித்ததாகவும், அவர் பிறிதொரு பெண்ணைத் திருமணம் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளார். இதனைத் தாங்க முடியாமல் இளம்பெண் தவறான முடிவு எடுத்துள்ளார். சங்கானை வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்ததாக இறப்பு விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (5,8)

## வட்டுக்கோட்டையில் பெண் மீது தாக்குதல்

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து இளம் குடும்பப் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் வேளை, வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை- கோட்டைக்காடு வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக தனது குழந்தையுடன் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை வட்டுக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் வைத்தே பெண் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த பெண் வீதியில் வீழ்ந்து கிடந்த நிலையில் வீதியால் சென்றவர்களால் மீட்க்கப்பட்டு கோட்டைக்காடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நாவற்குழியில் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி ஒருவரின் உதவியாளராக மேற்படி பெண் பணியாற்றி வருகின்றார். இந்த வழக்குத் தொடர்பான விசாரணை மன்றில் இடம்பெற்றபோது, இராணுவப் புலனாய்வாளர்கள் அங்கு வந்திருந்தாக நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,26,37)

## தன்மீதான...

பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**63பேரின் வேலை வாய்ப்பு**

'வடக்கு மாகாணப் போக்குவரத்து நியதிச் சட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புக்கள் பெறக்கூடிய 63 பேரின் வேலைவாய்ப்பை முதலமைச்சர் முடக்கி வைத்துள்ளார்' என்ற குற்றச்சாட்டுக்கு, வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச்சட்டத்துக்கு அமைய 63 பேருக்கு ஆளணி அனுமதிக்கப்பட்டது.

அனுபவம் வாய்ந்தவர்கள் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற நோக்கில் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து நிறுவனங்களில் கடமையாற்றிய 38 பேருக்கு பா.டெனீஸ்வரனால் தற்காலிகமாக நியமனம் வழங்கப்பட்டது. நான் அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் அவர்களை உள்வாங்கி நிரந்தரம் ஆக்குவதற்கும் மிகுதியினரை (25பேரை) உரியமுறைப்படி தெரிவு செய்வதற்கும் ஆள் சேர்ப்புத்திட்டம் எமது அமைச்சினால் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு அனுப்பியபோது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. தற்காலிக நியமனம் பெற்றவர்களை உள்ளேற்க அவர்கள் அனுமதி தரவில்லை. 38 பேருக்கான ஆளணியை ஒதுக்கிவைத்துவிட்டு மிகுதிப் பேருக்கு விளம்பரம் கோரி வேலை வழங்கக் கூடியதாக இல்லை. ஏனெனில் பதிவுகளின் பிரகாரம் மொத்தமாக 63 பதவிகளும் வெற்றிடமாகவே தற்பொழுதும் உள்ளன. ஆனால் 38 பேர் தற்காலிகமாகப் பணியாற்றுகின்றார்கள். குறித்த 38 பேரையும் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை முற்றுப்பெற்றதும் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி மிகுதி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். எதனையும் முடக்கி வைக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. டெனீஸ்வரனால் நியமிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வாங்கிக் கொடுக்கவே இந்தத் தாமதம். அவர்களைக் கைவிட்டுவிட்டு 63 பதவிகளுக்கும் புதிதாக விளம்பரம் கோரினால் அவற்றை உடனேயே நிரப்பமுடியும், என்று குறிப்பிட்டுள்ளார்.

**சுற்றுலா**

'முதலமைச்சரின் அமைச்சின் சுற்றுலா அபிவிருத்தித் துறைசார்ந்த பணியாளர்கள் பலர் மத்திய மாகாணத்துக்கு வடக்கு மாகாணசபையின் நிதிகளைச் செலவழித்து அண்மையில் சுற்றுலா மேற்கொண்டமை பணவிரயம் செய்வதான செயல்' என்ற குற்றச்சாட்டுக்கு, சுற்றுலாத்துறை அபிவிருத்தித் துறையின் கீழ் எமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அறுபது மில்லியனுக்கான வேலைத் திட்டத்தில் இலங்கையின் பிறமாகாணங்களுடனான அனுபவப் பகிர்வுக்கான களப் பயணமும் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றது. இதற்காக ரூபா ஒரு மில்லியன் நிதி ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தலைமைச் செயலாளரின் தலைமையிலான மாகாணத் திட்டமிடல் குழுவினாலும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர்களின் துறைசார்ந்த ஆளுமை விருத்தியையும் அனுபவப் பகிர்வையும் அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுப் பிரயாணங்களும் உள்ளூர்ப் பயணங்களும் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது வழமையான நடைமுறையாகும். இதற்கிணங்கவே எனது அமைச்சின் பணியாளர்களும் வடக்கு மாகாண சுற்றுலாத் துறை தொடர்பானஅனுபவப் பகிர்வுக்கு களப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறையில் விருத்தி அடைந்துள்ள மற்றும் அந்தத் துறையில் முன்னணியில் உள்ள ஏனைய மாகாணங்களில் சுற்றுலாப் பணியகம் அல்லது சுற்றுலா அதிகார சபைஎன்பன எவ்வாறான கட்டமைப்புக்களைக் கொண்டு செயலாற்றுகின்றன என்பது தொடர்பிலும் அவர்களால் மேற்கொள்ளப்படும் சுற்றுலா தொடர்பான அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் அனுபவப் பகிர்வு மூலம் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக களப் பயணங்கள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக கடந்த 6,7,8ஆம் திகதிகளில் மத்திய மாகாணத்துக்கு களப் பயணம் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. களப் பயணத்துக்கான மதிப்பீடானது தயாரிக்கப்பட்டு அது அனுமதிக்கப்பட்டு அம் மதிப்பீட்டின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியே செலவுகளுக்குப் பாவிக்கப்பட்டது. மேற்படி நிதி செலவழிக்கப்படாதிருந்தால் பணம் திருப்பி அனுப்பப்படும் என்று பதிலளித்துள்ளார்.

**வானூர்திப் பயணம்**

'முதலமைச்சர் உதவியாளர் ஒருவருடன் 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வானூர்தி மூலம் கொழும்பு சென்றுவந்ததால் ரூ.20 லட்சம் வரையிலான பொதுமக்களின் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது' என்ற குற்றச்சாட்டுக்கு, உத்தியோகபூர்வக் கடமையின் நிமித்தம் வடக்கு மாகாண முதலமைச்சரும், பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தரும் வானூர்தி மூலம் 2014ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கொழும்பு சென்று வந்தமைக்கான வானூர்திக் கட்டணக் கொடுப்பனவு முதலமைச்சருக்கு 11 லட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாவும், பொலிஸ் உத்தியோகத்தருக்கு 6 லட்சத்து 94 ஆயிரம் ரூபாவுமாகும்.

இந்த விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்க்கப்பட்டபோது நானே வெளியிடுமாறு பணித்தேன். முதலமைச்சர் வானூர்தியில் போகவேண்டிய காரணம் துரிதமும், பாதுகாப்பும், உடல் வசதியும் ஆவன. மற்றைய மாகாண முதலமைச்சர்கள் அவ்வாறு பயணம் செய்வதில்லை என்று கூறப்பட்டது.

இலங்கையில் கொழும்பில் இருந்து ஆகக் கூடிய தூரத்தில் மாகாணசபை அமைந்திருக்கும் இடம் யாழ்ப்பாணமே. பொதுவாக வாகனங்கள் கொழும்புக்குப் பயணம் செய்வதானால் ஏழு மணித்தியாலங்கள் தேவை. ஏழு மணித்தியாலங்கள் பயணம் செய்துவிட்டு அதேநாளோ மறு நாளோ உத்தியோகபூர்வ கூட்டங்களில் கலந்து கொள்வது வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மட்டும் ஏற்படக் கூடிய இக்கட்டாகும். மேலும் அவ்வாறான பயணத்தில் ஈடுபடும் ஒரே தமிழர் வடக்கு மாகாண முதலமைச்சர் மட்டுமே. அவரே நான்கு மணித்தியாலங்களுக்கு சிங்களப் பிரதேசங்களில் பயணிக்க வேண்டியவர்.

இலங்கையில் 75 வயதுக்கு மேற்பட்ட முதலமைச்சர் வடமாகாண முதலமைச்சர் மட்டுமே. பொலிஸார் பாதுகாப்பு நிமித்தம் எனக்களித்த அறிவுரையின் பிரதிபலிப்பே வானூர்தி மூலப் பயணம். இதற்கான அப்போதைய ஆளுநரின் அனுமதி கிடைத்தது. அப்போதைய ஆளுநர் 15 தொடக்கம் 20 வரையிலான சிறப்பு அதிரடிப்படையினரைத் தமது பாதுகாப்புக்கு ஈடுபடுத்தினார். வாகன எரிபொருள், அதிரடிப்படையினர் செலவுகள் என்று அவர்களின் செலவு பற்றி எவருமே மூச்சுவிடவில்லை. தற்போது இளந் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அவ்வாறான பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றுள்ளனர். இது இவ்வளவுக்கும் என்னுடன் இரண்டு அல்லது மூன்று பொலிஸாரே உள்ளூரில் பாதுகாப்புக்கு வருகின்றார்கள். ஒருவரையே வானூர்திப் பயணத்தின் போதுகொண்டு செல்கின்றேன். வான் படையினரின் வானூர்திப் பயணங்களின் போது பொலிஸாருக்குக் கட்டணம் அறவிடப்படுவதில்லை.

மேலும் தமது பாதுகாப்புப் பற்றிய இவ்வாறான விவரங்களை எவரும் வெளியிடுவதில்லை. காரணம், முதலமைச்சரை வேண்டாதவர்கள் இந்தத் தரவுகளை தமக்கு அனுசரணையாகப் பாவிக்கலாம். ஆனால் மக்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் முதலமைச்சருக்கு எதிராகத் திட்டமிட்டுப் 'பரப்பப்படும் சந்தேகத்தை ஏற்படுத்தும் கேள்விகளுக்குப் பதில் இறுக்கவும் உண்மையானது வெளிப்படுத்தப்படுகின்றது.

**ரஞ்சன் ராமநாயக்க விவகாரம்**

'வடக்கை வந்து பார்த்து மக்களின் கருத்துக்களை அறிந்து செல்லுமாறு நீங்கள் விடுத்த கோரிக்கைக்கு நடிக நாடாளுமன்ற உறுப்பினர் இரஞ்சன் இராமநாயக்க ஒத்துக்கொண்டுள்ளாரே. இதுபற்றி?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

'ஆம். அவர் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பியுள்ளார். அவற்றை மொழி பெயர்க்கக் கொடுத்துள்ளேன். தொடக்கமே பிழை போலத் தெரிகிறது. மேலும் நான் அவருக்கு வடக்குக்கு வந்து செல்லுமாறு கூறியதன் பின்னரே அவர் விஜயகலா சம்பந்தமாக அவரிடம் சம்மதம் பெறாமல் அவருடனான கருத்துப் பரிமாற்றங்களை வலைப்பின்னல்களுக்கு வெளியிட்டுள்ளார். இது ஒரு குற்றமாகக் கணிக்கக்கூடிய விடயம். குறித்த நபரை வடக்குக்கு வருமாறு அழைத்ததின் பின்னர் நடைபெற்றஅவர் சார்பான நிகழ்வுகளும் அவர் பற்றி என் கொழும்பு நண்பர்கள் கூறி வருவதும் அவ்வளவு ஏற்புடையதாகத் தெரியவில்லை. இவர் வடக்கு வந்து உண்மையை அறிந்து தெற்குக்குத் தெரியப் படுத்தக்கூடிய ஒருவராகத் தெரியவில்லை. நான் அவரைக் காலஞ்சென்ற விஜய் குமாரணதுங்க போன்ற ஒருவர் என்றே முதலில் எண்ணினேன். என் எண்ணம் தவறென இப்போது தெரிகின்றது' என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## வடக்கில்...

அவர் ஊடகங்களுக்கு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'போரின் போதும் அதன் பின்னரும் இராணுவம் நிர்வாகக் கடமைகளுக்கு அப்பால் பல்வேறு அபிவிருத்தி மற்றும் சமூகப்பணிகளை மேற்கொண்டுள்ளது. பிரதானமாக நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினரை அகற்றி அவர்களை வேறு கடமைகளுக்காக ஈடுபடுத்தி இராணுவத்தினரது சேவைகளை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளோம்.

இராணுவ முகாமிலிருக்கும் கூடுதலான படையினர் இடரின்போதும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்குமான பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். முகாம்கள் மூடப்படுவதாகவும், பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தல் வடக்கு - கிழக்கில் ஏற்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

தேசியப் பாதுகாப்புக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் ஏற்படப்போவது இல்லை. இராணுவ முகாம்கள் மூடப்படமாட்டாது என்பதை வலியுறுத்துகிறோம். படையினர் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இருந்த போதிலும் சில அரசியல்வாதிகளாலும், ஊடகங்கள் மூலமாகவும் இராணுவத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் வெளியாகும் கருத்துக்களை நம்பவேண்டாம் என்று பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம்' என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## அதிகாரிகளின்...

தெரியவந்துள்ளது. ஒட்டுசுட்டானில் கிளைமோர் மீட்க்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்குப பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தேடி வருகின்றனர். சந்தேகநபரின் மனைவி, மே மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலை ஒன்றில் குழந்தை பிரசவித்துள்ளதாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளிலும், மேற்படி காலப் பகுதிக்குள் குழந்தை பிரசவித்தவர்களின் விவரங்களை வழங்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கோரியிருந்தனர். தகவல்களை, மாவட்ட வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியாது என்றும், மாகாண பணிமனையுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 35 ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்தும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் உத்தியோகபற்றற்ற முறையில் தமக்குத் தேவையான தகவல்களைத் திரட்டியுள்ளனர். (5,105)

## இந்திய...

கத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை, காணாமல் ஆக்கப்பட்டோர்•பணியகத்தினர் நேற்றுச் சந்தித்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களையும் அவர்கள் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் முடிவில், 'உதயனால்' எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கு தாயகத்தில் நிலை கொண்டிருந்தபோது பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால், இந்திய இராணுவத்தையும் நீங்கள் (பணியகம்) விசாரிப்பீர்களா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ஆணையாளர், முறைப்பாடு கிடைத்தால் நாம் இந்திய இராணுவத்தையும் விசாரணைக்கு உட்படுத்துவோம்என்று கூறினார். (5,6)

# அரசதலைவர்தேர்தலில்போட்டியிட்டால் தமிழர்களும் எனக்கு வாக்களிப்பார்கள்

## வலிய வழிந்து கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு, ஜூலை 16

**அடுத்த அரசதலைவர்தேர்தலில்போட்டியிடத் தயாராக இருக்கிறேன். நான் போட்டியிட்டால் தமிழர்களும் வாக்களிப்பார்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர்கோத்தாபாயராஜபக்சதெரிவித்துள்ளார்.**

கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச, அடுத்த அரசதலைவர்வேட்பாளராக என்னை நிறுத்தினால் நான் போட்டியிடுவேன். எனது சகோதரர் பசில் ராஜபக்ச தேர்தலில் போட்டியிட மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள்கூட இந்தமுறை எனக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறேன். நான் பொது பலசேனாவின் ஆதரவாளர் என்ற தவறான கருத்து இப்போது பொய்யாகியுள்ளது. எனவே, முஸ்லிம்கள் எனக்கு வாக்களிப்பார்கள். மகிந்தராஜபக்சவுக்காகத் தமிழ் மக்கள் எனக்கு வாக்களிப்பார்கள்.

நான் அரச தலைவராக தெரிவு செய்யப்பட்டால், ஒவ்வொரு குடிமகனும், அமைதியாகவும், கௌரவமாகவும் வாழுகின்ற நிலையை உறுதி செய்வேன். தமிழர்கள்கவலைப்படவேண்டியதில்லை.

ஏனென்றால், மகிந்த ராஜபக்ச தனது குடும்ப வட்டத்துக்குள் தமிழ் உறவுகளைக் கொண்டிருக்கிறார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் அவர் வடக்கு, கிழக்கில் முக்கியமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளார்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

இராணுவச் சிக்கல்கள் பற்றிப் பேச

# சந்திக்கவிரும்பினேன் விக்கி மறுத்து விட்டார்

## கோத்தா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

வடக்கில் இராணுவம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்திக்க, தான் விரும்பியபோதும் அவர் மறுத்து விட்டார் என்று கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார்.

கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்கவேண்டும்என்று நான்கேட்டேன். இராணுவம்தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காணவே அவருடன் பேச்சு நடத்தக் கேட்டேன்.

அந்தப்பேச்சுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் இணங்கினார். நாள், இடம், நேரம் ஒதுக்கப்பட்டன. எனினும் சந்திப்புக்கு அரை மணி நேரத்துக்கு முன்னர், விக்னேஸ்வரன் முடியாது என்று கூறிவிட்டார். கூட்டமைப்பின் உயர்மட்டத் தரப்பின் கோரிக்கைக்கு அமையவே அவர் அதனை மறுத்தார்." என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (4)

# மத்தள வானூர்தி நிலையத்தை இனி இருநாடுகளும் இணைந்து இயக்கும்

கொழும்பு, ஜூலை 16

மத்தள வானூர்தி நிலையத்தின்70வீதபங்குகளை இந்தியா கொள்வனவு செய்து, இலங்கைஅரசுடன் இணைந்து நிலையத்தை இயக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பன்னாட்டு வானூர்தி நிலையங்கள்இந்தியாவில் 18 உள்ளன. 7 சுங்க வானூர்தி நிலையங்கள், 78 உள்நாட்டு வானூர்தி நிலையங்கள், 26 இராணுவ ஓடுபாதைகளில் சிவில் போக்குவரத்தை மேற்கொள்ளும்வானூர்தி நிலையங்கள் உள்ளிட்ட, 125 வானூர்தி நிலையங்களை இந்திய வானூர்தி நிலைய அதிகார சபை இயக்கிவருகிறது.

தமது நாட்டுக்கு வெளியே, அனைத்துலக வானூர்தி நிலையம்ஒன்றைஇந்திய வானூர்திநிலையஅதிகார சபை பொறுப்பேற்கவுள்ளது இதுவே முதல்முறையாகும். மத்தள வானூர்தி நிலையத்தின்70வீதபங்குகளைக் கொள்வனவுசெய்யும் இந்திய வானூர்தி நிலையஅதிகாரசபைஅதற்காக 325 மில்லியன் டொலரைமுதலீடுசெய்யும். எஞ்சிய30வீதம்இலங்கை சிவில் வானூர்தி சேவை அதிகார சபையிடம் இருக்கும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவை அமைச்சின்மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 40 ஆண்டுகள் செல்லுபடியாகும் இந்த உடன்பாட்டின்படி, இந்திய வானூர்தி நிலைய அதிகார சபை, மத்தள வானூர்தி நிலையத்தின்முகாமைத்துவத்தை பொறுப்பேற்கும். இதில் இந்திய நிறுவனம் ஒன்று ஈடுபடும். எனினும், வானூர்திகளின் பயணங்களையும், வான் பரப்பை பயன்படுத்துவதுவதையும் இலங்கையே கட்டுப்படுத்தும் என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது. (4)

# போலி நாணயத் தாள்களுடன் கடற்படைச் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூலை 16

போலி நாணயத்தாள்களுடன் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி, பூனாவ பகுதியில் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மின் உபகரண விற்பனை நிலையம் ஒன்றில் 5ஆயிரம் ரூபா மற்றும் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டு என்பனவற்றை வழங்கிப் பொருள்களை கொள்வனவுசெய்ய முயற்சித்த போது, அந்த நாணயத் தாள்கள் போலியானவை என்பதைக் கடை உரிமையாளர் கண்டறிந்தார்.

அது தொடர்பில் கடை உரிமையாளர் மதவாச்சிப்பொலிஸாருக்குஅறிவித்தார். அங்குசென்ற பொலிஸார்சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அவர் கடற்படைச்சிப்பாய். என்றும், ராஜாங்கனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்பதும் தெரியவந்தது.

அவர்அநுராதபுரம்நீதிவான்மன்றில்முற்படுத்தப்பட்டுச்சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

# ஹிட்லர் ஒருவர் ஆட்சிக்கு வந்தால் நாடு எந்தத் திசைக்குச் செல்லும்?

## குமாரவெல்கம எம்.பி. கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 16

நாட்டின் தெற்கில் ஹிட்லர் ஒருவர் ஆட்சிக்கு வந்தால், நாடு எந்தத் திசையை நோக்கிச் செல்லும்? என்று கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வி எழுப்பியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டம் ஒன்று களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஜயகலா வடக்குக்குச் சென்று பிரபாகரன் தேவை என்கிறார். பிரபாகரன் ஜனநாயக தலைவரா? இல்லை அவர் சர்வாதிகாரி. அதேபோல் தெற்கில் உள்ளவர்கள் தமக்கு ஹிட்லர் ஒருவர் வேண்டும் என்கின்றனர்.

வடக்கில் சர்வாதிகாரி ஒருவரைக் கோருகின்றனர். தெற்கில் ஹிட்லர் ஒருவரைக் கோருகின்றனர். இப்படி நடந்தால், நாடு எந்தத் திசையில் பயணிக்கும்? அப்படி நடந்தால், மக்களால் வாழ முடியுமா? இரவில் நித்திரை கொள்ள முடியுமா? - என்றார். குமார வெல்கமவை அரசு பயமுறுத்தி, தனக்குத் தேவையான வகையில் பயன்படுத்துவதாக, கோத்தபாய ராஜபக்சவின் பேச்சாளராகச் செயற்பட்டுவரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் அஜித் பிரசன்ன அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தார். அது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள குமாரவெல்கம, "அஜித்பிரசன்ன ஒரு பைத்தியக்காரன். அவருக்குப் பதிலளிக்கும் தேவை எனக்கில்லை. 5 ஆயிரம் வாக்குகளைக்கூட பெறமுடியாத முழு நாடும் அறிந்த பைத்தியகாரனுடன் நான் ஏன் பேசவேண்டும்" என்றார். (4)

ஊழல் விசாரணைகளுக்கான

# சிறப்பு நீதிமன்றின் அமர்வுகள் இந்த வாரத்திலிருந்து ஆரம்பம்

## இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு எதிரே அமைக்கப்பட்ட இடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 16

ஊழல் விசாரணைக்கென அமைக்கப்பட்ட முதலாவதுசிறப்பு நீதிமன்றம்இந்தவாரத்திலிருந்து செயற்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

அதற்கென இலங்கைச்சட்டக்கல்லூரிக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள ஊழல் விசாரணைக்கான சிறப்பு நீதிமன்றக் கட்டடம் இலங்கைக் கடற்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை நீதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகளைஎடுப்பதில்அரசு உறுதியாக உள்ளது. அதனைத் தொடர்ந்து ஊழல்விசாரணைக்கானமுதலாவது சிறப்பு நீதிமன்றின் பணிகள் இந்தவாரம் ஆரம்பிக்கப்படும். இதே போன்ற மற்றொரு ஊழல் விசாரணை நீதிமன்றம் விரைவில் அமைக்கப்படும்.

தற்போது குற்றச்செயல்கள் கடுமையாகஅதிகரித்துள்ளனஎன்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால் கொலை, வன்புணர்வு மற்றும்கொள்ளைச்சம்பவங்கள் கடந்த அரசின் காலத்தை விடத் தற்போது வெகுவாகக் குறைவடைந்துள்ளன.

அவ்வாறான குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனை வழங்கும் வீதமும் கடந்த அரசின் காலத்தோடு ஒப்பிடுகையில் தற்போது அதிகரித்துள்ளது.

கொலைச் சம்பவங்கள் தொடர்பில்2010ஆம்ஆண்டுதொடக்கம் 2017ஆம் ஆண்டுவ்வரையான காலப்பகுதியில் நோக்குகையில் முறையே 741, 724, 646, 586, 548, 476, 502, 452 என்று பதிவாகியுள்ளன. இந்தக் குற்றங்கள் தொடர்பில் தண்டனை வழங்கப்பட்டுள்ள வீதங்கள் முறையே 86.7, 78.2, 85.3, 89.2, 87, 90.7, 92.8, 93 சதவீதமாக உள்ளது.

அதேபோல் 2010ஆம் ஆண்டு தொடக்கம்2017ஆம்ஆண்டுக்கு இடைப்பட்டகாலப்பகுதியில்இடம்பெற்ற வன்புணர்வு எண்ணிக்கை முறையே 1765, 1775, 2212, 2181, 2008, 2033, 1996, 1732 என்று பதிவாகியுள்ளன. அவற்றுக்குத் தண்டனை வழங்கப்பட்ட வீதங்கள் முறையே 93, 87.3, 93.5, 93.6, 95.2, 95.2, 94.5, 96.2 என்றுள்ளன - என்றார்.

போதைப்பொருள்குற்றச்செயல்களுடன் தொடர்புடையோருக்குத் தூக்குத்தண்டனைவழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரிடம் கேட்ட போது,

அவர் தெரிவித்ததாவது:

போதைப்பொருள்குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்துவதற்குத் தூக்குத் தண்டனை பொருத்தமான தீர்வாக அமையும் என்று நான் கருதவில்லை.

ஆனால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் தூக்குத் தண்டனை நடைமுறையிலுள்ளது. இது பொருத்தமான தீர்வு என்று அரச தலைவர்கருதுவாராயின்எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லைஎன்றார். (4,61)

# நீர்மூழ்கிக் கப்பல்களால் இலங்கைக்கு அச்சுறுத்தல்

## கட்டளைத் தலைமையகம் இனி அம்பாந்தோட்டையில் தலைமை அமைச்சர் ரணில் தெரிவித்துள்ளார்



**கொழும்பு, ஜூலை 16**
**நீர்முழ்கிக் கப்பல்களின் அச்சுறுத்தல்களை எதிர்வரும் காலங்களில் இலங்கைகனதியாகஎதிர்கொள்ளும்நிலை உருவாகவுள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு கடல் பாதுபாப்பைஉறுதிப்படுத்தஅரசுநடவடிக்கைஎடுத்துள்ளதுஎன்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க தென் பிராந்தியப் பாதுகாப்புக் கட்டளைத்தலைமையகம்அங்குமாற்றப் படவுள்ளதாகவும்அவர்தெரிவித்தார்.
பண்டாரநாயக்கபன்னாட்டுஇராஜதந்திரக்கற்கைகள்நிலையத்தில்சிலநாள் களுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர்மேலும்தெரிவித்ததாவது:
இந்து பசுபிக் வலயம் என்று அமெரிக்கா அறிமுகப்படுத்தியதைச் சீனா தவறாக அர்த்தப்படுத்திக்கொண்டது. அதாவது இந்த வலயத்தில் தமது அதிகாரத்தைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட முயற்சியாகவே சீனா இதனைக் கருதுகின்றது. அவ்வாறு எதுவும் இல்லை. எவ்வாறாயினும்சீனா பல்வேறுஉபாயங்களைப்பயன்படுத்துகின்றது. அந்த உபாயத் திட்டங்களுக்குள் இலங்கையும் உள்ளது.
அதாவது அம்பாந்தோட்டைத் துறைமுகத்திட்டம்'சைனாமேர்சன்ட்'நிறுவனம் இலங்கையின் துறைமுக அதிகார சபையுடன் இணைந்து அரச மற்றும்தனியார்கூட்டுமுயற்சித்திட்டமாக்கியது. அதேபோன்றுதான் துறைமுக நகர்திட்டமும். ஆனால்அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் கடற்படைத் தளமாகும் என்ற நிலைப்பாடு பரந்தளவில் காணப்படுகின்றது. அதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை . நாட்டின் பாதுகாப்பு இலங்கை அரசிடமே காணப்படுகின்றது.
சீனாவுடனான ஒப்பந்தத்தில் இந்த விடயம்மிகத்தெளிவாகஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனைச்சீன அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயப்பிரிவு. உள்நாட்டு வெளிநாட்டு கட்டுப்பாடு மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புக்களும் இலங்கை வசமே காணப்படுகின்றன.
அதேபோன்று காலியில் உள்ள கடற்படைக் கட்டளைத் தலைமையகம் அம்பாந்தோட்டைத்துறைமுகத்துக்கு மாற்றப்படவுள்ளது.
மறுபுறம்நீர்மூழ்கிக்கப்பல்களால்ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் குறித்து இலங்கை கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு அமைவாகக் கடற்படை சிறப்புப்பாதுகாப்புநடவடிக்கைகளைமுன்னெடுக்க வேண்டியதன் தேவை குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுக நடவடிக்கைகளைக் கண்காணிக்க ரோந்துப் படகுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவேஅம்பாந்தோட்டைத்துறைமுகத்தைப்பாதுகாப்புத்தளமாகப் பயன்படுத்தச்சீனாவுக்குச்சந்தர்ப்பம்கிடையாது.
மத்தள வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை இந்தியாவுடன் இணைந்து செயற்படுத்த உத்தேசித்துள்ளோம்.
எனவே சீனாவுக்குத்தான் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது என்று இனி யாராலும் குற்றஞ்சாட்ட முடியாது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் மத்தள வானூர்தி நிலையத்தின் ஊடாகக் கூடிய பொருளாதார நிறைவுத் தன்மையை அடைய முடியும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.
2014ஆம் ஆண்டு மகிந்த ஆட்சிக் காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்துக்குஇரண்டு தடவைகள் வந்திருந்தன.
இது தொடர்பில் ஆட்சியிலிருந்த மகிந்தஅரசிடம், குறிப்பாகஅதன்பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் இந்தியா கடும் அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,61)

## மகிந்த நிதி பெற்ற விவரங்களை அடுத்த வாரம் வெளியிடுவோம்

### ஜே.வி.பி. கூறுகிறது

கொழும்பு, ஜூலை 16
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்குச் சீனா நிதி வழங்கியது தொடர்பான தகவல்களை அடுத்தவாரம்வெளியிடுவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. குறித்ததகவல்உள்ளடங்கியஆவணங்களைஆதாரத்துடன் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். மஹரகமவில் இடம்பெற்றநிகழ்வொன்றில்நேற்றுமுன்தினம்உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (4)

## பொருள்கள் திருட சென்றவர் அங்கேயே ஆழ்ந்து உறங்கினார்

### மழை வந்ததால் மாட்டினார்


கொழும்பு, ஜூலை 16
விகாரைக்குள்சென்றுதிருடியதிருடன், பொருள்களுடன் அங்கேயே உறங்கிவிட்டான். மறுநாள் பிக்கு கதவைத் திறந்தபோது உறக்கத்திலிருந்து விழித்த திருடனும் மற்றும் பிக்குவும் ஒருவரையொருவர் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
கண்டி, கட்டுகஸ்த் தோட்டையிலுள்ள விகாரையில் சிலநாள்களுக்கு முன்னர் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
திருடன் வழிபாட்டு நிலையத்தின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்துள்ளான். அங்குள்ள உண்டியலை உடைத்து அதிலிருந்த ஏராளமான பணத்தை எடுத்துக்கொண்டு வெளியேற முயன்றான். அந்தநேரம் கடும் மழைபெய்துள்ளது. மழை நின்றபிறகு போகலாம் என்று அங்கு ஓரமாகஅமர்ந்துள்ளான். ஆனால் அவனையறியாமலேயே நித்திரை ஆட்கொண்டுவிட்டது.
இந்தநிலையிலேயே மறுநாள் காலையில் பிக்குவைக் கண்டதும் திருடன் விழித்துள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது.
பின்னர் பிக்குவின் கால்களில் வீழ்ந்து திருடன் மன்னிப்புக் கோர பணம் திருட்டுப் போகவில்லை என்பதால் பிக்கு அவனை மன்னித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## விபத்து ஏற்படுத்தினால் கொலைமுயற்சி வழக்கு

### போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 16
பயணிகள் அதி வேகமாக வாகனங்களைச் செலுத்தி விபத்துகளை ஏற்படுத்தி உயிராபத்துமற்றும்பெரும் உடல் பாதிப்புகளை ஏற்படுத்தும்வாகனசாரதிகளுக்கு எதிராகநடவடிக்கைஎடுக்க புதிய சட்டமூலமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
போக்குவரத்து அமைச்சர் நிமல்சிறிபாலடிசில்வா இதனைத் தெரிவித்துள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.
இதற்கமைய அதிவேகமாக வாகனங்களைச் செலுத்திவிபத்துக்குள்ளாக்கும் சாரதிகளைப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யாமல், பயணிகளைக் கொலைசெய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் உரிய சட்டத்தின் கீழ் கைதுசெய்து சாரதிகளுக்கு ஆயுள்தண்டனை வழங்குவதற்கானஏற்பாடுகளைச் செய்யுமாறு அமைச்சர்பணித்துள்ளார்.
அண்மையில் தென்பகுதியில் கொரக்கலவில் நடந்த விபத்தொன்றில் சாரதிகள் இருவரின் கவனவீனமே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.
அதில் இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் 60 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)




## எரிபொருள் அதிகரிப்பால் மீனவர்கள் பெரும்பாதிப்பு

### அகில இலங்கை மீன்பிடியாளர் சங்கம் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 16
எரிபொருள் விலை அதிகரிப்பால்நாட்டிலுள்ளமீனவர்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். இதற்கு நியாயமான தீர்வொன்றை வழங்க அரசு தவறும் பட்சத்தில் நாடு முழுவதும் தொடர் எதிர்ப்புநடவடிக்கையைமுன்னெடுக்கவேண்டிவரும்.
இவ்வாறு அகில இலங்கை மீன்பிடிப் படகுகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சுஜித் சமந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நாடு முழுவதும் 4ஆயிரத்து 650 மீன்பிடிப் படகுகள் காணப்படுகின்றன. அரசின் திடீர்எரிபொருள்விலைஅதிகரிப்பால் படகுகளின் உரிமையாளர்கள் பெரும் நெருக்கடிக்குமுகங்கொடுத்துள்ளனர் என்றுஅவர்மேலும்தெரிவித்தார். (4)

## தேசிய ஏற்றுமதித் திறனை மேம்படுத்த ரணில் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 16
தேசிய ஏற்றுமதி வினைமுறைத் திறனை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்குச் சந்திப்பொன்று எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இது இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சந்திப்பை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பன்னாட்டு வர்த்தக அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜெனிவாவிலுள்ள பன்னாட்டு மைய நிலையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.
இந்தச் சந்தப்பின் போது எதிர்வரும் ஐந்து வருட காலப் பகுதிக்குள் இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

### காணாமற்போனோர் பணியகத்தினர்

# பொய்வாக்குறுதிகளை வழங்கி உறவுகளை ஏமாற்ற வேண்டாம்

### லங்கா சமசமாஜக் கட்சி கோருகிறது



**கொழும்பு, ஜூலை 16**
**காணாமற்போனோர் பணியகத்தினர் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி காணாமற்போனோரின் உறவினர்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமற்போனோர் பணியகம் கடந்த காலங்களில் பலரது எதிர்ப்புக்களுடனேயே ஆரம்பிக்கப்பட்டது. இது வரை காலமும் எந்தவித அரசியல் தலையீடுகளுமின்றிச் சுயாதீனமாகவே செயற்பட்டுவருகின்றது. இதுரை எந்தவித திருப்திகரமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகவே பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த பணியகத்தைப் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர்.
தற்போது தேசிய அரசால் உருவாக்கப்பட்டுள்ள காணாமற் போனோர் பணியகம் முற்றிலும் மாறுப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதாவது மேற்குலக அழுத்தங்களின் காரணமாகவே குறித்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆணைக்குழுக்களைவிட இதற்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
ஆகவே காணாமற்போனோர் பணியகத்தினர் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உறவுகளின் உணர்வுகளைக் கேலிக்கூத்தாக்க வேண்டாம்.
பாதிக்கப்பட்ட மக்கள் நியாயங்களை வேண்டி நிற்பது ஏற்றுக் கொள்ள கூடியது.
எனவே பொய்யான வாக்குறுதிகளைக் குறிப்பிட்டு காணாமற்போனோரின் உறவினர்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம் - என்றார். (4)

## தூக்குத் தண்டனை குறித்து ஐ .நா வில் கேள்வி

தூக்குத் தண்டனையை நிறைவேற்ற இலங்கை முன்னெடுத்துள்ள தீர்மானம் குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ. நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படவுள்ளது. தூக்குத் தண்டனையை நீக்குவதாக இலங்கை அரசு கடந்த 2015 செப்டம்பர் மாதம் நடந்த ஜெனிவா மாநாட்டில் வாக்குறுதியளித்திருந்தது.
இதனால், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள மாநாட்டில், இந்த வாக்குறுதியை மீறியமை தொடர்பில் காரணம் முன்வைக்க இலங்கை நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.
தூக்குத்தண்டனையை நிறைவேற்ற இலங்கை எடுத்துள்ள தீர்மானத்துக்கு பன்னாட்டு ரீதியிலுள்ள ஐந்து மனித உரிமைகள் அமைப்புக்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலிருந்து இந்தியா செல்லக்கூடிய போலி நுழைவுவிசைவுகளை தமிழகத்தில் விற்றோர் கைது

கொழும்பு, ஜூலை 16
தமிழ்நாட்டில் போலி வானூர்திக் கடவுச்சீட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த இரு இலங்கையர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
இலங்கையர்கள் இந்தியர்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் வகையில் குறித்த கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன.
இது தொடர்பில் 11 சந்தேகநபர்கள் ஏற்கனவே இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
10 இலட்சம் ரூபா செலவில் குறித்த கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன.
இந்தச்சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இரு இலங்கையர்களும் சுற்றுலா நுழைவு விசைவுமூலம் தமிழ்நாட்டுக்கு வருகைதந்து, வெளிநாடு செல்வதற்காகப் போலி நுழைவு விசைவுகள் கிடைக்கும்வரை வீடொன்றில் தங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சட்டவிரோத நடவடிக்கைக்கு இலங்கையிலுள்ள சிலர் உதவி வருகின்றனர்.
சுற்றிவளைப்பின்போது, இந்திய நுழைவுவிசைவுகள் - 77, இலங்கை நுளைவுவிசைவுகள் 12 மற்றும் இவற்றைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (4)

## தூக்குத் தண்டனைதான் ஒரே வழி மைத்திரியின் தீர்மானம் சரியானதே

### சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16
'இலங்கையில் போதைப்பொருள் பாவனை மற்றும் வர்த்தகத்தை முற்றாக ஒழிக்கும் நோக்கில் தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசதலைவர் தீர்மானித்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இந்தத் தண்டனையே போதைப் பொருளின் கோரப் பிடியிலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றும்.
இவ்வாறு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவப் பிரதி அமைச்சர் பைஸல் காஸிம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:
இந்தத் தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டதாக இல்லாமல் நாட்டின் எதிர்காலம் மீது அக்கறை கொண்டதாக இருக்கவேண்டும். இதன்மூலம் போதைப்பொருள் வர்த்தகமும் பாவனையும் முற்றாக ஒழிந்து நாடு நிச்சயம் வளம் பெறும்.
இந்த நாட்டின் உண்மையான மனிதர் என்ற வகையிலும், சுகாதாரப்பிரதி அமைச்சர் என்றவகையிலும் போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்கம் கொண்ட மனிதர்களைக்கொண்ட நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், அந்த விருப்பம் நிறைவேறுவதாக இல்லை. இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகம் கொடிகட்டிப் பறப்பதைத் தினமும் வெளியாகும் செய்திகள் மூலம் அறிய முடிகின்றது.
இதனால் ஒரு சிலரின் பண ஆசைக்காக முழுநாடுமே சீரழிகிறது. இதன் பாவனையால் பாடசாலை மாணவர்கள் சீரழிகின்றனர். குடும்பங்கள் சீரழிகின்றன. கொலை, கொள்ளை மற்றும் வன்புணர்வுகள் இடம்பெறுகின்றன. போதைப்பொருள் பாவனையால் நிகழ்கின்ற அத்தனை குற்றங்களையும் நிறுத்த வேண்டுமென்றால் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உறுதியான முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.
தினமும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான போதைப்பொருள்களும் சிக்குகின்றன. போதைப் பொருள் வர்த்தகர்களும் கைது செய்யப்படுகின்றனர். இருந்தாலும், இதன் பாவனையும் வர்த்தகமும் குறைந்ததாகத் தெரியவில்லை. இதைக்கட்டுப்படுத்துவதற்கு இதுவரை உறுதியான நடவடிக்கை எடுக்காமையே இந்த நிலைமைக்குக் காரணம்.
கைதுசெய்யப்படுகின்ற போதைப் பொருள் வர்த்தகர்கள் கூட சிறையில் இருந்துகொண்டு வர்த்தகத்தைத் தொடரும் அளவுக்கு நிலைமை மிக மோசமாக மாறியுள்ளது. நிலைமை இப்படி இருக்கும்போது எப்படி போதைப் பொருள் வர்த்தகத்தை ஒழிப்பது?
உண்மையில், இதை முற்றாக ஒழிக்க வேண்டுமென்றால் தூக்குத் தண்டனைதான் ஒரே வழி. இதைவிட வேறு மார்க்கம் இல்லை. இதை அரசதலைவர் தாமதித்தாவது விளங்கி இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.
இனி போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கும் ஏற்கனவே ஈடுபட்டு சிறையில் இருப்பவர்களுக்கும் தூக்குத்தண்டனை வழங்குவதற்கு அரசதலைவர் தீர்மானித்திருப்பது பாராட்டுக்குரியது.
இந்தத் தீர்மானம் உண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு வளம்பெறும். எமது இளைய சந்ததியினர் பேரழிவில் இருந்து தப்பித்துக்கொள்வார்கள். இந்தத் தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டதாக இல்லாமல் நாட்டின் நலன் மீது அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும்.
எமது ஆதரவு அரசதலைவருக்கு நிச்சயம் உண்டு. இந்தத் தீர்மானத்தை அவர் கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டும் - என்றார். (4)

## வழக்கில் குற்றவாளி தப்பினாலும் நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 16
குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் இரு கருத்துக்கள் கிடையாது. ஆனால், நிரபராதி தண்டிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.
போதைப்பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிப்பது தொடர்பில் அரசதலைவர் கருத்துவெளியிட்டுள்ளார்.
அது தொடர்பில் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது:
இன்று பெரும்பாலும் நடைபெறுவது நிரபராதி தண்டிக்கப்படுவதாகும். குற்றவாளி சரியாக இனம்காணப்பட வேண்டும். இதில் தவறு விடக்கூடாது.
எந்தவொரு குற்றவாளியும், தான் செய்யும் தவறைச் செய்துவிட்டு தப்பிவிடும் ஒரு சம்பிரதாயம் நாட்டில் உருவாகியுள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றார். (4)

## சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தத்தால் அங்கிருந்து தலையீடுகள் வருமா?

### நாடாளுமன்றில் நாளை விவாதம்

கொழும்பு, ஜூலை 16
சிங்கப்பூருடன் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நாடாளுமன்றில் நாளை விவாதம் நடைபெறவுள்ளது.
இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம் சிங்கப்பூரில் வசிப்போரின் அத்துமீறிய தலையீடுகள் இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.
இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடத்தி வருகின்றன. இந்த நிலையிலேயே இது தொடர்பான விவாதம் நாளை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது (4)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பொன்னம்பலம்



மலர்வு 15.11.1939 | உதிர்வு 14.07.2018

யாழ். பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னம்பலம் கடந்த (14.07.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி வள்ளியாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சிவமூர்த்தி (சுவிஸ்), சிவநேசன்(சுவிஸ்),சிவறஞ்சினி (ஜேர்மனி),சிவறஜனி(இலங்கை) ஆகியோரின் பாசமிகுதந்தையும், நந்தகுமார் (ஜேர்மனி), பத்மநாதன் (நிலஅளவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்), பாமினி (சுவிஸ்), தயாளினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்ற சீனிவாசகம் மற்றும் கிருஸ்ணமூர்த்தி, சறோஜா காலஞ்சென்ற ஆறுமுகசாமி, மற்றும் தேவமலர், பேரின்பநாதன் (பிரான்ஸ்), தேவராஜா (கண்ணன், நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவஜன், பானுஜா, சிந்துஜன், சிலோஜன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், நிரோஜன், நிதுஷன், நிரூபன் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2018) திங்கட்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருவடிநிலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 539 1425**

**பண்ணாகம் தெற்கு,**
**சுழிபுரம்.**

### தவறிவிட்டது

கந்தவனம் நாகேந்திரன். என்பவரது 582352445V எனும் இலக்கமுடைய இலங்கை IC மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும் கோண்டாவில் டிப்போ அன்னாங்கை ஆகிய இடங்களுக்கு இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டு எடுத்துத் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P. - 076 311 4529, 075 777 0431

### வீடு வாடகைக்கு

பலாலி வீதி, கந்தர்மடத்தில் 266 1/1 இலக்க உள்ள மேல்மாடி வீடு சமையலறையுடன் இரண்டு அறைகளும் இரு குளியல் அறைகளும் வரவேற்பு அறையுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு - 077 3013236

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவஞானசோதி (ஞானம்)



தோற்றம் 12.01.1946 | மறைவு 15.07.2018

யாழ். மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் மடத்தடி வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவஞானசோதி நேற்று (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மதன்ராஜ் (லண்டன்), சுதர்சினி (வவுனியா), சுகன்யா (கொழும்பு), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விசாலாட்சி, சிவபாக்கியம், வேதநாயகி, மகேஸ்வரன், பரமேஸ்வரன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிந்தி (லண்டன்), ஸ்ரெனி, கணேசன், சுரேன் ஆகியோரின் மாமனாரும் றோமியோ, றோஸ், சலோமியா, சிவியா, சப்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2018) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் வவுனியா, தெக்கிலுப்பைக்குளம் முதலாம் ஒழுங்கையில் உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தெக்கிலுப்பைக்குளம்,**
**முதலாம் ஒழுங்கை, வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 345 0685, 024 222 7310**

(CS 18273/15/17)

தோற்றம் 20 . 04 . 1952



மறைவு 13 . 07 . 2018

### மூளாசாரிகே பியசேனா (தாத்தா)

**(உரிமையாளர் - காமினி பேக்கரி, கொழும்புத்துறை)**

குருநாகல் கொபேகனவைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மூளாசாரிகே பியசேனா (தாத்தா) 13.07.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2018) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி ,மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் சகோதரர்கள்**

**இல.18, ஆனந்தன்வடலி வீதி,**
**கொழும்புத்துறை.**

(CS/18270) (11.17)

**077 992 8426, 076 563 3853**



### திருமதி பூங்கோதை சபாரத்தினம்

கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூங்கோதை சபாரத்தினம் 13.07.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அ.கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அ.கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பிரபல தொழிலதிபர் A.K. சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் யசோதா (கனடா), யசோதரன் (யசோ K.S.Y. மோட்டர்ஸ், சாவகச்சேரி), விஜிதா (கனடா), வனிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணமோகன் (கனடா), சுகல்யா, செந்திலாதன் (செந்தி - தமிழன் வழிகாட்டி, கனடா), சிவநேசன் (பணிப்பாளர் - நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராதாதுலக்ஷி, ஆதவன், மீரா, பிரணவி, இராகவி, ஸ்ரீகவி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான பகவதி, இராமலிங்கம், கனகசுந்தரம், லீலாவதி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற A.K.சுந்தரம் மற்றும் A.K.துரைரத்தினம், நாகரத்தினம், காலஞ்சென்ற A.K.இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பூம்பொழில்,**
**முதலாம் ஒழுங்கை,**
**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
A.K.சபாரத்தினம் (AKS) : 0213219225,
யசோ (K.S.Y.) : 077 547 4188, யசோதா : 001416 875 1342,
விஜிதா : 001416 716 8989, வனிதா : 077 8010054

(C7294/17)

# போதைப் பாவனையால் கலாசாரம் அழிகின்றது

அதன் இருப்பை உறுதிசெய்ய சரவணபவன் எம்.பி. அழைப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 16

போதைப்பொருள்பாவனைகளால்இன்றுஎமது கலாசாரம் திட்டமிட்டுப் படிப்படி யாக அழிக்கப்பட்டு வருகிறது. இதனை மீட்டெடுக்க நாம் ஒவ்வொருவரும்போராடவேண்டும்என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்றஉறுப்பினர்ஈஸ்வரபாதம்சரவணபவன்.

மருத்துவரும் பரதக் கலைஞருமான ஜெயலக்ஸ்மி யுதிஸ்ரனின் பரதநாட்டிய நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதிக் கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறுதெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது: "மருத்துவராகஇருந்தபோதிலும்பரதத்தில் தான் கொண்டிருக்கும் அளவற்ற பற்றின் காரணமாக ஜெயலக்ஸ்மி யுதிஸ்ரன் இன்று அற்புதமான விருந்தொன்றை எமது கண்களுக்குத் தந்துள்ளார். எமது கலாசாரத்தைப் பறைசாற்றும் வகையில் அமைந்தது இந்த பரத நிகழ்வு.

இன்று எமது கலைகளும், கலாசாரமும் படிப்படியாக அழிக்கப்பட்டுக் கொண்டு செல்கின்றன. போதைப் பொருள்களால் எமது கலாசாரம் திட்டமிட்டுஅழித்துச்செல்லப்படுகிறது.

அனைவரும் அதை நன்கு அறிவார்கள். இதை மாற்றுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். ஒரு மருத்துவராலேயோ அல்லது அரசியல்வாதியாலேயே இந்தமாற்றத்தைத்தனித்து நின்றுகொண்டுவர முடியாது. அனைவரும் ஒன்றுதிரண்டாலேயே இது சாத்தியம்.

போதைப்பொருள்பாவனையையும், கடத்தலையும் கட்டுப்படுத்த பொலிஸார் முன்வர வேண்டும். ஆனால் அவர்கள்எமக்குஎதிராகத்தான்வேலை செய்துகொண்டிருக்கிறார்களோஎன்று எண்ணத்தோன்றுகிறது.

இத்தகைய பெரும் கலாசார அழிவில் இருந்து எமது (கலாசார) இருப்பை உறுதிப்படுத்தும் பங்கு கலைஞர்களுக்கு அதிகம் உண்டு. ஆம், ஜெயலக்ஸ்மிபோன்றவர்களுக்குஉண்டு. நான்கல்விகற்றகாலத்தில்சுப்பையா மாஸ்டர்என்றுஒருவர்இருந்தார்.அன்றைய காலங்களில் அவர் பிரபல்யம் பெற்றவர். ஒவ்வொரு மாசமும் ஏதாவது அரங்கேற்றங்கள், கோயில்கள் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கும். அவற்றைப்பார்க்கஎத்தனையோ பேர் வருவார்கள். ஆனால் இன்று அப்படியே தலைகீழாக அனைத்தும் மாறிவிட்டன. இரசனைகுறைந்ததால் இப்படியான நிகழ்ச்சிகள் குறைவாக உள்ளனவா அல்லது நிகழ்ச்சி குறைவால் இரசனைகள் குறைகின்றதா என்றுஎண்ணவேண்டியுள்ளது. கலாசார நிகழ்வுகளை நடத்த கலாசார பணியாளர்கள் முன்வர வேண்டும். கலாசார அழிவைக் குறைக்க வேண்டும். அதன் இருப்பை உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

நிகழ்வுக்குமதிப்புறுஅதிதிகளாகயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முன்னாள் மூத்த மருத்துவ நிபுணர்களானகணேசமூர்த்திதம்பதிகள் கலந்து கொண்டனர். (ஏ-113)



## போதைப்பொருளுக்கு எதிரான செயற்றிட்டங்கள் ஆரம்பிப்பு

வலி.கிழக்கில் பிரதேச சபை நேற்றுக் களத்தில்

வலிகாமம், ஜூலை16

'போதையற்ற கிராமத்தை அமைப்போம்' எனும் தொனிப்பொருளில்வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின், போதைப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்றுக் காலைஞாயிற்றுக்கிழமை அச்சுவேலியில்ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த பிரதேச சபைக் கூட்டத்தில், போதையை ஒழிப்பதற்கானசெயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி கதைக்கப்பட்டது.

இதன்போது, முதலில்வலிகாமம் கிழக்குப் பிரதே சத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்றான அச்சுவேலியை மையப்படுத்தியும் அதனைத் தொடர்ந்து காலப்போக்கில்ஏனையகிராமங்கள்தோறும்விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையிலேயே நேற்றுக் காலை அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு முன்பாகப் போதைப் பொருளுக்கு எதிரான செயற்றிட்டங்கள் ஆரம்பமாகின.

அச்சுவேலிநகரில்சிலமணி நேரங்கள்விழிப்புணர்வுப் பதாகைகளுடன் கூடிய பிரதேச சபையின் ஊர்திகள் போதைக்குஎதிரானவிழிப்புணர்வு வாசகங்களை ஒலிபெருக்கி ஊடாக அறிவிப்புச் செய்தவாறு நகர் வலம்வந்தன.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்எனப்பலதரப்பட்டவர்களும் போதைக்கு எதிரான சுலோகங்களுடன் போதைப்பொருள்பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அணிவகுப்புச் செய்தனர். அச்சுவேலி நகரின்வீதிகள்வழியாகப்பேரணியாகச் சென்ற விழிப்புணர்வாளர்கள்பொதுஇடங்கள், தனியார்கல்வி நிலையங்கள்,சந்தைஎனமக்கள் கூடும் இடங்கள் தோறும் சிறுசிறுபரப்புரைக்கூட்டங்களை நடத்தியதுடன் துண்டுப்பிரசுரங்களையும்வழங்கினர்.

நிகழ்வுகளில் அச்சுவேலி பொலிஸாரும்ஒத்துழைப்பு வழங்கினர். (ஏ)

வடக்கு கல்வி அமைச்சின்

## நடமாடும் சேவைகளை பெறுவதில் இடர்பாடு

வவுனியா மாவட்ட பணியாளர்கள் கவலை

யாழ்ப்பாணம் ஜூலை16

வடக்கு மாகாணத்தில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் பணியாளர்களுக்காக இடம்பெறவுள்ள நடமாடும் சேவை மிகவும் பயனுடையதாக உள்ள போதும் குறித்த சேவைகளைப்பெறுவதில்சிரமம்ஏற்பட்டுள்ளதாகவவுனியாமாவட்டப்பணியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கில் 'பணியாற்றும்அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாராஊழியர்களின் நிர்வாக அலுவலகக் குறைகளைக் களைந்து கல்வியின் வினைத்திறனை மேம்படுத்தும்வகையில்மாபெரும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

எதிர்வரும்19ஆம்திகதிதொடக்கம்ஓகஸ்ட்மாதம்2ஆம்திகதி வரை வடக்கு மாகாணத்தின் அனைத்து வலயங்களிலும் தனித்தனியே அந்தந்தவலயக்கல்விஅலுவலங்களில்இடம் பெறவுள்ளது. இதனடிப்படையில் வவுனியாவடக்கு மற்றும் வவுனியா தெற்கு வலயங்களுக்கு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை8 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறவுள்ளது.

வார இறுதிநாளான சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டதே சேவைகளைப் பெறுவதில் சிரமத்துக்கான காரணம் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து பணிபுரியும் பணியாளர்கள், வார இறுதிகளில் தம் மேற்படிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இதனால் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் கேட்பதற்காக வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு உதயன் தொடர்பை ஏற்படுத்தினான். எனினும் அமைச்சர் பதிலளிக்கவில்லை. (ஏ-8)

## சிறுவர் துர்நடத்தைகளுக்கும் தூக்குத் தண்டனை வேண்டும்

அனந்தி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை16

சிறுவர் துர்நடத்தைகளை மேற்கொள்கின்றவர்களுக்கும் தூக்குத் தண்டனையைநடைமுறைப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான முடிவுக்கு அரசு வந்துள்ளது. அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனஇதற்கானகையொப்பம்இடுவதற்குத்தயாராகஇருப்பதாகவும், அமைச்சரவை அதற்கான அனுமதியைவழங்கியுள்ளதாகவும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.இதனை நாம்வரவேற்கின்றோம்.

போருக்குப்பின்னரானநிலமையில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதோடு போதைப் பொருள் கடத்தல்களும், வர்த்தகங்களும் தாராளமாகியுள்ளன. இதற்கானசூத்திரதாரிகள் தற்போது வரையில் இனங்காணப்படாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஒன்றரை இலட்சம் இராணுவம் வடக்கில் தங்கியிருக்கின்றபோதும் போதைப்பொருளுடன் தொடர்புடைய தாராளமான செயற்பாடுகள்



இடம்பெற்று வருகின்றமை எமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே அதுதொடர்பிலும்அரசு கவனம் எடுக்க வேண்டியது அவசியம்.

வடக்கு மாகாணத்தில் சிறுவர் வன்புணர்வுச் செயற்பாடுகள் போரின் பின்னரான காலத்தில் அதிகரித்துள்ளன. வித்தியா, றெஜினா போன்ற சிறுமியர்களின் கொலைகள் வடக்கை மட்டுமல்ல உலகத்தினையே உலுக்கியுள்ளவையாக இருக்கின்றன. இவ்வாறான சம்பவங்கள்எதிர்காலத்தில்நடைபெறாது தடுப்பதற்குச் சட்டங்கள் கடுமையானவையாகஇருப்பதோடுஅவற்றை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்தப்படவேண்டும். நீதி அமைச்சரும் ஒரு பெண்ணாக இருப்பதால் இந்த விடயத்தை அவர் நன்கு புரிந்து கொண்டுநடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்றுகேட்டுக்கொள்கின்றேன்-என்றுள்ளது. (ஏ-8)

## மாகாண சபை உறுப்பினரின் தாயாரின் வீட்டில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை16

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தனின் தாயாரின் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் தந்தையாரைத் தாக்கி நகை, பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணம், குடத்தனையில் உள்ள குறித்த உறுப்பினரின் பெற்றோர்வீட்டினுள்நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டில்இருந்தஉறுப்பினரின்தந்தையார் மீது தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் வீட்டினுள் சுமார் 45 நிமிடங்கள்தேடுதல்நடத்தி, தாயாரின் நகைகள் 6 பவுண் மற்றும் உண்டியலில்சேர்த்தசுமார்40ஆயிரம்பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்த மூன்று கையடக்க அலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஏ-37,26)

# மன்னாரை இலக்கு வைத்துள்ள டெங்கு

## பாதிக்கப்படுபவர்களின்எண்ணிக்கை கிடுகிடு என உயர்கிறது



யாழ்ப்பாணம், ஜூலை16

டெங்கு நோயின் தாக்கம் இலங்கையின் பல மாவட்டங்களில்மிகவும்குறைவடைந்து காணப்படுகின்றபோதும் மன்னாரில் அதிகரித்தே காணப்படுகிறது. கடந்த 13ஆம் திகதி வரையானசுகாதாரஅமைச்சின் புள்ளி விவரமே இவ்வாறு சுட்டு கின்றது. டெங்கு நுளம்பு திடீரென அந்த மாவட்டத்தில் அதிகரிக்க காரணம் என்ன என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

டெங்குபாதிப்புத்தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் அறிக்கைவெளியிட்டதினமே மன்னாரில் மாணவி ஒருவர் டெங்குவின் தாக்கத்தால்உயிரிழந்திருந்தார்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய்விஞ்ஞானப் பகுதியினரால் டெங்கு நோய்த் தொற்று தொடர்பாக ஜூலை மாதத்தில் கடந்த 13ஆம் திகதி வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்திலே மன்னாரில் டெங்குவின் தாக்கம் அதிகரித்தது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில்மிகமோசமாகக் காணப்பட்டு பல உயிர்களைக் காவு கொண்ட டெங்கு நோயின் தாக்கம் ஜனவரியில் அதிகரித்து அடுத்தடுத்த மாதங்களில் குறைவடைந்து கடந்த மூன்று மாதங்களில் நாட்டில்சடுதியாகக்குறைந்தது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களிலும் அவ்வாறானதொரு நிலையே காணப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் 86 பேரும், கிளிநொச்சியில் 18 பேரும், மன்னாரில் 5 பேரும், வவுனியாவில்24பேரும், முல்லைத்தீவில் 4 பேருமென 137பேரும், அடுத்த மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில்100 பேரும், கிளிநொச்சியில் 20 பேரும், மன்னாரில் 2 பேரும், வவுனியாவில்24பேரும், முல்லைத்தீவில் 4 பேருமென 150 பேரும் டெங்குநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை ஜனவரி, பெப்ரவரி மாதங்களைக் காட்டிலும் குறைவானதாகவே இருந்தது. வடக்கு சுகாதாரப் பிரிவினரின் அளப்பெரிய செயற்பாடே நோயைவிரட்டியதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தநிலையில் அனைத்துப்பொய்த்துவிட்டதைப்போன்றுஇந்தஜூன் மாதத்தில்டெங்குவின்தாக்கம் அதிகரித்தது. வடக்கு மட்டுமல்லாது இலங்கை முழுவதும் டெங்கு தனது ஆதிக்கத்தைப் பரப்பியது.

ஜூன்மாதம்இலங்கையில் 5ஆயிரத்து133பேர் பாதிக்கப்பட்டிருந்தனர் என்று புள்ளிவிவரங்கள்தெரிவித்தன. சுகாதாரப் பிரிவினருடையநடவடிக்கைகளையும் தாண்டி டெங்கு உருவெடுத்துள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. ஜூன்மாதம் யாழ்ப்பாணத்தில் 439 பேர்பாதிக்கப்பட்டனர். இது மே மாதத்துடன் ஒப்பிடும் போதுநான்குமடங்காகும். எனினும்ஜூன்மாதம்வடக்கின் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சியில் 45பேரும், முல்லைத்தீவில்10பேரும், வவுனியாவில் 89 பேரும், மன்னாரில்9பேரும்பாதிக்கப்பட்டிருந்தனர். மன்னாரில் நோயின் தாக்கம் மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது. இலங்கையிலேயே டெங்கு நோயாளர்கள் குறைந்த மாவட்டமாக மன்னார் காணப்பட்டது. எனினும் கடந்த 13ஆம்திகதிவரை12பேர் அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார். இது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மாதம் அதிகரித்த டெங்கு இந்த மாதம் அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்படுத்தப்படும் நிலையில் மன்னாரில் தலைவிரித்தாடுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் சுகாதாரப் பிரிவினர் மீண்டும் தங்களது பணியைச் செவ்வனே செய்து டெங்கு நோயை இல்லாதொழிக்க வேண்டும் என்று பொது மக்கள் தெரிவித்தனர். (21)

# சிறப்புத் தேவைக்குட்பட்டவர்களுக்கு இருக்கும் தாழ்வு மனப்பாங்குகளை துடைத்தெறியுங்கள்!

## மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**தலைமன்னார் ஜூலை 16**

**சிறப்புத்தேவைக்குட்பட்பட்டவர்களுக்குஇருக்கும்பிரச்சினை, இயலாமை அல்ல மனதில் ஏற்படும் தாழ்வு மனப்பாங்கே. இவர்களை சமூக மட்டங்களுக்கு அழைத்துவந்து இவர்களின் திறமைகளை வெளிக்கொணரும்போது அவர்களுக்கு மன மகிழ்வு ஏற்பட வாய்ப்பு உருவாகும். எனவே நாம் அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மாவட்டச்செயலர்சீ.ஏ.மோகன்ராஸ். மன்னாரில் சிறப்புத்தேவைக் குட்பட்டவர்களுக்கான விளையாட்டிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதேஇவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுவாக சிறப்புத்தேவைக்குட்பட்டவர்கள் என கூறப்படுபவர்கள் திறன் மிக்கவர்கள். சாதாரண திறனாளிகளை விட இவர்கள் திறமையானவர்கள். இவர்கள்எம்பொழுதுமேதங்கள் விடயங்களில் மிகவும் கவனமாகவே இருப்பார்கள். இவர்களுடன் நாம் பழகிப்பார்த்தால் இது நன்கு புரியும்.

இந்தவிளையாட்டுப்போட்டியின்போதுகூட சிறப்புத்தேவைக்குட்பட்டவர் ஒருவர் ஒரு விடயத்தை எங்களுக்கு தெளிவுபடுத்தினார். ஆனால்எம்மால்முதலில் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பிறகு வேறொருவர்தான் எங்களுக்கு புரிய வைத்தார். போட்டியில் கதைக்க முடியாத ஒருவரையும் கால் இயலாத ஒருவரையும் ஒரே நேரத்தில் ஓட விட்டது தவறு என்பதே அது.

இதிலிருந்து, இவர்கள் எவ்வாறு நுட்பமாகபுரிந்துகொள்ளுகின்றனர்என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும் இவர்களை நாம் அரவணைத்துச் செல்லும்போது அவர்கள் மனதால் மிகவும் திடம் பெறுகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளை நடத்தும் போதுதான் நாம் இவர்களை நல்வழிக்கு இட்டுச்செல்ல முடியும். தங்களுக்கும்சமூகமதிப்புக்கிடைக்கின்றது என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றும்.

சிலர் பிறப்பால் இந்த நிலையை அடைந்திருப்பர். இன்னும் சிலர் போரால் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருப்பர். இவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் நாம் இவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும்.

சிறப்புத்தேவைக்குட்டவர்களுக்கென தனியானநிறுவனங்கள்இயங்குகின்றன. மன்னாரிலும் 'மாடப்' என்ற நிறுவனம் இயங்குகின்றது. இவர்களுக்கென வெளிநாடுகளிலிருந்தும் பலர் உதவி செய்யத் தயாராக இருக்கின்றனர். ஆகவே எதிர்காலத்தில் நாம் இவ்வாறான நிகழ்வுகளை ஊக்குவிக்க வேண்டும். திறந்த வெளியரங்குக்கு இவர்களை கொண்டு வந்து இவர்களின்திறமைகளைநாம்இனம் கண்டுஅவர்களுக்கானதிடத்தையும் உதவிகளையும்நாம்வழங்கவேண்டும் - என்றார். (எ-60)

### கொழும்பு - யாழ்ப்பாண

# அரைச்சொகுசு பேருந்துகளில் அதிகரித்த கட்டண அறவீடு

## மக்கள் கவலை

யாழ்ப்பாணம் ஜூலை16

இலங்கை போக்குவரத்துச் சபையின் கொழும்பு யாழ்ப்பாணசேவையில் ஈடுபட்டுவரும் அரைச் சொகுசு பேருந்தில் அதிகளவு கட்டணம் அறவிடப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

வழமையானபேருந்துகளில் அறவிடப்படும் கட்டணத்தை விட ஒன்றரை மடங்கு கட்டணம் அதிகரித்து அறவிடப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முதன்மைச் சாலையில் உள்ள பேருந்து தரிப்பிடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பயணிகளிடத்திலும் அதிகரித்த கட்டணமே அறிவிடப்படுகின்றது. இதே வேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரும் தனியார் பேருந்துகளில் வழமையான கட்டணம் அறவிடப்படுகிறது என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து கொடிகாமம் வரையிலான இடங்களிலிருந்து யாழ்.போதனாமருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள்காலை6 மணிக்கு முன்னர் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதால் அதிகாலை4.30மணிக்குவரும் இ.போ.ச.வின் யாழ்ப்பாணசாலையின் பேருந்துகளில் பயணிக்கின்றனர். இதன்போதே இவ்வாறுஅதிகரித்தகட்டணம் அறிவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோண்டாவில் இ.போ.ச சாலையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இலங்கை போக்குவரத்துசபையின் தலைமைசெயலகத்தால் எமக்கு வழங்கப்பட்டுள்ள பணவசூலிப்பு வீதத்தின்அடிப்படையில் அரைசொகுசு பஸ்களுக்கு ஒன்றரை மடங்கு கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனவேதான் இவ்வாறான கட்டண அறவீட்டுமுறை நடைமுறைப்படுத்தபடுகிறது. கூடுதலாக இரவுநேர சேவைகளில் ஈடுபடும் சாதாரணமல்லாத அரை சொகுசு பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்குஇவ்வாறானநிலை ஏற்படுகிறது. சாதாரண பஸ்களில் வழமையான கட்டணங்களேஅறவிடப்படுகின்றன. இதுசம்பந்தமாக எம்மிடமும் பலர் முறைப்பாடுகளை செய்துள்ளனர் எவ்வாறெனினும் கொழும்பிலுள்ள தலைமைக்காரியாலயம்தெரிவிக்கும்கட்டண ஒழுங்குமுறைகளையே நாம் பின்பற்ற வேண்டியுள்ளது.- என தெரிவிக்கப்பட்டது. (எ-8,114)

# இராணுவம்தற்காலிகமாகக்கூட கோட்டைக்குள்செல்ல அனுமதிக்கமுடியாது

## தமிழ்த் தேசிய முன்னணியின் உறுப்பினர் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இலங்கை இராணுவம் தற்காலிகமாகசெல்லக்கூடநாம்அனுமதிக்க மாட்டோம் என்று தமிழ்த் தேசிய முன்னணியின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுகாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக்கோட்டைக்குள்இராணுவம்முகாம்அமைப்பதுதொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர்இதுதொடர்பாகதெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக்கோட்டைக்குள்இராணுவம் உள்ளே முகாம் அமைப்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாடடோம். வரலாற்று அம்சங்களைக் கொண்ட பொக்கிஷத்தை இராணுவத்திடம்தாரைவார்க்கபலமுனைகளில் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளகோட்டைக்குள்யாருடைய அனுமதியும் எடுக்காமல் இராணுவத்தினர்முகாம்ஒன்றைஅமைத்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அவ்வாறானநிலையில் அந்த செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிசார்பாக அண்மையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கை இராணுவத்துக்கு தற்காலிகமாக கோட்டையை முகாம்அமைக்கஅனுமதிக்கலாம் என்று கருத்து வெளியிட்டுள்ளார். அவரின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. எந்த ஒரு விடயத்தையும் நாம் தற்காலிகமாக அனுமதித்தால் காலப்போக்கில் அவை நிரந்தரமாகி விடும். அவ்வாறுபலசந்தர்ப்பங்களில்நடந்துள்ளன. அதேபோலவே இராணுவத்தையும் கோட்டைக்குள் தற்காலிகமாகநாம்அனுமதித்தால்அவர்கள் அங்கு நிரந்தரமாகும் நிலை உருவாகும். எனவே கோட்டைக்குள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவத்தைமுகாம்அமைக்கஅனுமதிக்க கூடாது. கோட்டைக்குள் இராணுவம்முகாம்அமைப்பதற்கு கண்டனம்தெரிவித்துபலபோராட்டங்களை முன்னெடுக்க வுள்ளோம். இராணுவம்முகாம்அமைப்பதை நிறுத்தாவிட்டால் தமிழ் மக்களை ஒன்று திரட்டி பெரும் முற்றுகை போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டி ஏற்படும். எனவேவடக்குமாகாணசபைஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-8)

# தூக்குத் தண்டனையை விலக்கிக் கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தல்

## அரசதலைவர், தலைமை அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 16

**தூக்குதண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கானதீர்மானத்தைவிலக்கிக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. அரச தலைவர், தலைமை அமைச்சர், சபாநாயகர், நீதி அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள சிறப்புக் கடித்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.**

அந்தக் கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள்ஆணைக்குழுச்சட்டத்தின்பிரகாரம் குறித்த சட்டத்தின் 10(இ) மற்றும் 10(ஈ) பிரிவுகளுக்கு அமைய அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், ஊக்குவிப்பதுக்கும், பாதுகாப்பதற்கும், சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும், படிமுறைகளையும் தொகுத்தமைப்பதில் அரசுக்கு மதியுரை வழங்க உதவுதலும் மேலும் தேசிய சட்டங்களும் நிர்வாகச் செயல்முறைகளும், பன்னாட்டுமனிதஉரிமைகளுக்கும்,வழமைகளுக்கும், நியமனங்களுக்கும் அமைய அமைந்துள்ளது என்பதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசுக்கு விதப்புரை செய்தல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழு தூக்குத் தண்டனையை நீக்கும் பரிந்துரையை உங்களதும் அரசினதும் கவனத்துக்குக்கொண்டுவரவிரும்புகின்றது. தூக்குத் தண்டனையானது கொடூரமற்றும்மனிதாபிமானமற்ற தண்டனையிலிருந்தான சுதந்திரம் மற்றும் உயிர் வாழும் உரிமைகளைக் கடுமையாகமீறுகின்றது.

மிகக்கடுமையானதும்மாற்ற முடியாத தண்டனையுமாகும். அத்துடன்குற்றத்தைத் தடுப்பதற்குத்திறனற்றதாகவும் உள்ளது.

வளர்ச்சியடையும்உலகின்ஏற்புடைமையை விரைவாகஇலங்கைஅங்கீகரிக்கவேண்டும் என்பதே ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். தூக்குத் தண்டனையைநீக்கியுள்ள100க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து அடிப்படைமனிதஉரிமைக்கோட்பாடுகளுக்கும், உயிரின் புனிதத்தன்மைக்குமான இலங்கையின்ஈடுபாட்டைஉண்மையாக்கவேண்டும். ஏனைய 60க்கும் மேற்பட்ட நாடுகள் நடைமுறையில் தூக்குத் தண்டனையைச் செயற்படுத்துவதில்லை.

இலங்கையின்பன்னாட்டுமனிதஉரிமைகள் கடப்பாடானது தெளிவாகத் தூக்குத் தண்டனையைத் தடை செய்கின்றது.

ஒவ்வொருவரும் உயிர்வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்கான உரிமைகளைக் கொண்டுள்ளார்களெனக் கூறும் பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 3 மனித உயிரின் புனிதத்தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

அத்துடன் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கானபன்னாட்டுகட்டுறுத்தின்உறுப்புரை 6 தூக்குத் தண்டனையை நீக்குவது விரும்பத்தக்கதென வெளிப்படுத்துகின்றது.

அரசதலைவரின்கவனத்தைஐக்கியநாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதிய 44/128 பிரகடனத்தின் மூலமாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டுகட்டுறுத்தின்தூக்குத்தண்டனையை நீக்குதலானதுமனிதமதிப்பைஉயர்த்துவதற்கும், படிமுறையான மனித உரிமைகள் வளர்ச்சிக்கும்பங்களிப்புசெய்யுமெனஅதன் முகவுரையில்பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இவற்றை நிலைநிறுத்தி நாட்டின் மனித உரிமைகள்பாதுகாப்பின்முன்னேற்றத்துக்கான இலங்கையின்ஈடுபாட்டுக்கமையஇலங்கை விருப்பத்துக்குரிய பின்னேட்டினை ஏற்று, அங்கீகரித்துத்தூக்குத் தண்டனையைநீக்குவதற்குரியபடிமுறைகளைஎடுக்குமாறுநாம் பரிந்துரைசெய்கின்றோம்.

1976 ஆம் ஆண்டு முதல் வழிவந்த அரசுகள் தூக்குத்தண்டனையைநடைமுறைப்படுத்தவில்லை என்பதை வரவேற்கின்ற அதே வேளை, தண்டனைச்சட்டக்கோவைமற்றும் 1984 ஆம் ஆண்டின்13 ஆம் இலக்கதிருத்தப்பட்டவாறானநச்சுக்கள், ஓபியம்மற்றும்ஆபத்தான ஔடதங்கள் கட்டளைச் சட்டம் உள்ளடங்கலாக தூக்குத் தண்டனையை வழங்குவதற்கு ஏற்பாடுகளுடைய பல்வேறு சட்டங்களுக்கூடாக நீதிமன்றங்கள் தொடர்ச்சியாகத் தூக்குத் தண்டனையை வழங்கி வருவதையும் ஆணைக்குழு அவதானிக்கின்றது.

பன்னாட்டு மற்றும் ஒப்பீட்டுத் தன்மையான சட்டவியல் பார்வையில் தூக்குத் தண்டனையானது கொடூர மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான தண்டனையாவதுடன், மனித உயிரின்புனித்தன்மையைமதிக்கவும்தவறுகின்றது என்ற நிலைப்பாட்டுடன் ஆணைக்குழுவும் உடன்படுகின்றது.

இலங்கை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் உயிர் வாழும் உரிமை அடிப்படை உரிமையென வெளிப்படையாகக் கண்டுகொள்ளப்படாவிட்டாலும் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பில் உட்கிடையாக அடங்கியுள்ளது எனக்குறிப்பிடுகின்றது. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின் உறுப்புரை 11 சித்திரவதை மற்றும் கொடூர மனிதாபிமானமற்ற மற்றும் இழிவானநடத்தை அல்லதுதண்டனையை ஏதேனும் ஒதுக்கம் ஏதுமில்லாது தடுக்கின்றது. ஆகவே தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தை அரசுத் தலைவர் விலக்கிக்கொள்ளவேண்டும்எனக் கோருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (61)

---

# அமெரிக்காவின் தலையீட்டால் இலங்கை பல்வேறு அநீதிகளை எதிர்கொண்டது

கொழும்பு.ஜூலை.16

ஐ.நா.மனித உரிமைகள்பேரவையில் அமெரிக்காவின் தலையீட்டினால் இலங்கை பல்வேறு அநீதிகளை எதிர்கொண்டதுஎன்றுஐ.தே.கவின்தேசிய அமைப்பாளரும், பெருந்தோட்டத் துறை அமைச்சருமான நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது, அமெரிக்கா ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகியுள்ள நிலையில், இலங்கையும் விலக வேண்டும் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விடுத்திருந்தகோரிக்கைதொடர்பாகக்கருத்து வெளியிட்டார்.

"இது ஒரு அர்த்தமற்ற கருத்து. ஐ.நா மனிதஉரிமைகள்பேரவையில்அமெரிக்காவின் தலையீட்டினால் நாங்கள் பல்வேறு அநீதிகளை எதிர்கொண்டோம்.

ஆனால் இந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளோம். முன்னைய அரசு இந்தச் சவால்களை எதிர்கொண்டுதோற்கடிக்கத்தவறிவிட்டது. இப்போதுநாங்கள் இந்தச்சவால்களை வெற்றிகரமாக எதிர் கொண்டிருக்கிறோம். படிப்படியாகத் தடைகளைத் தாண்டிக் கொண்டிருக்கிறோம்.

எனவே, ஐ.நாமனித உரிமைகள் பேரவையில் தொடர்ந்து இருந்து, எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# இந்தியாவின் உதவித்திட்டங்கள் நடப்பாண்டில் ஆரம்பமாகும்

கொழும்பு.ஜூலை.16

இந்தியாவின் உதவி மற்றும் முதலீட்டிலானதிட்டங்கள்நடப்பாண்டில்ஆரம்பிக்கப்படும் என்று இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இலங்கைக்கு நேற்று முன்தினம்பயணம்மேற்கொண்டிருந்த இந்தியப் பன்னாட்டு செயலர் விஜய் கோகலே, அலரிமாளிகையில்இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக, இலங்கைதலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தமது கீச்சகப் பக்கத்தில் பதிவுஒன்றைஇட்டுள்ளார். அந்தபதிவிலேயே, இந்தியாவின் உதவி மற்றும் முதலீட்டிலான திட்டங்கள் நடப்பாண்டில் ஆரம்பிக்கப்படும் என்று கூறி யுள்ளார்.

அதேவேளை, இந்த சந்திப்பின்போது, இலங்கையில் இந்தியாவின் முதலீட்டை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான 'எட்கா உடன்பாடு' மற்றும் வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்காகஇந்தியஉதவியுடன்நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டங்கள், குறித்தும்கவனம்செலுத்தப்பட்டது.

வடக்கில் வீதி வலையமைப்புகளைச் சீரமைப்பதில் இந்தியா முதலீடு செய்வதற்குஇந்தியஅயலுறவுச்செயலர்விருப்பம்வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளஇந்தியமீனவர்களின்விடுதலை மற்றும், இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் 'சுவசெரிய' என அழைக்கப்படும் இலவச நோயாளர் காவுவண்டிச் சேவையை விரிவாக்குவது குறித்தும், இந்தச்சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

---

# அரசுக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து ஓகஸ்ட் 14 இல் போராட்டம் செய்யவுள்ளோம்

## நாமல்எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை.16

கூட்டு அரசுக்கு எதிரான அனைத்து சக்திகளுடனும் இணைந்து ஓகஸ்ட் 14 ஆம் திகதி பெரும் எதிர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளதாக அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பயணம் காரணமாக ரஷ்யாவுக்குச் செல்வதற்கு முன்னதாகக் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கூட்டு அரசு பதவியேற்று எதிர்வரும் ஓகஸ்ட்14ஆம்திகதியுடன்மூன்றுவருடங்கள்நிறைவுக்குவருகின்றன. இந்தமூன்று வருடங்களில் கூட்டு அரசினால் எதனையும்சாதிக்கமுடியவில்லை. ராஜபக்சவினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டு மோசமான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறார்கள்.

விவசாயிகளுக்கான உர மானியத்தை நிறுத்தினார்கள். அபிவிருத்திகளுக்கு முட்டுக்கட்டை வைத்தார்கள். மத்திய வங்கியில் கொள்ளையடித்தார்கள். அண்மைக் காலமாக பாதாள உலகக்குழுவினர் தலைவிரித்தாடுவதற்குஇடமளித்துள்ளார்கள். மனித உயிர்கள்பறிக்கப்படுகின்றன. மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்லமுடியாதுநெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

இவ்வாறானநிலமைகள்ஒருபுறத்தில்நீடித்துக்கொண்டிருக்கவும் மறுபக்கத்தில் நாட்டின் ஒற்றை ஆட்சித் தன்மைக்குப்பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அரசு சார்ந்தவர்கள் திரைமறைவில் காய்களை நகர்த்திக் கொண்டு இருக்கின்றார்கள். கூட்டு அரசு ஆட்சிக்கு வரும்போது முன்வைத்த வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து விட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதைக் கைவிட்டு தற்போது அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு ஜனநாயக விரோதச் செயல்களை மேற்கொள்கின்றார்கள். கூட்டு அரசின் இந்த செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினர்களையும் உள்ளடக்கி நாம் அடுத்தமாதம்14ஆம்திகதிபோராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதற்குரியபேச்சுக்கள் அனைத்தும்நிறைவுக்குவந்துள்ளன. போராட்டத்தை எங்கு நடத்துவதுஎவ்வாறுபேரணிகள்நகர்வது என்பது தொடர்பில் பின்னரே அறிவிக்கவுள்ளோம். அதனைத் தற்போதே அறிவிக்கும் பட்சத்தில் அதனை முடக்கும் வகையில் பொலிஸார் ஊடாக அரசும் நடவடிக்கை எடுத்துவிடும் - என்றார். (31)

---

# ஓகஸ்ட் முதல் வாரத்தில் முக்கிய பரீட்சைகள்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு.ஜூலை.16

கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சைகள்அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகிசெம்டெம்பர் மாதம்முதலாம்திகதிபரீட்சைகள்நிறைவடையவுள்ளதாகவும்திணைக்களம்மேலும்தெரிவித்துள்ளது.

பரீட்சைத்திணைக்களத்தினால்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம்,

இந்த முறை நாடளாவிய ரீதியில் மொத்தமாக 2 இலட்சத்து 44ஆயிரத்து 146 பாடசாலை மூலமான பரீட்சாத்திகளும், 77ஆயிரத்து323தனிப்பட்ட பரீட்சாத்திகளும்உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றவுள்ளனர்.

பரீட்சைகளை நடத்துவதற்காக 2ஆயிரத்து 268 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முறை பாடசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளபரீட்சாத்திகளுக்கானபரீட்சை அனுமதிப்பத்திரம் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சாத்திகளின் பரீட்சை அனுமதிப்பத்திரம் அவர்களது தனிப்பட்டமுகவரிக்கும் அடுத்த கிழமையளவில் அனுப்பி வைக்கப்படும்.

இதே வேளை நடப்பாண்டு தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த பரீட்சைக்கு 3 இலட்சத்து 55ஆயிரத்து 321பரீட்சாத்திகள் தோற்றவுள்ளனர். இவர்களில் 87 ஆயிரத்து 556 தமிழ் மொழி மூல பரீட்சாத்திகளும், 2 இலட்சத்து 67ஆயிரத்து 765 சிங்கள மூலமான பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றனர். (31)



## 170 ஆயுததாரிகள் ஆப்கானில் கொலை

காபூல், ஜூலை 16
ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் மட்டும் 170 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கானிஸ்தான் இராணுவம் அறிவித்தது.
ஆப்கானிஸ்தானில் தலிபான் கிளர்ச்சிக் குழு பெரியளவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதைவிட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உள்ளிட்ட ஆயுதக் குழுக்களும் அங்கு வேரூன்றியுள்ளன. இந்தக் குழுக்கள் அவ்வப்போது ஆப்கானிஸ்தானில் தாக்குதலை நடத்துவதும் நூற்றுக் கணக்கான மக்கள் அதில் கொல்லப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. இந்த நிலையில் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவுக்கு எதிராக நாடெங்கிலும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கையில் சுமார் 170 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கானிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.
எனினும் கொல்லப்பட்ட ஆயுததாரிகள் தலிபான்களா அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்களா என்ற தகவல் வெளிவரவில்லை. (ம)

# ஹமாஸுக்கு எதி... பெரிய தாக்குதல்...

## நெத்தன்யாகு அதிரடி அறிவிப்பு





டெல்அவிவ், ஜூலை 16
"பலஸ்தீன விடுதலை அமைப்பான ஹமாஸுக்கு எதிராக மிகப்பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார் இஸ்ரேலின் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாகு. "தேவையேற்படின் ஹமாஸுக்கு எதிராக தமது நடவடிக்கைமேலும் இறுகும் என்றும் அவர் அறிவித்தார்.
இஸ்ரேல் பலஸ்தீன எல்லையும் ஹமாஸ் அமைப்பு ஆதிக்கம் செலுத்தும் பகுதியுமான காசாவில் இருந்து சுமார் 90 ரொக்கெட்கள் இஸ்ரேலை நோக்கி அண்மையில் ஏவப்பட்டன. அவ்வப்போது மேலும் சில ரொக்கெட்கள் இஸ்ரேல் எல்லையைப் பதம் பார்க்கின்றன என்று இஸ்ரேல் அண்மையில் தெரிவித்திருந்தது.
இதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

காசா பகுதி கடந்த ...
பதற்றம் நிறைந்த ...
கான அமெரிக்...
திறக்கப்பட்டமைக்...
கடந்த சில மாதங்...
கள் நடைபெற்று வ...
அவ்வாறு போராட்...
பலஸ்தீனர்கள் இ...
டுள்ளனர்.
சுமார் 15 ஆயிரம் ...
எதிராக ஐக்கிய நா...
ஒன்றுகூடி இஸ்ரே...
னத்தை நிறைவே...
காசாவில் மட்டும...
ஜெருசலேம் உள்...
தீனர்கள் இடையி...
பூதாரகரமாகி வரு...

## 'ட்ரம்ப் திரும்பிச் செல்' பிரிட்டனில் போராட்டம்



லண்டன், ஜூலை 16
பிரிட்டனுக்குச் சென்றுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டன் நகரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்தினர். 'ட்ரம்ப் திரும்பிச் செல்' என்று முழக்கமிட்டு அவர்கள் தத்தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.
அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, அகதிகளுக்கு தடை, வெளிநாட்டினருக்கு விசா அளிப்பதில் கட்டுப்பாடு, வெளிநாட்டு பொருள்கள் இறக்குமதி மீது கூடுதல் வரி விதிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அவரது இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா மட்டுமின்றி மற்ற நாடுகளிலும் எதிர்ப்பு நிலவி வருகிறது.
ட்ரம்ப் தற்போது பிரிட்டனுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக் கணக்கான மக்கள் லண்டன் நகரில் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ட்ரம்பைக் கேலி செய்யும் விதமான பலூன்களையும் அவர்கள் பறக்கவிட்டனர். (ம)





## சிரியாவில் வான் தாக்குதல் 28 அப்பாவிகள் உயிரிழப்பு

டமஸ்கஸ், ஜூலை 16
சிரியாவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 28 அப்பாவிகள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சிரியாவின் இப்சார் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவா அல்லது சிரியாவா இந்தத் தாக்குதலை நடத்தியது என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தாக்குதல் நடைபெற்றதை உறுதிசெய்துள்ள சிரியப் போர்க் கண்காணிப்பகம் எந்தத் தரப்பு தாக்குதல் நடத்தியது என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.
சிரியாவில் அண்மையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. இதன்படி அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவும் அரச தரப்பும் தமக்கிடையில் போர் நிறுத்தம் செய்தன. வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள சிரிய மக்கள் தமது தாயகம் திரும்பலாம் என்று சிரிய அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளிவந்த ஒரு வாரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## கிரீன்லாந்தை அச்சுறு...



பெரியதொரு பனிப்...
கிராமம் ஒன்றுக்கு மி...
கள் அங்கிருந்து வெ...
இன்னார்சூட் கிராமத்...
நிலப்பகுதியில் இருக்...
பனிப்பாறை விளங்கு...
இந்தப் பனிப்பாறை ...
களில் வெள்ளம் பு...
வெளியேற்றப்பட்டுள்...
பனிப்பாறை மேற்கொ...

# திராக
# ல்கள்!



குதி கடந்த சில மாதங்களாகவே தொடர்ந்து
நிறைந்த பகுதியாக மாறிவிட்டது. இஸ்ரேலுக்
அமெரிக்கத் தூதரகம் ஜெருசலேமில்
பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காசாவில்
சில மாதங்களாகவே தொடர்ந்து போராட்டங்
டபெற்று வருகின்றன.
று போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கான
னர்கள் இஸ்ரேல் படையினரால் கொல்லப்பட்
ர்.
5 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். இதற்கு
ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அண்மையில்
டி இஸ்ரேலுக்கு எதிராகக் கண்டனத் தீர்மா
நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.
ல் மட்டுமல்லாமல் மேற்குக் கரை, கிழக்கு
லம் உள்ளிட்ட பகுதிகளிலும் யூதர்கள் பலஸ்
இடையிலான மோதல் அண்மைக்காலமாக
மாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)





# திரைப்படத்தை விஞ்சிய காதல்!

உக்ரைன் நாட்டில் தோண்டப்பட்ட ஒரு கல்லறையில், ஆணும் பெண்ணும் ஒன்றாக இருந்த எலும்புக்கூடுகள் கிடைத்திருக்கின்றன. ஆச்சரியமடைந்த ஆய்வாளர்கள், இந்த எலும்புக்கூடுகளை ஆராய்ந்தனர். "இவர்கள் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கணவன், மனைவியாக இருக்கவேண்டும். கணவன், மனைவிக்கு என்று தனித்தனி வரையறைகள் அப்போது இருந்திருக்கின்றன. இந்த எலும்புக்கூடுகள் இருந்த கோலத்தைப் பார்க்கும்போது, மனைவி இறந்த பிறகு இருவரையும் சேர்த்துப் புதைத்திருக்க வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது. இறந்த கணவனை விட்டுப் பிரிய மனம் இல்லாததாலும் அடுத்த பிறவியில் சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்திலும் இந்தப் பெண் கணவனுடன் சேர்ந்து உயிர் துறக்க முடிவு செய்திருக்க வேண்டும். வலி இல்லாமல் உயிர் போகக்கூடிய விஷத்தை அருந்தி, கணவன் உடலுக்கு அருகில் படுத்து, அவர் தலைக்கு அடியில் வலது கையை வைத்து, முகத்தைத் தன் முகத்தோடு உரசிக்கொண்டு, கால்களைக் கணவன் மீது போட்டு, இடது கையை அவரது மார்பு மீது வைத்தபடி உயிர் துறந்திருக்கிறார். இந்தப் பெண்ணின் காதல் மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்தச் செயலை அந்தப் பெண்ணே விரும்பிச் செய்திருக்கிறார் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். கட்டாயத்தின்பேரில் இப்படி ஒரு நெருக்கத்தைக் கொண்டுவர முடியாது" என்கிறார் உக்ரைன் தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆய்வாளர். (ம)



ஜப்பானில் கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழையால் அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் சுமார் 250 பேர் உயிரிழந்துள்ள நிலையில் மீட்புப் பணிகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

# சுறுத்தும் பனிப்பாறை

ரு பனிப்பாறை கிரீன்லாந்தின் மேற்கு பகுதியில் உள்ள
ன்றுக்கு மிகவும் நெருங்கி வந்துள்ளதால், அந்தப் பகுதி மக்
ருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.
ட் கிராமத்தில் கடலை தொட்டு அமைந்திருக்கும் மேடான
யில் இருக்கும் வீடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இந்தப்
ற விளங்குகிறது.
ரிப்பாறை உடைந்து விட்டால் எழுகின்ற அலைகளால் வீடு
ள்ளம் புகுந்துவிடலாம் என்ற காரணத்தாலயே மக்கள்
றப்பட்டுள்ளனர். ஆனால், தரையைத் தட்டி நிற்கும் இந்தப்
ற மேற்கொண்டு நகரவில்லை என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பனிப்பாறைக்கு அருகிலுள்ள இடத்தில் வாழுகின்ற 169 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக டென்மார்க் செய்தி நிறுவனமான 'ரிட்ஸாவ்' தகவல் வெளியிட்டுள்ளது. "இந்தப் பனிப்பாறையில் வெடிப்புகளும், துளைகளும் ஏற்பட்டுள்ளதால், எந்நேரத்திலும் உடையலாம் என அஞ்சுகின்றோம். இந்தக் கிராமத்தின் மின்சார நிலையமும், எரிபொருள் கிடங்குகளும் கடற்கரைக்கு அருகில் உள்ளன. பருவநிலை மாற்றத்தின் காரணமாக, இவ்வாறான மிக பெரிய பனிப்பாறைகளால் ஏற்படும் ஆபத்துக்கள் அடிக்கடி நிகழலாம்" என்று உள்ளூர் வாசியான எலியாக்சன் என்பவர் ஊடகங்களுக்குக் கருத்துப் பகிர்ந்துள்ளார். (ம)

# சிறையில் விசாரிக்கப்படுகிறார் பாகிஸ்தானின் நவாஸ் செரிப்

இஸ்லாமபாத், ஜீலை 16
பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சரான நவாஸ் செரீப் பனாமா ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் சிறையில் வைத்து விசாரிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.
பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் மற்றும் அவரது மகள் மரியம் நவாஸ் ஆகியோர் மீது சட்டவிரோதமாக சொத்து குவித்ததாக 3 வழக்குகள் தொடரப்பட்டன. அதில் அவென்பீல்ட் வழக்கில் நவாஸ் செரிப் அவரது மகள் மரியம் நவாஸ், மற்றும் மருமகன் ஆகியோர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது.
இதையடுத்து, நேற்றுமுன்தினம் இரவு லண்டனில் இருந்து பாகிஸ்தான் திரும்பிய நவாஸ் செரிப் மற்றும் மரியம் நவாஸ் ஆகியோர் லாகூர் வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் இருவரும் அடியாலா சிறையில் 'பி' வகுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், அஜிசியா இரும்பு ஆலை ஊழல் வழக்கு உள்ளிட்ட வழக்குகள் நவாஸ் செரிப் மீது நிலுவையில் உள்ளன.
இந்த வழக்குகளை சிறைக்குள் வைத்தே விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)



# 2020 தேர்தலிலும் வருகிறார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜீலை 16
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலிலும் போட்டியிடும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.
பிரிட்டனுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ட்ரம்ப், அங்கு வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலயே இவ்வாறு தெரிவித்தார்.
"2020 தேர்தலில் நான் போட்டியிட வேண்டும் என்று பலரும் விரும்புகின்றனர். அதன்படியே நானும் போட்டியிடவுள்ளேன். என்னைத் தோற்கடிக்க ஜனநாயகக் கட்சியில் எவருமில்லை என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

# பாக். இரட்டைத் தாக்குதலில் உயிரிழப்பு 130ஆக உயர்ந்தது

## நேற்றுத் தேசிய துக்கதினம்

இஸ்லாமபாத், ஜீலை 16
பாகிஸ்தானில் இருவேறு தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்தது.
பாகிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக அங்கு தேர்தல் பரப்புரைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டு பரப்புரைக் கூட்டங்கள் பயங்கரவாதத் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளன.
பன்னு மாவட்டத்தில் பிற்பகல் நடைபெற்ற தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர். சம நேரத்தில் மஸ்துங் மாவட்டத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 123பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தின நிலவரப்படி உயிரிழப்பு எண்ணிக்கை 128ஆக இருந்தது. மருத்துவமனையில் மேலும் இருவர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு 130ஆக அதிகரித்தது. (ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முழுமையான அழுத்தத்தை இந்தியா தந்தாகவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஆண்டிறுதிக்குள் புதிய அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இந்திய அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோகலே தெரிவித்திருக்கிறார்என்று செய்திகள்வெளிவந்திருக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவரும்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவருமான இரா.சம்பந்தன் கோலலேயைச் சந்தித்தபோதும் இந்த விடயத்தை அழுத்தமாகத் தெரிவித்திருந்த பின்னணியில் இந்த வலியுறுத்தல் புதுடில்லியிடம் இருந்து வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தவிடயம்தொடர்பில்இந்தியாஉண்மையிலேயேமைத்திரிக்கு அழுத்தம் கொடுத்ததா அல்லது போகிற போக்கில் ஒப்புக்குச்சப்பாணியாகச்சொல்லிவிட்டுப்போனதாஎன்பது மைத்திரிக்கும் கோகலேக்கும் மட்டுமே புரிந்த இரகசியம். ஆனால், தமிழர்களின் பிரச்சினை விடயத்தில் இந்தியா கொண்டுள்ளஆழ்ந்தபொறுப்புக்கூறலுடன்ஒப்பிடுகையில் புதுடில்லி கொழும்புக்கு வழங்கி வரும் அழுத்தம் என்பது இந்திராகாந்தியின் ஆட்சிக்குப் பின்னர்எப்போதும் ஆணித்தரமாக இருந்ததில்லை.

தமிழர்களின்விவகாரத்தில்பட்டும்படாமலும்கொழும்பின் போக்கோடு ஒத்தோடும் அயலுறவுக்கொள்கையைத்தான் இந்தியாகடைபிடித்து வந்தது. அண்டை நாடுகளின்அரசியலில் தலையிடுவதில்லை என்பது தமது அயலுறவுக்கொள்கையின் அடிப்படை என்று புதுடில்லி கூறிக்கொண்டாலும் தனக்குத்தேவைஎன்கிறபோது, குறிப்பாகப்புவிசார்அரசியல் நகர்வுகளில் கொழும்புக்கு முழு அழுத்தம் கொடுத்துக் காரியத்தைச்சாதித்துக்கொள்ளும் புதுடில்லி அதே அழுத்தத்தை கொழும்புக்குக் கொடுப்பதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரைக்கும் அந்த இயக்கத்துடன் இருந்த முரண்பாட்டை இதற்கொரு சாட்டாக இந்தியாமுன்வைத்து வந்தது. ஆனால், 2009ஆம் ஆண்டு புலிகள் இயக்கம் களமுனைகளில் செயலிழந்து போன பின்னரும் புதுடில்லியின் இந்த அயலுறவுக் கொள்கையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை.

இலங்கையில்சீனாவின்இருப்புமற்றும்வளர்ச்சிகுறித்தகவலை புதுடில்லிக்கு இருந்தாலும்அதனைக்கொழும்புடன்இணங்கிப் போகும் கொள்கைகள் ஊடாகச் சமப்படுத்தவே அது விரும்புகின்றது.எனவேதான்தமிழர்களின்பிரச்சினைதொடர்பில் கொழும்புக்கு அது ஆணித்தரமான அழுத்தத்தைக் கொடுப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தியாவை இந்த விடயத்தில் மலைபோல் நம்பியிருந்தபோதும்கூட புதுடில்லியின் அயலுறவுக்கொள்கையில் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. சம்பந்தருடனான சந்திப்பில்கோகலேஅதனைச்சூசமாகத்தெரிவித்தும்இருந்தார்.

ஆனால், இலங்கையில்இனப்பிரச்சினையை ஊதிப்பெருப்பித்து இத்தனை பெரிய வன்முறை வடிவமாக்கியதில் இந்தியாவுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. நடந்து முடிந்த அழிவுகள், உயிரிழப்புகள், பொருளாதாரப்பின்னடைவுகள்அனைத்துக்கும் இந்தியாவின் செயல் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகஇருந்ததைமறந்துவிடமுடியாது. இதுபுதுடில்லிக்குத் தெரியாத ஒன்றுமல்ல. ஏனெனில் இலங்கையில் அது கையாண்ட அதே உத்தியைப்பாகிஸ்தான்கைக்கொள்வதன் ஊடாகத் தொடர்ந்தும் பாதிப்பைச்சந்தித்து வருகின்றது இந்தியா. துரதிர்ஸ்டவசமாக, தான் செய்த பாவத்திற்கான பரிகாரத்தை வீடுகளைக் கட்டிக்கொடுப்பது மற்றும் உதவித் திட்டங்களைச்செயற்படுத்துவதன்மூலமும்கலை, பண்பாட்டு பரிவர்த்தனை மூலமும் நிவர்த்தி செய்துவிட அது முயல்கிறது.

அதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் துணைத் தூதரகம் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது. இந்தியாவின் தீர்க்க தரிசனமற்ற அரசியல் நகர்வுகளால் ஈழத் தமிழர்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள வடுக்களை ஆற்ற இந்தியா தற்போது எடுத்து வரும் முயற்சிகளால் அது பெரும் பயன் எதனையும் அடைய முடியாது. தன்னுடைய பாவங்களுக்கான பரிகாரத்தைச் செய்வதன்மூலம் ஈழத்தமிழர்களின் மனங்களில்தான் இழந்துபோன மதிப்பைத் திரும்பப் பெற இந்தியா உண்மையிலேயே விரும்பினால் அது செய்யவேண்டியதெல்லாம் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வு ஒன்றை அடைவதற்குக் கொழும்புக்கு முழுமையான அழுத்தத்தைக் கொடுப்பது தான்.

அத்தகைய ஒரு தீர்வு ஏற்படுவதற்கான மிகப் பொருத்தமான காலம் இதுவாக இருக்கும்போது இந்தியா முழுமையான அக்கறையோடு செயற்படுமாக இருந்தால் தீர்வைக்காண்பது கனவாக இருக்காது. ஆனால், புவிசார் அரசியலில் மையத்தில் வல்லரசுக் கனவுகளோடு இருக்கும் இந்தியா அதைச் செய்யுமா?

# விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் தருணத்துக்கேற்ற அரசியல்பூச்சாண்டியே

லங்காதீப நாளிதழில் வெளியான
சிங்களக் கட்டுரையிலிருந்து
தொகுக்கப்பட்டது

தொகுப்பு - வீ.எஸ்.ரீ



வடபகுதி தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் விடுதலைப் புலிகளின் ஆதரவு மனநிலை குறித்து ஆய்ந்தறிந்து அதற்கான நடவடிக்கை தொடர்பாக தீர்மானிப்பதற்காக சட்டம் ஒழுங்கு அமைச்சர் பிரதி அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் அண்மையில் வட பகுதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மட்டுமல்லாமல் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் விடுதலைப் புலிகள் மீதான ஆதரவு மனநிலை நிலவுவ தொன்றும் புதிதல்ல. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மீதான விரோத மனப்பான்மை நிலவுவதுபோன்று தமிழ் மக்களில் பெரும்பாலானோர் மத்தியில் விடுதலைப் புலிகள் மீதான ஆதரவு மனப்பாங்கு நிலவி வருவது இரகசியமானதொன்றல்ல.

இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்பு விடயத்துடன் தொடர்புடைய அரசின் உயர் மட்டத்தைச் சேர்ந்த மூவர், விடுதலைப் புலிகள் மீதான ஆதரவு அலை குறித்து ஆராய்வதற்காக வடபகுதிக்கு வந்திருந்தமை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான போக்கு தமிழ் மக்கள் மனங்களில் தற்போது உயர்வு கண்டிருப்பதாக அரச தரப்பினர் உணர்வதனால் தான்போலும்.

சிறப்பாக விடுதலைப் புலிகளது மீளுருவாக்கம் குறித்து தமிழ் மக்கள் அக்கறை கொண்டிருப்பதாக முன்னாள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கடந்த 4ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் வைத்து கருத்து வெளியிட்டதன் பின்னரே அரசின் இந்த உயர்மட்டக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கான தமது பயணம் குறித்து முடிவுசெய்திருக்கக்கூடும்.

**விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதா**

அண்மைக் காலமாக அடிக்கடி விடுதலைப் புலிகளுக்கு ஆதர்வான போக்கு, மற்றும் கருத்து வெளிப்பாடு தொடர்பான செய்திகள் வெளிவருவதால் வடபகுதியில் அத்தகைய நிலைப்பாடு பொது மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது என கணிப்பிடுவது நியாயமானதே. ஆனாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொதுமக்கள் விடுதலைப்புலிகளின் அமைப்புத் தொடர்பாக அனுபவங்கள் காரணமான புதிய நிலைப்பாட்டில் இருப்பதால் தீடிரென இத்தகைய கருத்து நிலைப்பாடொன்று உருவாகியிருக்கக்கூடும் என எண்ண இயலாது.

> ”விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்பட்ட காலத்தில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெண்களதும், சிறுவர்களதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்பதை வெளிப்படுத்துவதே தமது நோக்கமாக இருந்ததாக விஜயகலா மகேஸ்வரன் பின்னர் விளக்கம் தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் அவர் விடுதலைப் புலிகளை பாராட்டி முதலில் வெளிப்படுத்தியிருந்த கருத்து வார்த்தைப் பயன்பாட்டுத் தவறாக இருந்திருக்கக் கூடும். தென் பகுதியில் அவரது அந்தக் கருத்துக்கு கடும் விரோதம் பாராட்டப்பட்டபோதிலும், தமிழர் தரப்பு அரசியல்வாதிகளில் சிலர் விஜயகலா மகேஸ்வரனது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டும் இருந்தனர்.

தற்போது யதார்த்த நிலை என்னவெனில், போர் ஒரு பயங்கரமான சூழலில் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நோக்கத்தால் கடும் அச்ச வசப்பட்ட தமிழ் மக்கள் கடந்த சில ஆண்டுகளாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான தமது மன உணர்வுகளை மனதுக்குள் அடக்கி வைத்திருந்தனர். தற்போது அந்த அச்ச உணர்வு விலகிப்போயுள்ளதால் விடுதலைப்புலிகள் தொடர்பாக அவர்களது ஆதரவு உணர்வு மீண்டும் வெளிக்கிளம்பியுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாளன்று அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்முடிவுக்கு வந்ததையடுத்து தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்தெதனையும் வெளிப்படுத்தாது மௌனம்காத்த காலகட்டமொன்று இருந்தது. தனிப்பட்ட ரீதியில் ஒரு தரப்பினர் தம் மத்தியில் விடுதலைப்புலிகள் தொடர்பாக அனுதாபக் கருத்துக்களை இரகசியமான விதத்தில் வெளிப்படுத்தி வந்திருப்பினும் போரில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கான நினைவு நிகழ்வுகளை நடத்துவது குறித்து அந்தக் காலகட்டத்தில் எவராலும் சிந்தித்துப்பார்க்கக்கூட இயலாது போயிருந்தது.

கடந்த அரசின் தலைவர்களது கருத்தின்படி அரச தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைப் புறக்கணித்ததாலோ அல்லது மகிந்த அரசின் செயற்பாடுகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டதாலோ ஏற்பட்ட நிலமை அல்ல. அரச இயந்திரத்தின் மீதான அச்சம் மற்றும் குழப்பம் காரணமாக ஏற்பட்ட நிலைப்பாடே அதுவாகும்.

ஆனால் காலப்போக்கில் இத்தகைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இன்று வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வெளிப்படையாகவே விடுதலைப் புலிகளது மாவீரர் தின நினைவு நிகழ்வு மற்றும் கரும்புலிகள் தின நினைவு நிகழ்வு என்பவற்றைக் கடைப்பிடிக்கும் அளவுக்கு நிலமை மாற்றம் கண்டுள்ளது. பிரிவினைவாதத்தை ஆதரிக்கமாட்டோமென சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டு பதவியேற்ற நாடாளுமன்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்கள் கூட இத்தகைய விடுதலைப் புலிகள் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றனர்.

**வெளிப்படையாக நினைவுகூரப்படும் விடுதலைப் புலிகளின் நினைவலை**

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர், அண்மைக்



> குறித்த இந்த விடுதலைப்புலிகள் ஆதரவு நிலைப்பாடு ஒரு புதிய விடயமே என அரசு விளக்கமளிக்க முயல்வதாகத் தோன்றுகிறது. ஆனால் இது முன்னாள் அரசதலைவர் மகிந்தவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் தேன்போன்று சுவையளிக்கும் ஒரு விடயமாக இருக்கக் கூடும். ஏனெனில் தற்போதைய கூட்டாட்சி அரசின் நிர்வாகத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர் எனக் குற்றஞ்சாட்ட இது அவர்களுக்கோர் நல்வாய்ப்பாக அமைகிறது

காலம்வரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போரில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அவர்களது உறவினர்களால் போரில் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவு கூர்கிறோம் என்ற போர்வையிலேயே நினைவு கூரப்பட்டு வந்தனர். உறவினர்களை நினைவு கூர்வது சட்டப்படி தவறல்ல என்ற போதிலும், அவர்கள் அவ்விதம் தமது உறவினர்களை நினைவு கூர்வதாகக் கூறிக்கொண்டு நினைவு கூர்ந்த நாள்களெல்லாம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு முக்கிய நினைவுகூரல் தினங்களாக அமைந்த் நாள்களிலேயே ஆகும். அவற்றில் ஒன்று நவம்பர் 27ஆம் திகதியாகிய மாவீரர் தினமாகும். மற்றையது போரின் முடிவின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்த தினமெனப் பலரும் கருதும் மே மாதம் 19ஆம் திகதியாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பால் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நினைவுகூரப்பட்டு வந்த கரும்புலிகள் தினம் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இவ்வாண்டின் கடந்த ஜூலை 5ஆம் திகதிவரை வெளிப்படையாக எந்த இடத்திலும் கடைக்கொள்ளப்பட்டதில்லை. ஆனாலும் அது இந்த ஆண்டில் பகிரங்கமாக தமிழ் மக்களால் கடைக் கொள்ளப்பட்டது.

அதேபோன்று பிரிவினைவாதத்துக்கு ஆதரவளிக்க மாட்டோமென சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் கடந்த மாதத்தில் இரு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்ட உருவச்சிலைகளை புனரமைப்பதற்கான மாநகசபை அமர்வின்போது பிரேரணையொன்றை முன்வைத்து நிறைவேற்றிக் கொண்டுள்ளனர்.

அவற்றில் ஒன்று 1987ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்து யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் 12 நாள்களாக உணவை ஒறுத்துப் போராடி உயிர்நீத்த அவ்வேளைய யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப் புலிகளது மாவட்டத் தலைவன் திலீபனது உருவச்சிலையாகும். அவற்றில் இரண்டாவது உருவச்சிலை யாழ். மாவட்ட விடுதலைப் புலிகளது பொறுப்பாளராகவிருந்த கிட்டு என்ற இயக்கப் பெயர் கொண்டிருந்த சதாசிவம் கிருஷ்ணகுமாரது உருவச்சிலையாகும்.

அந்த வகையில் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் தலையெடுத்து வரும் விடுதலைப் புலிகள் ஆதரவு மனப்பாங்கு அண்மையில் முன்னாள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் பொது நிகழ்வொன்றில் வைத்து வெளிப்படுத்தப்பட்டது. இந்த நாட்டின் தமிழ் அரசியல்வாதிகள் மேற்குறித்த விடுதலைப் புலிகள் ஆதரவு மனப்பாங்கை சூட்சுமமான விதத்தில் முன்னர் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தபோதிலும் தற்போது விஜயகலா மகேஸ்வரன் வெளிப்படையாக அதனை வெளிப்படுத்தியுள்ளார். ஆயினும் அதன் பின்னணியில் மறைமுகமாக வேறு பலரும் உள்ளதாகவும் கருதமுடிகிறது.

**விஜயகலாவின் கருத்தும் ஆதரவும் எதிர்ப்பலையும்**

விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்பட்ட காலத்தில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெண்களதும், சிறுவர்களதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்பதை வெளிப்படுத்துவதே தமது நோக்கமாக இருந்ததாக விஜயகலா மகேஸ்வரன் பின்னர் விளக்கம் தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் அவர் விடுதலைப் புலிகளை பாராட்டி முதலில் வெளிப்படுத்தியிருந்த கருத்து வார்த்தைப் பயன்பாடு தவறாக இருந்திருக்கக்கூடும். தென் பகுதியில் அவரது அந்தக் கருத்துக்கு கடும் விரோதம் பாராட்டப்பட்டபோதிலும், தமிழர் தரப்பு அரசியல்வாதிகளில் சிலர் விஜயகலா மகேஸ்வரனது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டும் இருந்தனர். எப்போதுமே தென்பகுதித் தரப்பினர்களை விமர்சித்து வரும் வடமாகாணசபை முதல்வர் க.வி.விக்னேஸ்வரன், மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

குறித்த இந்த விடுதலைப்புலிகள் ஆதரவு நிலைப்பாடு ஒரு புதிய விடயமே என அரசு விளக்கமளிக்க முயல்வதாகத் தோன்றுகிறது. ஆனால் இது முன்னாள் அரசதலைவர் மகிந்தவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் தேன் போன்று சுவையளிக்கும் ஒரு விடயமாக இருக்கக்கூடும். ஏனெனில் தற்போதைய கூட்டாட்சி அரசின் நிர்வாகத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர் எனக் குற்றஞ்சாட்ட இது அவர்களுக்கோர் நல்வாய்ப்பாக அமைகிறது.

ஆனால் உண்மையான நிலை அதுவல்ல. விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச தமிழ்மக்கள் தமது ஆதரவு மனநிலையை குறிப்பிட்டதொரு சிறியகால இடைவெளிக்கு மட்டுமே தமது மனங்களில் ஒரு மூலையில் ஒதுக்கி மறைத்து வைத்திருந்தனர்.

பின்னர் வடபகுதி அரசியல்வாதிகள் விடுதலைப்புலிகள் குறித்த ஆதரவு மனநிலையை முதலில் வெளிப்படுத்த ஆரம்பித்தனர். ஆனால் காலப்போக்கில் அந்த உணர்வு மெல்ல மெல்ல வெளிப்பட்டாலும் இன்று போல முற்றுமுழுதான விதத்தில் கருத்து வெளிப்பாடாக வெளிவரவில்லை.

கடந்த அரசின் காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பை மீண்டும் முன்னிலைக்குக் கொண்டு வரும் விதத்திலான மூன்று முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அவைகுறித்து அரசு அவதானத்துடன் செயற்பட்டதன் காரணமாக அத்தகைய முயற்சிகள் எதுவும் சாதகமான பயனை நல்கவில்லை. போர் முடிவுக்கு வருவதற்கு முன்பிருந்தே விடுத லைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களது மனங்களில் முக்கிய இடம்பிடித்திருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் மக்களிடமிருந்து பெருந்தொகை பணத்தை வரிகளாக அறவிட்டபோதிலும் தமிழ் மக்களது சிறு பிள்ளைகளைக்கூட தமது அமைப்பில் இணையச்செய்து போராளிகளாக உருவாக்கிய போதிலும் தமிழ் மக்கள் அரசுக்கு ஆதரவாக செயற்படவில்லை. போரொன்றின்போது தமக்குப் பாதுகாப்பாகச் செயற்படும் தரப்புக்கு பொதுமக்களது ஆதரவு கிட்டுவது இயற்கையானதொன்றே.

போரின் இறுதியில் தாம் சந்திக்க நேர்ந்த பயங்கர அனுபவங்கள் காரணமாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புக்குறித்து பேசிக்கொள்வதற்குக்கூட அஞ்சினர். அதே வேளை போரின் இறுதி வேளையில் விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்பட்ட விதம் குறித்தும் பொதுமக்கள் மத்தியில் குழப்பமும் கவலையும் நிலவின. போர் முடிவுக்கு வந்து இத்தனை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் நாட்டில் அமைதியும் சமாதானமும் உருவாகாத ஒரு சிக்கலான சூழ்நிலை நிலவுவது கவலைக்கு உரியதொன்றே. அரசியல் கருத்து வேறுபாடுகளால் நாடே குழம்பிப்போயுள்ளது எனக் கூறுவதில் தவறு எதுவுமில்லை.

## ஆசிரியருக்கான கடிதம்

# திறந்த பல்கலையில் உள்ள பரீட்சைநேர இடர்பாடுகள்

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிக் கற்கை நெறியானது பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. ஆனால் தற்பொழுது இந்தத் துறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாகப் பரீட்சை நடைபெறும்போது பல குறைபாடுகளை காணக்கூடியதாக வுள்ளது.

பரீட்சை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றால் மாணவர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படுவதே 9.30 மணிக்குத்தான். அதுவரை மண்டபம் பூட்டப்பட்டு இருக்கும். இதனால் மாணவர்கள் மன அமைதியுடனும் ஆறுதலாகவும் பரீட்சை எழுத முடியாத நிலை. பரீட்சை ஆரம்பமாகி முடிவடை யும்வரை துறை இணைப்பாளர் தொடர்ந்து பல நிபந்தனை களை சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருப்பதா அல்லது விடை எழுதுவதா என்று மாணவர்கள் குழம்பிப் போகிறார்கள். இணைப்பாளர் சொல்லும் நிபந்தனைகளைக் கேட்காமல் விட்டுவிட்டாலோ மண்டபத்துள்ளேயே எல்லோரையும்க் ஏசிக்கொண்டே இருப்பார்.

பரீட்சைக்குரிய கேள்விகளில் ஐந்து கேள்விகள் கட்டாய கேள்விகள். ஒருகேள்விக்கு பதில் எழுத இரண்டு கடதாசியாவது குறைந்தது தேவையாகும். மொத்தம் பத்து கடதாசி தேவையாகும். ஆனால் இரண்டு கடதாசி மட்டுமே தரப்படும். தேவையானதை கேட்டுவாங்க வேண்டும். அதனால் அரை மணி நேரத்துக்குப் பின்னர் யாராவது ஒருவர் மேசையில் தட்டிக் கொண்டே இருப்பார். மாணவர்கள் தமது கவனத்தைக் குவிக்க முடியாமல் திணறுகிறார்கள்.

பரீட்சார்த்திகள் முப்பது நிமிடம் முன்கூட்டியே பரீட்சை மண்டபத்துக்குள் தங்கள் இருக்கைகளில் அமரவேண்டும் என்பது பரீட்சை விதியாகும். ஆனால் இங்கு பரீட்சை தொடங்கும் நேரத்தில் மண்டபத்துக்குள் நுழைய அனுமதித்தால் மனஅமைதியுடன் பரீட்சை எழுதமுடியாத சூழல் தோன்றுகின்றது. இது சம்பந்தமாக பல்கலைக்கழக இணைப்பாளரிடம் முறையிட்டால் அவர் தனக்கு தெரியாது. சட்டத்துறைக்குரியவரே இதற்குப் பொறுப்பாளர். அவரையே கேளுங்கள் என்று கைவிரிக்கின்றார்.

சட்டத்துறை விரிவுரையாளர் சேவைக்குப் புதியவர். அவரே மேற்கூறிய விடயங்களை செய்கின்றார். அச்செயற்பாடு உடன் தவிர்க்கப்பட வேண்டும். நிரந்தர உத்தியோகத்தர்கள் பலர் இங்கு கடமையாற்றுகின்றார்கள். அவர்கள் இதுவரை பரீட்சையை திறம்பட நடாத்தி வந்தார்கள். எந்தவித குறைபாடுகளும் ஏற்படவில்லை. ஆனால் இப்போது மட்டும் ஏன் இந்த நிலை என்கிற கேள்விக்குச் சரியான பதில் இல்லை இதுவரை.

சட்டத்துறை மிகவும் முக்கியமானதுறை. திறன் தொழில் தகைமை கொண்ட துறை. இத்துறையில் கற்கும் மாணவர்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் கற்கைநெறியை பூர்த்தி செய்ய முயற்சிக்கும்போது இத்தகைய குளறுபடிகள் மாணவர் சித்தியடைவதைக் கேள்விக் குறியாக்கி உள்ளது.

இறுதிப் பரீட்சை 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் பரீட்சை நடத்த உரிய ஒழுங்குகளை விரைந்து செய்து தரவேண்டும் என்று விநயமாக கேட்கின்றோம். தகுதியானவர்கள் திறந்த பல்கலையில் இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர்களினால் அல்லது துணைவேந்தரினால் இப்பரீட்சையை நடாத்தி மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழியமைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், வடமாகாண ஆளுநர், முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கவனமெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

*மாணவன்,நாகராஜா*

சி.நற்குணலிங்கம்

# செயல் என்ற காரிய சித்தியே தலை சிறந்தது




**செயல் எனும் ஆயுதம்**
செயல் என்ற காரியமே தலை சிறந்தது.உன்னதமான ஆயுதமாக உத்வேகம் தருவது. இலட்சியப் பயணங்களை கட்டமைத்து உன்னதமான அடைவுகளைத் தரவல்லது. முயற்சியாகி இலக்கை அடையும் வரையான காலத்தை முடிவின்றி ஞாபகம் கொள்ளச் செய்வது.அந்தவகையிலே ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் அதைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற மனஉறுதியை உடையவராக இருக்க வேண்டும். அதன் வழியே அடைய நினைத்தவற்றை எல்லாம் அவர் எண்ணப்படியே அடைவார்.இதனை திருவள்ளுவர் வினைத் திட்பம் என்ற அதிகாரத்திலே பின்வரும் குறள் பாவின் ஊடு அற்புதமாக மொழிகிறார்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்து**
**எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்**

எனவே ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாகவே அதைச் செய்து முடிப்பது கடினம் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. செயலின் தொடக்கத்திலேயே முடியாது என்ற முற்றுப் புள்ளியை இட்டு நிரப்பிவிடக்கூடாது. முடியாது என்பது மனம்சார்ந்த வெளிப்பாடு.ஆக, வெற்றிக்கும் தோல்விக்கும் நாமே பொறுப்பாளிகள். ஏதற்கெடுத்தாலும் என்னால் முடியாது என்ற எண்ண வெளிப்பாட்டை வெளிப்படுத்துவோர் வாழ்வில் கீழ் நிலைக்கே செல்வர். திறமை மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். அதிலிருந்து தளர்வடைகின்ற போது 'முடியாது' என்ற தடைக் கற்களே இடர் தரும். முடியாது என்ற நினைதல் கொண்டோர் வாழும் போதே நடைபிணமாகவே கருதப்படுவர். இந்த நிலையில் இருந்து மீண்டுவர முயற்சிக்க வேண்டும்.

**இயலாமையை வெற்றி கொள்ள வேண்டும்**
'முடியாது' என்ற செயல் முனைவை 'முடியும்' என்ற உயர்நிலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதுவே வெற்றி என்ற கனியை தரும். முடியும் என்ற மூலதனமே உழைப்பின் ஆதாரம். வாழ்வின் நிலையான சந்தோசம். ஆம், முடியும் என்ற செயுலரு செயலுக்கான துணிவைத் தருகிறது. முடியாது என்று விதண்டாவாதம் புரிபவனின் வாழ்க்கைச் சுற்றோட்டம் கிடைத்ததை அனுபவிக்காமலும், கிடைக்காததை தேடி ஓடிக்கொண்டிருப்பதிலுமே முற்றுப் பெற்று விடுகிறது. இங்கு, கல்வியை கசடறக் கற்பதால் அறியாமையையும், உன்னத உழைப்பின் பயனாய் வறுமைமையையும், மகிழ்வைத் தரும் உறவுகளால் தனிமையையும், உயர்அடைவைத்தருகின்ற முடியும் என்ற செயலூடு இயலாமையையும் என்றும் வெற்றி கொள்ளலாம். இதனை உணர்ந்தும் புரிந்தும் கொள்வோம்.


உண்மையில் முடியும் என்ற நினைதல் வெற்றிக்கான வழிகளை தன்னிறைவோடு தந்திருக்கும். ஆக உங்களை நீங்களே அறிந்துகொள்ள முற்படுங்கள். இதனையே சோக்கிறடீஸ் எடுத்துரைக்கிறார். தன்னை அறிந்து கொண்டவன் பலவீனங்களை சரிசெய்துகொள்வான். பலமுள்ளவனாக மாற்றங்கண்டு 'முடியாது' என்ற முற்றுப்புள்ளியை அகற்றிவிட்டு இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பிப்பான். தன்னிடம் உள்ள ஆற்றல்களை திறம்பட வெளிப்படுத்துவான். ஒரு மனிதனுக்குள்ள சிறப்பான தன்மையே செயற்படக் கூடியவன் என்பதுதான். ஒருபோதும் விரக்தியடையாதீர்கள். முடியும் என்ற உயரிய குணத்தை மனதில் வழக்கப்படுத்தி முயற்சியைத் தொடருங்கள். வெற்றி நிச்சயம் கிட்டும்.



**முடியாது என்பது முடிந்தது**
உலகின் மிகப்பெரிய கணித மேதைகளால் கூட தீர்க்கமுடியாத இரண்டு கணக்குகளை கரும் பலகையில் எழுதிய ஆசிரியர் அவை பற்றி குறிப்பிடும் போது, 'இன்றும் புரியாத புதிராகவே இவை உள்ளன' என்றார். இந்த சந்தர்ப்பத்திலே வகுப்பறைக்குத் தாமதமாக வந்த மாணவன் ஒருவன் அந்தக் கணக்குகளை வீட்டுப்பாடம் என நினைத்து குறித்துக்கொண்டு போனான். மறுநாள் விடையுடன் வந்தான். அந்த சம்பவத்துக்கு விடையுடன் வந்த மாணவன் விளக்கம் கொடுக்கும் போது, "அது எவராலும் முடியாது என்று எனக்குத் தெரியாது. எனவே என்னால் முடிந்தது" என்று குறிப்பிட்டான். அவர் வேறு யாருமல்லர் உலகப் புகழ்பெற்ற கணிதமேதை ஜார் ஜடாந்த்ஸிக்.

இதேபோன்று சிறப்புத் தேவையுடையோர் என்னால் முடியும் என்ற மனப்பாங்குடன் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர். அவர்கள் சிறப்பாக வாழ்கின்றனர். இரண்டு கால்களையும் இரண்டு கைகளையும் இழந்த ஆஸ்திரேலியாவை பிறப்பிடமாகக் கொண்ட 'நிக்வியூச்' என்பவர் இரண்டு பட்டக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளார். அவர் தன்வசம் கொண்டுள்ள திறமையால் பிரபல்யம் அடைந்துள்ளார். இவருடைய கருத்தமர்வுகளில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கானோர் காத்துக்கிடக்கின்றனர். இவரைப் போலவே சீனாவைச் சேர்ந்த 69 வயதுடைய 'ஸியாபோயு' என்பவர் தனது இரண்டு கால்களையும் இழந்தவர். ஆனாலும் எவறெஸ்ற் சிகரத்தை தொட வேண்டும் என்பதையே கனவாக கொண்டிருந்தார். 18 ஆண்டுகளாக கடும் முயற்சிகளை மேற்கொண்டார். அவருடைய கனவு இவ்வாண்டு மெய்ப்பட்டுள்ளது. வெற்றியின் முதல் எதிரி முடியாது என்ற செயல்வினை என்பதனை மனதில் நிறுத்திக்கொள்ள இவை நல்ல பாடமாக அமைகின்றன.

"தன்னை அறிந்துகொண்டவன் பலவீனங்களை சரிசெய்து கொள்வான். பலமுள்ளவனாக மாற்றங்கண்டு 'முடியாது' என்ற முற்றுப்புள்ளியை அகற்றிவிட்டு இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பிப்பான். தன்னிடம் உள்ள ஆற்றல்களை திறம்பட வெளிப்படுத்துவான். ஒரு மனிதனுக்குள்ள சிறப்பான தன்மையே செயற்படக்கூடியவன் என்பது தான். ஒருபோதும் விரக்தியடையாதீர்கள். முடியும் என்ற உயரிய குணத்தை மனதில் வழக்கப்படுத்தி முயற்சியைத் தொடருங்கள். வெற்றி நிச்சயம் கிட்டும்.



தவிர முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் ஜப்பானியர்கள். உலகிலேயே தலைசிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

**முயற்சி திருவினையாக்கும்**
பெரும் காரியங்கள் வல்லமையால் நிறைவு பெறுவதில்லை. முடியும் என்ற மனோபாவம் தருகின்ற ஊக்கத்தால் நிறைவேறுகின்றன.

எனவே அன்னைக்கு பரிசுத்தமான அன்பைப் பரிசளி. தோற்றவனுக்குத் துணிவைப் பரிசளி, ஏழ்மைக்கு முயற்சியைப் பரிசளி, எதிரிக்கு மன்னிப்பைப் பரிசளி. முடியாது என்ற மனதுக்கு முடியும் என்ற உணர்வைப் பரிசளி. வாழ்வு என்றும் சிறந்து விளங்கும். மகிழ்தலின் வசந்த காலம் உன் பாதை எங்கும் பூக்களை சொரியும். என்னால் ஒன்றுமே செய்ய இயலாது என்ற எண்ணத்தை தூக்கி எறிவோம். முடியும் என்ற ஆயுதம் கொண்டு புது சரித்திரம் படைப்போம்.

---

நாளை
**17.07.2018**
செவ்வாய்க்கிழமை
ஆடி 01

திதி: ஷஷ்டி மு.இ. 08.45
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.02.32
சுபநேரம்: 04.30–06.00 வரை
ராகுகாலம்:12.00–01.30 வரை


ES Printers
மணியம் கபே
Maniyam Cafe
Vegetarian Hotel
075 054 3823
GVS
MEMORABILIA
பனர் பிறிண்ட்
(Banner),
35/=
குறைந்த விலையில்
உங்களுடைய சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்...
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ–9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள் சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book) காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில்
குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

## கண்ணீர் அஞ்சலி

செல்வி **வளர்மதி குமாரசாமி**



அவனியிலே அவதரித்து ஆசிரியப்
பணியதனில் ஆருயிர்களாய்
இணைந்தோமே - நாம்
பாதியிலே நீயும் பரிதவிக்க விட்டு
- எம்மை
வளர்மதியே வானகம் சென்றாயோ

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**

**சக ஆசிரிய நண்பர்கள்**

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**திருமதி கங்காதேவி சுப்பிரமணியம்**
**(நளினா அக்கா)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எமது பேரன்புக்கும் மரியாதைக்குமுரிய **திருமதி கங்காதேவி சுப்பிரமணியம்** அவர்கள் தேகவியோகம்அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியுற்றோம். அன்னார் எமது குல தெய்வம் இலுப்பைத்தாழ்வு வெல்வில் முருகன் மீது கொண்டிருந்த பற்றும் எமது தந்தையாருடன் தோளோடு தோளாக நின்று சிதிலமடைந்த ஆலயத்தைப் புனரமைக்க அவருடைய குடும்பத்தினர் பேராதரவோடு செய்த அளப்பரிய பணிகள் மறக்கற்பாலதன்றோ? எமது முருகப் பெருமானுக்கு யுத்தத்தால் அழிக்கப் பட்ட கம்பீரமான ராஜகோபுரத்தை மீள அமைக்க வேண்டும் என வேணவா கொண்டு பார்க்கும் போதெல்லாம் அதைப்பற்றியே பேசி வந்தார். முருகனின் அருளும் அம்மையாரின் ஆத்மபலமும் ஒன்று சேர்ந்து இச்செயல் சீக்கிரம் கைகூடும் என்பதில் ஐயமில்லை. அன்னார் எமது தந்தையார் மீதும் குடும்பத்தினர் மீதும் ஆழ்ந்த அன்பும் மரியாதை யும் கொண்டவர். எப்போதும் எமது முன்னேற்றம் கருதியவர். எமது தந்தை யாரின் சடுதியான இழப்பின் போது பெரும் நிதி உதவிகள் செய்ததை நாம் என்றும் மறவோம். அன்னாரை இழந்து வாடும் அருமைக் கணவர் Dr. நா.சுப்பிரமணியம், பிள்ளைகள் - தனுஜா, கௌசலா மற்றும் மருமக் கள், பேரப்பிள்ளைகள், உற்றார், நண்பர்கள் எல்லோருக்கும் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா இலுப்பைத் தாழ்வு முருகன் திருவடியில் சாந்திபெறுவதாக.

**சிவப்பிரம்மஸ்ரீ**
**சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்**
**குடும்பம் (பரம்பரை ஆதீனம்)**

**சங்கானை.** (CS/18269)(11,17)

## OBITUARY NOTICE

### Mandalanayaham Anton Kumarakulasingam

*(Rtd. Asst. Valuer. Panel Valuer BOC)*



Mr.M.A.Kumarakulasingam of Manipay and presently residing at Nallur entered into glory on Saturday the 14th of July 2018.

He is the beloved son of late Mr. & Mrs. Mandalanaya ham beloved Son in law of late Mr. & Mrs. Murugesu, loving husband of Leela logeswary, ever loving Father of Krishanthy (Krishy - Teacher Chundikuli Girls' College) and loving father in law of Samson Gnanaharan (DFCC Bank), ever loving Grand father of Benjamin Chevan (Grade - 6, SJC), Dilan Daniel (Grade - 5, SJC), Loving Brother of late Mr. A.T.S.K. Singam, late Mrs. Regina Stephene, late Miss Selina Jeyarani, late Isabella Ratnam, late Miss Rita Jeyadevi and Miss Christabell Rasamalar (Rtd. Teacher - Manipay Hindu College) and Mrs. Eva Selvarani Murugiah (Canada), Brother in law of Mrs. Ingitham, Mr. Stephene, Allan Ratnam (Canada) and Mr. Murugiah.

Funeral service will be held at his residence at 3.30 P.M. on Monday (16.07.2018) and burial will take place at Ceylon Penticostal Mission Graveyard at Kottaddy.

**286, Kachcheri Nallur Rd., Jaffna. 0212224431**

**Informat: Mrs. S.G.Krishanthy**

(CS 9639/15/17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.07.2018 பண்டார நாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அதியுயர் விருதில் ஒன்றான **தேச கீர்த்தி விருது** பெற்ற எமது நண்பனும், இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய வேலைத்தள களஞ்சியசாலை அதி காரியாக கடமையாற்றும், மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் உறுப்பினரும் ஆகிய

**ஆறுமுகம் கரன்**

அவர்கள் விருது பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

சாயி இல்ல நண்பர்கள்,
நல்லூர்.

# Ministry of Agriculture
## Agriculture Sector Modernization Project

International Development Agency of the World Bank with Ministry of Agriculture is implementing Agriculture Sector Modernization Project in line with a Country Partnership Strategy (CPS) to support small holder farmers to produce competitive and marketable commodities, improve their ability to respond to market requirements, and move towards increased commercialization. The project implementation period is 5 years and estimated cost of the project is US $ 58.63Mn.

Applications are invited to the Provincial Project Management Unit of Northern Province by the Chief Secretary, Northern Province, from qualified candidates who possess the qualification and experience for the following post according to the circular of Management Services Department No 01/2016 of 24.03.2016.

**Agriculture Scientist (PS 3) - 01 Post**

1. A Bachelor's Degree in the relevant field which is recognized by the University Grants Commission

WITH

At least 10 Years Post qualifying experience in managerial level out of which 05 Years should be in the Senior Managerial level in the relevant field.

OR

2. A Bachelor's Degree in the relevant field which is recognized by the University Grants Commission

AND

A Postgraduate Degree or full membership of a recognized professional institution in the relevant field.

WITH

At least 08 Years Post qualifying experience in managerial level in the relevant field.

OR

3. Class I officer of Government All Island services or a similar status in the relevant field.

WITH

At least 07 Years experience in the Class I post in the relevant field.

**Salary:** Salary is based on the Management Services Circular No. 01/2016 of 24.03.2016

**General Conditions:**

a. **Age Limit** – Should be below 65 years
b. **Condition of Employment**
Officers belong to government services will be recruited on secondment basis and persons outside the government service will be recruited on contract basis. All appointments will be initially for one year period and an extension of service will be based on the successful performance.

**Applications:**

All applicants are requested to forward their applications together with Curriculum Vitae along with two non – related referees and copies of the certificates under registered cover on or before 30th July 2018 to reach the address, **Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, 127, Kachcheri Nallur Road, Jaffna** Applicants currently in government / Semi government services should forward their applications through their head of the Departments.

Applied post should be clearly stated on the left hand corner of the envelope containing application.

The decision of the Chief Secretary is final and conclusive on the above recruitment.

A.Pathinathan,
Chief Secretary,
Northern Province.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
advt@uthayan.com
உதயன்







## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | 9 | | 8 | |
| | 2 | | | | 6 | | | |
| | 5 | | | | | 7 | | 3 |
| | | | | 3 | | | 7 | |
| 9 | 1 | | 8 | 6 | | 2 | 3 | |
| | | 5 | | 2 | | | 6 | 1 |
| | 9 | | 6 | | 3 | 4 | | 8 |
| | 4 | 3 | | | 8 | | 1 | |
| 5 | | | | | | 3 | | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 4 | 1 | 5 | 6 | 9 | 8 |
| 4 | 5 | 6 | 3 | 9 | 8 | 2 | 7 | 1 |
| 1 | 8 | 9 | 2 | 7 | 6 | 4 | 5 | 3 |
| 9 | 1 | 7 | 8 | 4 | 2 | 5 | 3 | 6 |
| 8 | 2 | 3 | 6 | 5 | 9 | 7 | 1 | 4 |
| 6 | 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 2 | 9 |
| 5 | 6 | 1 | 9 | 2 | 4 | 3 | 8 | 7 |
| 7 | 9 | 8 | 5 | 6 | 3 | 1 | 4 | 2 |
| 2 | 3 | 4 | 1 | 8 | 7 | 9 | 6 | 5 |

நேற்றைய விடை




**மேடம்:** தாமதமான செயலில் அனுகூலம் தேடி வரும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும்.

**இடபம்:** மனதிற்கு சங்கடமான சூழ்நிலை உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். பணவரவு சுமார். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர்.

**மிதுனம்:** உடல்நலத்தில் கவனம் அவசியம். திட்டமிட்ட செயல் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீர்பெற நண்பரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் கருத்துக்கு குடும்பத்தினர் மதிப்பளிப்பர். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். செயல்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவது அவசியம்.தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும்.

**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயலால் பெருமிதம் கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும்.

**துலாம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இயங்கும்.பிறர் பார்வையில் அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ அனுகிரகத்தால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். குடும்பத்தினர் அதிக அன்பு பாராட்டு வார். தொழில் வியா பாரத்தில் இருக்கிற குறுக்கீடு விலகும். வருமானம் உயரும்.

**மகரம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்ய லாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ப்பணி நிறைவேற தாமதமாகும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**மீனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியா பாரத்தில்கடந்தகாலஉழைப்பின்பயன்கிடைக்கப்பெறுவீர்கள். லாபம் உயரும், பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

# சமுத்திரக்கனி நடிப்பில் 12 மணிநேர படம் பற



சமூகத்தில் நடக்கும் அவலங்களைத்தட்டிகேட்கும், அநீதிகளுக்குஎதிராக போராடும்வழக்கறிஞராகவும், தன் குழந்தையைப் பறிகொடுத்த தந்தையாகவும், காதலர்களின்காவலனாகவும்சமுத்திரகனிநடிக்கும் படம் 'பற'.

இந்தப்படத்தைபச்சைஎன்கிறகாத்து, மெர்லின்படங் களைஇயக்கியவ.கீராஇயக்குகிறார். அவர்படம்பற்றி தெரிவிக்கையில்,

பாதைஓரத்தில்வாழவழியற்றஒருவன், ஒருகிராமத் திலிருந்து புறப்படும் காதலர்கள், வயதான காலத்தில் தனிமையிலிருந்துவிடுபடப்புறப்படும்முதியோர்கள், ஒரு திருடன், ஒரு வழக்கறிஞர், ஒரு கட்சி தலைவர், எனப்பல்வேறு மாந்தர்களின் வாழ்க்கையில் ஓர் இர வில் தொடங்கி அடுத்த பகலில் முடியும் 12 மணி நேர கதைதான் 'பற'.

இந்தப்படத்தில்சமுத்திரகனி, சாந்தினி, முனிஸ்காந்த், நிதிஷ்வீரா, முத்துராமன், சாஜீமோன், வெண்பா, தீக் கதிர் குமரேசன், கம்பம் மீனா, சூப்பர் குட் சுப்ரமணி, பேராசிரியர் செல்வக்குமார், அஸ்மிதா, வின்னர் ராமச்சந்திரன், பிரின்ஸ் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

## twitter

**அமீர் @AMEERFAJ**

"பேங்க்'ல 'பணம் சேமிக்க' அக்கவுண்ட் ஓப்பின் பண்றவங்கள விட 'கடன் வாங்க' ஓப்பின் பண்றவங்க தான் அதிகம்...

**LEKHA@YALISAISL**

யாதொருவரின் அன்பிலும் தேங்கி நின்றுவிடாமல் விடை பெற்றுச் செல்வதே புத்திசாலித்தனம்..

**ARCHANA @ARCHAN**

"கதை சொல்லுங்க பாட்டின்னு எப்போ கேட்டாலும் கதை சொல்லும் திறமை பாட்டிகளுக்கே உரித்தானது..!

**தமிழன்பன் ®**

எப்பொழுது வேண்டுமானாலும் விழுந்து விடக்கூடும் ஆடம்பரம் என்னும் ஆடும் பம்பரம்...

## மனிதனின் வெற்றிகள்...



1 வயதில் வெற்றி என்பது பிறர் துணையில்லாமல் நிற்பது...
4 வயதில் வெற்றி என்பது ஆடையில் சிறுநீர் போகாமல் இருப்பது...

8 வயதில் வெற்றி என்பது வீட்டிற்குவழி தெரிவது....
12 வயதில் வெற்றி என்பது நல்ல நண்பர்கள் இருப்பது...
18 வயதில் வெற்றி என்பது ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பது...
23 வயதில் வெற்றி என்பது பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றிருப்பது...
25 வயதில் வெற்றி என்பது பணம் சம்பாதிப்பது...
30 வயதில் வெற்றி என்பது குடும்பத் தலைவனாய் இருப்பது...
35 வயதில் வெற்றி என்பது பணத்தை உருவாக்குவது...
45 வயதில் வெற்றி என்பது இளமையாய் தோன்றுவது...
50 வயதில் வெற்றி என்பது பெற்ற பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை தருவது...
55 வயதில் வெற்றி என்பது இன்னும் உன் செயல்களில் திறமையாக இருப்பது
65 வயதில் வெற்றி என்பது நோயில்லாமல் இருப்பது...
70 வயதில் வெற்றி என்பது யாருக்கும் பாரமில்லாமல் இருப்பது...
75 வயதில் வெற்றி என்பது பழைய நட்பு தொடர்ந்திருப்பது...
81 வயதில் வெற்றி என்பது வீட்டிற்கு வழி தெரிவது...
86 வயதில் வெற்றி என்பது மறுபடியும் படுக்கையில் சிறுநீர் போகாமல் இருப்பது...
90 வயதில் வெற்றி என்பது யார் துணையும் இல்லாமல் நடப்பது...

**வாழ்க்கை என்பது ஒரு வட்டம்.**



# உயிர்களிடத்தில் அன்பு


இந்த உலகில் எத்தனையோ வகையான உயிரினங்கள் உள்ளன. மனிதர், பறவைகள், மிருகங்கள் என்று அவை எண்ணிலடங்காதவை. அவை யாவற்றுள்ளும் சிறந்தது மனித இனமே. பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மனிதன் என்றைக்கும் மனிதனாக வாழவேண்டும். மனிதனை மனிதனாக வாழ வைப்பவை நல்ல குணங்களும் நல்ல செயல்களுமே. அன்பு என்னும் உயர் குணம் எல்லா குணங்களுக்கும் நற்செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

"அன்புநிறைய உடையவர்கள் மேலோர்" என்று சுப்ரமணிய பாரதியார் பாடியுள்ளார். "நல் அன்பால் வளர்ந்திடுக. இன்ப நல்வாழ்வை" என்று பாரதிதாசனும் பாடியுள்ளார்.

அன்பு என்பது கொடுக்கக் கொடுக்கக் குறையாத அருச் செல்வமாகும். பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி சகோதரர் நண்பர் உறவினர் அயலவர் என்று தம்முடன் உறவு கொண்டவர்கள் மீது மனிதன் அன்பு வைக்கின்றான். இவ்வாறு குடும்பத்தவர்மீதும், உற்றார்மீதும் வைக்கின்ற அன்பு காலப்போக்கில் உயிர்கள் எல்லாவற்றையும் நேசிக்கச் செய்கின்றது. மனிதர்கள் உயிர்களிடத்தில் காட்டுகின்ற கருணையே சீவகாருணியம் எனப்படும்.

அன்பின் அடித்தளத்திலேயே அந்தக் கருணை உருவாகிறது. இறைவனை நேசிப்பது போல அவனது படைப்புக்களான ஏனைய உயிர்களையும் நேசிப்பது சிறந்த பண்பாகும்.

அவ்வுயிர்களிடத்து நாம் அன்பும் கரிசனையும் காட்டவேண்டும். தமது உயிரைப் பாதுகாப்பது போல பறிஉயிர்களையும் பாதுகாக்கும் மனிதர் மனிதருள் மாணிக்கங்கள் எனப் போற்றப்பொறுகின்றனர்.





# உரையாடல் (கணனி)

**மேரி-** கணனி எதற்காக உருவாக்கப்பட்டது மாமா?

**மாமா-** மனிதனது தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது.

**தீபன்-** மாமா, கணனி மனிதனது உதவியின்றி இயங்குமா?

**மாமா-** அது தானாக இயங்காது. மனிதனது கட்டளைக்கு ஏற்பவே செயற்படும். கணனியின் ஒவ்வொரு அசைவையும் மனிதன்தான் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இதனால்தான் இதனை "இலத்திரனியல் முட்டாள்" என அறிஞர்கள் அழைக்கின்றனர்.

**மேரி-** கணனி கல்வி கற்கும் எமக்கு எந்த வகையில் துணை புரிகின்றது மாமா?

**மாமா-** இன்று கணனி ஆசிரியராக இருந்து கற்பதற்கு துணை புரிகின்றது. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புதியவற்றை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்யவும் தேவையான நேரத்தில் அந்தத்தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் கணனி எமக்குத் துணை புரிகின்றது.

**தீபன்-** கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் யார் மாமா?

**மாமா-** கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் சாள்ஸ் பபேஜ் ஆவார்.

**மேரி-** இவரைத்தானே மாமா கணனியின் தந்தை என அழைக்கின்றனர்?

**மாமா-** ஆம்; சாள்ஸ் பபேஜ் கணனியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

**மேரி-** அவர் எங்கே பணியாற்றினார் மாமா?

**மாமா-** சாள்ஸ் பபேஜ் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தல் கணனித்துறைப் பேராசிரியராக பணியாற்றினார்.

**ராணி-** அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

**மாமா-** இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர்

**மேரி-** உலகின் முதலாவது கணனியின் பெயர் என்ன மாமா?

**மாமா-** உலகின் முதலாவது தானியங்கிக் கணனியின் பெயர் மார்க்-1 ஆகும்.

**தீபன்-** இந்தக்கணனி எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது?

**மாமா-** 1944ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

**மேரி-** இந்தக்கணனியை உருவாக்கியவர் யார்?

**மாமா-** மார்க்-1 என்ற கணனியை ஹாங் வோர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மருத்துவர் ஹதவோட் எச் அய்க்கன் உருவாக்கினார்.

**மேரி-** மார்க்-1 கணனிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட கணனியைப் பற்றிக்கூறுங்கள் மாமா?

**மாமா-** "எனியாக்" என்பது அந்தக்கணனியின் பெயராகும். இதுதான் உலகின் முதலாவது இலத்திரனியம் கணனியாகும். இந்தக்கணனி 1946ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1949ஆம் ஆண்டு எட்சாக் என்ற கணனியும் 1952ஆம் ஆண்டு எட்வோக் என்ற கணனியும் உருவாக்கப்பட்ட வருடத்துக்கு வருடம் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன கணனிகள் விற்பனைக்கு வருகின்றன. கணனி யுகத்தின் பெரிய வளர்ச்சியால் உள்ளங்கைக் கணனிகள் விற்பனைக்கு வந்துவிட்டன.

தீபன்- சிறு வயதில் இருந்தே நாம் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா?மாமா

**மாமா-** ஆம் இன்று கணனி நுழையாத துறைகளே இல்லை. எனவே எமது கல்வி அறிவை வளர்த்துக் கொள்வதற்கு கணனிக் கல்வி அவசியமாகும். கணனி அறிவைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் நவீன யுகத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்படும்.

**மேரி-** இன்று கணனியைப் பற்றி அறிந்து கொண்டோம். நன்றி மாமா.

# வெண்ணிலா



இரு விளக்கில் ஒரு விளக்காம்
வெண்ணிலாவே
இராக்காலம் குளிர் கொடுப்பாய்
வெண்ணிலாவே.

சூரியன் போய் மறைந்தபின்பு
வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய்
வெண்ணிலாவே.

தயிர்க் கடலில் வெண்ணெய் போல
வெண்ணிலாவே
தனி விசும்பிற் தவழ்ந்திடுவாய்
வெண்ணிலாவே.

பெண்கள் முகம் போல் வருவாய்
வெண்ணிலாவே
பிறையாகி வளைந்திடுவாய்
வெண்ணிலாவே.

எண்ணிரண்டு கலையுடனே
வெண்ணிலாவே
எழுந்து நிலாப் பொழிந்திடுவாய்
வெண்ணிலாவே

வளர்ந்து பின்பு தேய்ந்திடுவாய்
வெண்ணிலாவே
வறுமை செல்வமுனக்கு முண்டோ
வெண்ணிலாவே

ஒருநாளில் மறைந்திடுவாய்
வெண்ணிலாவே
ஒளியின்றி வாடுவோம்
வெண்ணிலாவே

அமுதவொளி பரப்பி வரும்
வெண்ணிலாவே
அன்புடனே வாழியென்றும்
வெண்ணிலாவே



# பப்பாளி சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்



அனைத்து காலங்களிலும் விலை மலிவில் கிடைக்கும் ஒரு பழம்தான் பப்பாளி. விலை குறைவில் கிடைப்பதால்தானோ என்னமோ பலரும் இதை விரும்பிச் சாப்பிடுவதில்லை. ஆனால் இந்தப்பழத்தில் ஏனைய பழங்களில் நிறைந்துள்ள சத்துக்களை விட ஏராள்மான அளவில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

அதில் நார்ச்சத்துக்கள், கரோட்டீன், விற்றமின் சி போன்ற கனிமச்சத்துக்களும், அர்ஜினைன் மற்றும் கார்பைன் போன்ற அத்தியாவசிய நொதிகளும் உள்ளன. சரி, கோடையிலும் அதிகம் கிடைக்கும் இந்தப் பப்பாளியை சாப்பிடுவதால் பெறும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம்.

**செரிமானக் கோளாறுகள்**

பப்பாளியில் உள்ள பாப்பைன் என்னும் செரிமான நொதி, செரிமான கோளாறுகள் ஏற்படாமல் தடுப்பதோடு, மலச்சிக்கல் ஏற்படுவதையும் தடுக்கும். அதிலும் இதனை உணவு உட்கொண்ட பின் உட்கொண்டால், எளிதில் உண்ட உணவு செரித்து, வயிறு உப்புசம் அடையாமல் இருக்கும்.

**இதய நோய்கள்**

பப்பாளியை தினமும் உட்கொண்டு வருபவர்களுக்கு, இதய நோய்கள் வரும் வாய்ப்புக் குறையும். எனவே உங்களுக்கு இதய பிரச்சினைகள் ஏதேனும் நேராமல் இருக்க வேண்டுமானால், பப்பாளியை தினமும் சிறிது உட்கொள்ளுங்கள்.

**கொழுப்புக்கள் குறையும்**

புப்பாளியை சாப்பிடுவதன் மூலம், அதில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்புக்கள் குறைக்கும்.

**அழற்சி அல்லது வீக்கம்**

பப்பாளியை அன்றாடம் உட்கொள்வதால், அதில் உள்ள தனித்தன்மை வாய்ந்த நொதிகள், உடலினுள் நாள்பட்ட அழற்சி அல்லது வீக்கம் ஏற்படுவதைத் தடுத்து நல்ல பாதுகாப்பு வழங்கும்.

**நோயெதிர்ப்புச் சக்தி**

உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க நினைத்தால், பப்பாளியைச் சாப்பிடுங்கள். ஏனெனில் இது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தின் வலிமையை மேம்படுத்தும்.

**புற்றுநோய்**

நன்கு கனிந்த பப்பாளியை தினமும் சாப்பிட்டு வந்தால், புற்றுநோய் வரும் அபாயம் குறையும். இதற்கு அதில் உள்ள சக்தி வாய்ந்த சத்துக்கள்தான் முக்கிய காரணம்.

**உடல் வலிமை**

பப்பாளியை தினமும் உட்கொண்டு வந்தால், அது உடலை புத்துணர்ச்சியுடனும், வலிமையுடனும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளும்.

**எடை குறையும்**

உடல் எடையைக் குறைக்க நினைப்போருக்கு பப்பாளி மிகவும் சிறப்பான பழம். இதனை அன்றாட உணவில் எடையைக் குறைக்க நினைப்பவர் உட்கொண்டு வந்தால், அதில் உள்ள நார்ச்சத்து உணவை எளிதில் செரிமானமடையச் செய்து, கொழுப்புக்கள் உடலில் தங்குவதைத் தடுப்பதோடு கரைத்தும் வெளியேற்றி, உடல் பருமனடைவதைத் தடுக்கும்.

**கண் பார்வை**

பப்பாளியில் சக்தி வாய்ந்த கரோட்டீன்கள் உள்ளன. இவை கண்களில் ஏற்படும் கோளாறுகளைத் தடுக்கும். எனவே உங்களுக்குப் பார்வை கோளாறு வராமலிருக்க பப்பாளியை தினமும் சிறிது உட்கொண்டு வாருங்கள்.

**பொலிவான சருமம்**

பப்பாளியை உட்கொண்டு வந்தால், சருமப் பொலிவு மேம்படும். இதற்கு அதில் உள்ள பாப்பைன் என்னும் நொதி தான் காரணம். இது தான் இறந்த செல்களை வெளியேற்றி, சருமத்தைப் புத்துணர்ச்சியுடனும், சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறது. இந்தப்பழத்தை உட்கொள்வதுடன், மசித்து முகத்தில் தடவி ஊற வைத்து கழுவி வந்தாலும் நன்மை கிடைக்கும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 60 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 120 | 160 | 200 |
| பாகல் | 280 | 260 | 250 | 240 |
| க.கிழங்கு | 100 | 140 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 160 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 280 | 160 | 160 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 100 | 50 |
| கீரை | 40 | 15 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 400 | 500 | 300 |
| புடோல் | 120 | 70 | 80 | 120 |
| கோவா | 140 | 160 | 180 | 160 |
| வெண்டி | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 180 | 260 |
| லீக்ஸ் | 240 | 140 | 200 | 280 |
| தேங்காய் | 70 | 60 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 130 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 120 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 160 | 300 | 240 |
| கரட் | 280 | 240 | 200 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |


**வீடு காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கு, எச்சாட்டி வீதியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

077 666 8352, 076 365 8948

**விற்பனைக்கு**

யாழ். கில்னர் லேனில் 2 பரப்புக்காணியும், யாழ். K.K.S வீதியில் கொக்குவிலில் 2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 723 2535

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 829 | சீட்டிழுப்பு திகதி 2018.07.14 | சனிக்கிழமை

P 12 24 41 47

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,346,828/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

கோடிபதி சனிதா

சீட்டிழுப்பு வாரம்: 315 | வர்ணம் : பச்சை | சீட்டிழுப்பு திகதி: 2018.07.15

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 87,076,453/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: G 05 14 73 78

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 312 | வர்ணம் : இளநீலம் | சீட்டிழுப்பு திகதி: 2018.07.15

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,570,675/-

வெற்றி இலக்கங்கள்: 03 54 67 69 | ஆங்கில எழுத்து N

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்

திகதி 15.07.2018 | வெற்றி வாரம் 2330 | வர்ணம் ஊதா

இடபம் | வெற்றி இலக்கங்கள் 02 19 37 46 | செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 7,098,684/=

2018.07.17 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, உப அலுவலகம் தெல்லிப்பழை

**வட்டாரம் :- 18, மாவிட்டபுரம் கீரிமலை வீதி.**
**ஆதன இலக்கம் :- 115**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை உப அலுவலகத்துக்குட்பட்ட மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் வட்டாரம் 18 ஆதன இல. 115 இல் உள்ள ஆதனமானது எமது ஆதனப்பதிவேட்டில் உ.கோ.காசிப்பிள்ளையும் மற்றையோரும் என்னும் பெயரிலுள்ளது.

**ஆதன விவரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பழை கோவில்பற்று மாவிட்டபுரம் இறை, பிரதேச செயலர் பிரிவு வலி.வடக்கு, கிராம சேவகர் பிரிவு J/231 " உச்சித்திரை" நிலப்பரப்பு 36 குளி 11.02 (நிலப்பரப்பு முப்பத்தாறு குழி பதினொன்று தசம் சைபர் இரண்டு)

**கிழக்கு** - ராசதுரை கஜேந்திரனுக்குரிய ஆதனமும், சிங்கராஜா புதல்வி கிரிஜாவுக்குரிய ஆதனமும், சாதாரணம் வேலாயுதப்பிள்ளைக்குரிய ஆதனமும்
**வடக்கு** - சாதாரணம் வேலாயுதபிள்ளைக்குரிய ஆதனமும், வீதியும்
**மேற்கு** - ஒழுங்கை
**தெற்கு** - ஒழுங்கை

உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.மகாலிங்கம் அவர்களால் அளந்து வரையப்பட்ட வரைபட இல 1105. 2013.03.24 ஆம் திகதி படத்தின் படியாக துண்டு 01 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 36 குளி 11.02 ஆகும்.

மேற்குறித்த ஆதனமானது 3148 ஆம் இலக்க 03.03.2014 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் நிறைவேறிய பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் மார்க்கண்டு ஜெகநாதன் மனைவி பரமேஸ்வரி என்பவரினை வந்தடைந்துள்ளது. இவ்வாதனத்தினைப் பிரதேசசபை ஆதன வரிப்பதிவேட்டில் மார்க்கண்டு ஜெகநாதன் மனைவி பரமேஸ்வரி தனது பெயரில் ஆதனப்பெயர் மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பித்துள்ளார்.

மேற்குறித்த பிரகடனப்படுத்தல் உறுதியில் குறித்த ஆதனமானது தனது தகப்பனாரின் தகப்பனாராகிய குஞ்ஞானம் தண்டிகை கனகராயர் என்பவரது ஆதனமென்றும், குஞ்ஞானம் தண்டிகை கனகராயருக்குப் பின்னர் அவரது மகனும் தனது தந்தையுமாகிய கனகராயர் கந்தையா என்பவரை வந்தடைந்ததென்றும், கடந்த முப்பத்தியிரண்டு வருடங்களுக்கு மேலாகத் தனது ஆட்சியிலிருந்து வருகின்றதென்றும், குறித்த ஆட்சியானது தொடர்ச்சியானதும் இடையறாததும் நீண்ட காலத்தையுடையதும் எவருக்கும் மாறாததுமானதும் என்றும், ஆதனத்தின் மூல உறுதியானது குஞ்ஞானம் தண்டிகை கனகராயர் என்பவரது பெயரில் இருந்தது என்றும் குறித்த மூல உறுதி குறித்த கனகராயரது வசமிருந்தது என்றும் 1958ஆம் ஆண்டு கலவரத்தின்போது கொழும்பில் எரிந்து விட்டதென்றும் குறித்த உறுதியின் பிரதியைப் பெற காணிப் பதிவகத்தில் தேடுதல்கள் செய்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்றும் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் குறித்த பிரகடன உறுதியை நிறைவேற்றுவதாகவும் விண்ணப் பதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோஆட்சேபனை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆதனத்தைப் பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிவடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (CS/18189)(11,17) **09.07.2018**

# பங்குச்சந்தையும் முயற்சியாண்மையின் பயனுறுதியும்

பாவலன்

பங்குச்சந்தை முதலீடுகளை முயற்சியாண்மையின் பிரதிவிம்பமாகவும், மறுவடிவமாகவும் நோக்க முடியும். அந்தவகையிலே பங்குச்சந்தை முதலீடு என்பது, வியாபார முயற்சியின் தன்மை, தொடர்புடைய உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகள், சந்தைச்சூழல், வாடிக்கையாளர்கள் மற்றும் கம்பனியின் முகாமைத்துவம் சார்ந்து முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பாக மேற்குறிப்பிட்ட செயல் வெளிகள் குறித்து முழுமையான பகுப்பாய்வை மேற்கொள்வதோடு தொடர்புபடுகிறது.

**முயற்சியாளர்**

அதே போன்று முயற்சியாளன் தன்னிடமுள்ள வியாபாரத் திட்டத்துக்கு செயல் வடிவத்தை கொடுக்கின்றபோது, அத்திட்டத்துடன் இணைந்த வியாபாரச் செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

**வியாபாரம்**

பங்குமுதலீட்டுக்கும், முயற்சியாண்மைக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடாக சில விடயங்களை நோக்க முடியும். பங்குமுதலீட்டைப் பொறுத்தவரையில், எமக்காக யாரோ ஒரு சில முன்னோடிகள் வியாபார முயற்சிக்குத் தேவையான அடிப்படைகளை நிறைவு செய்துள்ள தன்மைகளை உணரமுடிகிறது. கம்பனியின் வியாபாரத்தை முழுமையாக புரிந்துகொள்வதுடன், நாம் கொண்டுள்ள ஒத்த சிந்தனையுடன் கம்பனி வழிநடத்திச் செல்லப்படுவதனை அவதானிப்பின் சந்தேகமின்றி அக்கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்து செயலுறுதியோடு வியாபார முயற்சியில் எம்மை இயக்குனராக மாற்றிக்கொள்ள முடியும்.

**திட்டமிடல்**

தவிர, நாம் பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக நோக்குகின்ற ஒரேயோரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையுடன் ஒப்பிட்டு நோக்க முடியும். மாறாக, பரிமாற்றல் கருவியாக (Trading Instruments) நோக்குமிடத்து அதன் பெறுமதி அல்லது விலைகள் காலத்துடன் இணைந்ததாக மாறிக்கொண்டிருப்பதனைத் தவிர்க்க முடியாது. அடுத்த விலை அசைவை எதிர்பார்த்து மீள் விற்பனையை நோக்காகக் கொண்டு பங்குகளை கொள்வனவு செய்தல் ஒரு முதலீட்டு (Investing) முயற்சியல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அது பங்குவியாபாரமாக (Trading) அமைந்து விடுவதை தெரிந்து கொள்ள வேண்டும்.

**பெறுபேற்றின் அடைவு**

இங்கு 'ஆதிக்க வர்க்கம்' (Majority shareholder) வியாபாரத்தின் அடிப்படைப் பெறுபேற்று அடைவுகளைக் கருத்தில் கொள்ளாது தாம் கொண்டுள்ள திறமையைப் பயன்படுத்தி ஊக வியாபாரத்தை (betting or gambling) மேற்கொள்கின்றனர். இது முதலீடு அல்லாமல் பரிமாற்றல் வியாபார மாக மட்டுமே அமைந்துவிடுகிறது.

முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக பங்குமுதலீடு அமையப்பெறும் தன்மையை நோக்கின், அங்கு கீழ்வரும் முதன்மைச் சிறப்பியல்புகளைக் கண்டுகொள்ள முடியும்.

**வியாபாரப் புரிந்துணர்வு**

பங்குகளில் முதலீடு செய்ய முன்வருகின்றபோது, கம்பனியின் வியாபார முயற்சி தொடர்பில் தெளிவான புரிந்து ணர்வினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதனையே பங்குச்சந்தை அறிவுறுத்தி நிற்கிறது. குறிப்பாக கம்பனி எவ்வாறான பொருள் அல்லது சேவையினை உற்பத்தி செய்கிறது. அவை எங்கே, எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன, எவ்வகையான மூலப்பொருள்களை பயன்படுத்துகின்றன மற்றும் எவ்வாறானவர்கள் அதன் வழங்குநர்களான உள்ளனர், போட்டியாளர்களின் போட்டித்தன்மை எவ்வாறானது, நிதிக்கிடைப்பனவு மற்றும் நிதிக்கையாளுகை தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும்.



இதேபோன்ற ஒரு பகுப்பாய்வை முயற்சியாளன் வியாபார முயற்சி யாண்மை தொடர்பில் வளங்களை இணைக்கின்றபோது மிகவும் அவதானமாக ஆய்வு செய்ய வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. மாறாக அடிப்படை வியாபாரத் தந்திரோபாயங்களைக் கருத்தில் கொள்ளாது பங்குச்சந்தையில் முதலிடுதல் என்பது, வர்ணப்பூச்சை திட்டமிடல் இன்றி கைபோன போக்கில் பூசுவதற்கு ஒப்பான செயல் நடவடிக்கையாக அமைந்துவிடும்.

**முதலீட்டுத் திரும்பல் மற்றும் அடிப்படை வியாபாரத்தின் பெறுபேறு**

பங்குமுதலீடு மற்றும் முயற்சியாண்மை என இரண்டுமே அடிப்படையில் இடர்நேர்வுடன் இரண்டறக் கலந்தவை. வியாபாரத்தின் வெற்றி மற்றும் தோல்வியுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றன. அதனை வேறுபடுத்த முடியாது. மாறாக இழிவுபடுத்த முடியும். தெரிவு செய்யும் கம்பனியின் வியாபார பெறுபேறானது சிறப்பாக அமையுமிடத்து, கம்பனி தனது வியாபாரத்தை விருத்தி செய்வதுடன் உழைக்கப்பட்ட இலாபத்தை பங்குலாபமாக (Dividend) அதன் உரிமையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். இது வருமான அதிகரிப்புக்கான அடிப்படையாக அமைகிறது. முயற்சியாண்மையும் இதற்கு விதிவிலக்கானது அல்ல.

**அர்ப்பணிப்புடன் இணைந்த கடின முயற்சி**

இவ் இரண்டு முயற்சிகளும் கடின உழைப்புடன் தொடர்புடையவை. முயற்சியாண்மையைப் பொறுத்தவரையில், வியாபாரத்தை தொடர்ச்சியாக சரியான பாதையில் இட்டுச்செல்ல வேண்டிய பக்குவம் அவசியமாகிறது. இதற்கு முயற்சியாளன் தொடர்ச்சியாக உற்பத்தி மட்டம், விற்பனைப்பெறுபேறு, நிதி நிலமைகள், தொழிலாளர்களின் வினைத்திறன் மற்றும் செலவுச்சிக்கனம் போன்ற கம்பனியின் ஆரோக்கியமான செயல்நிலைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

அவ்வாறே பங்குமுதலீட்டிலும் இவ்வாறான குறிகாட்டிகளை கம்பனிகளின் காலாண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகளின் ஊடாகவும், செய்தித்தாள் மற்றும் சிறப்பு ஆய்வுக் குறிப்புகளின் உதவியோடும் அறிந்துகொள்ள முடிகிறது. எமது முதலீட்டுத் தேக்கத்தில் (Portfolio) அவ்வாறான கம்பனிகளை இனங்கண்டு நிரல்படுத்த அதிகளவாக நேரம் மற்றும் முயற்சி அவசியம் என்பதனை பங்குமுதலீடு உணர்த்திநிற்கிறது. பொதுவாக பல கம்பனிகளை பின்தொடர்வதைத் தவிர்த்து, சிந்தனைப் பூர்வமாக வசதிக்கு ஏற்றால் போல் குறித்த ஒரு சில கம்பனிகளை தெரிவுசெய்தல் நன்று.

**வியாபாரத் தெரிவு**

எமது தெரிவு பிழையாக அமையுமிடத்து ஈடுபடுத்திய மூலதனத்தை மட்டுமல்ல, சிறந்த முதலீட்டு வாய்ப்பையும் இழக்க நேரிடும். இது பங்குமுதலீட்டுக்கு மட்டுமல்ல முயற்சியாண்மைக்கும் சாலப்பொருந்தும். முயற்சியாளன் தனது எண்ண வெளிப்பாட்டை (idea) சரியான நேரத்தில் உரியவாறு நடைமுறைப்படுத்தத் தவறினால் இழப்பு என்பது தவிர்க்க முடியாத அங்கமாக அமைந்துவிடும்.

**முகாமையாளர் தெரிவு மற்றும் தராதரம்**

முயற்சியாண்மையின் தொடர்ச்சியான வெற்றி என்பது, முயற்சியாளனில் மட்டுமன்றி அவனால் பணிக்கப்படும் தொழில் நிபுணத்துவக் குழுவிலும் (Management) தங்கியுள்ளது. அதாவது, காலத்துக்கு ஏற்ப புதிய திட்டங்களை அல்லது யோசனைகளை இணைத்து வியாபார விரிவாக்கத்துக்கு அடித்தளமாக முயற்சியின் முகாமையும் அதன்தராதரமும் அமைகின்றன. அவ்வாறான பங்குமுதலீட்டை ஆரம்பிக்கும் போது நாம் தெரிவு செய்யும் கம்பனியின் முகாமையாளர்கள் மற்றும் நல்லாட்சித் தத்துவம் (Good corporate governance) தொடர்பாக கம்பனி கொண்டுள்ள கொள்கைளை மிக நுணுக்கமாக அவதானம் கொள்ள வேண்டும். ஆக, உங்கள் முதலீடுகளை அச்சமின்றி இவ்வாறான கம்பனிகளில் தொடர்ச்சியாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

**முயற்சியாண்மையின் வெற்றியே புகழைத் தேடித்தரும்**

இவ் இரண்டு முயற்சியும் பலருக்குச் செல்வத்தை மட்டுமன்றி மதிப்பிட முடியாத புகழையும் கொடுத்த பல சந்தர்ப்பங்களை பங்கு முதலீட்டடில் கண்டுகொண்டுள்ளோம். இதற்கு அவர்களின் வெற்றியே வித்தாக அமைந்திருந்தது. இருந்த போதும் பல்லாயிரக்கணக்கான முயற்சியாண்மை யும், பங்குமுதலீடுகளும் தோல்விகளைக் கண்டுள்ள உண்மையையும் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே முயற்சியாண்மை மற்றும் பங்கு முதலீடு ஆகிய இரண்டு நிலைகளையும் ஓர் இலகுவான முயற்சியாக நாம் கொள்ளக்கூடாது.



பங்குமுதலீட்டுக்கும், முயற்சி யர்ண்மைக்கும் இடையேயான ஒற்றுமைகள் சிலவற்றை அறிந்துகொண்டுள்ளோம். உண்மையில் இங்கு, பங்குமுதலீடுகள் முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக அமைவுபெறுகின்ற போதும் ஒப்பீட்டளவில் சில தனித்தவமான சிறப்புக்களை அல்லது வசதிகளை பங்குமுதலீடு தன்னகத்தே கொண்டுள்ளது. அவை குறித்தும் நோக்குவோம்.

**குறைந்த மூலதனத்தேவை**

பங்கு முதலீட்டை நாம் மிகக் குறைந்த மூலதனத்துடன், அதாவது ஒரு சில ஆயிரம் ரூபாக்களுடன் ஆரம்பிக்க முடியும். ஆனால் முயற்சியாண்மை என்பது அவ்வாறில்லை. ஆரம்ப மூலதனமாக அதிக தொகை, குறிப்பாக ஒன்று அல்லது இரண்டு இலட்சங்கள் தேவைப்படுவதுடன் தொடர்ச்சியாக மூலதனத்தை ஈட்ட வேண்டிய தேவை ஏற்படலாம்.

**பன்முகப்படுத்தி முதலீடு செய்தல்**

எமக்கு வசதியிருப்பின் முதலீடுகளை குறித்த வியாபாரத் திட்டங்களில் மட்டுமன்றி பல்வேறுபட்ட வியாபார முயற்சிகளில் பன்முகத் தன்மையோடு முதலீடு செய்யும் வசதி பங்குமுதலீடுகளில் காணப்படுகிறது. இங்கு எல்லாத் துறைகளும் ஒரே நேரத்தில் சரிவைச் சந்திப்பதற்கான வாய்ப்புக் குறைவு என்றே கூறலாம். எனவே முதலீடுகளைப் பன்முகப்படுத்துவதன் ஊடே எமது முத லீட்டுக்கான இடர்நேர்வுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். முயற்சி யாண்மையில் குறித்த நேரத்தில் குறித்த ஒரு வியாபாரத்தை மையப்படுத்தியே முதலீடு செய்ய முடியும் என்பது நோக்குதற்குரியது.

**தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும்**

துர்அதிர்ஷ்டவசமாக தவறான பங்குத்தெரிவு எமது முதலீட்டுத் தேக்கத்தில் இடம் பெற்றிருப்பின் அதனைத் தவிர்த்திருப்பதற்கான பல சந்தர்ப்பங்களை பங்குமுதலீடு கொண்டுள்ளது. இங்கு பங்குகளை விற்பனை செய்து கிடைக்கும் நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் முயற்சியாண்மையில் வியாபார முயற்சி வெற்றியடையவில்லையெனில் ஈடுபடுத்திய மூல தனத்தினை மீளப்பெறுவது என்பது மிகக் கடினம். மேலும் புதிய யோசனைகளை உள்வாங்கும் போது நட்டம் மட்டுமன்றி மேலதிக மூலதனத் தேவையையும் அது வேண்டி நிற்கும்.

## பொலிஸாரிடமிருந்து...

கர வண்டியை மறித்துள்ளனர். முச்சக்கர வண்டியை நிறுத்தாது சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். பொலிஸார் தமது உந்துருளியில் முச்சக்கர வண்டியை விரட்டிப் பிடிக்க முயன்றனர்.

முச்சக்கர வண்டி வேகமாகப் பயணித்த நிலையில் 3 உந்துருளிகளை மோதித் தள்ளியவாறு தப்பியோடியது. ஐவர் காயமடைந்தனர். மூவரின் கால் முறிந்த நிலையில் அந்தப் பகுதி இளைஞர்களால் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

பொலிஸார் விரட்டிச் சென்ற முச்சக்கர வண்டி சுன்னாகம் பொதுச் சந்தைக்கு அருகில் தடம்புரண்டது. சாரதி பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார். சாரதியைக் கைது செய்த பொலிஸார் ஆவணங்களை சோதனையிட்டபோது, அவரிடம் ஓட்டுநர் உரிமம் இருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. (5.105)

## வன்னியிலிருந்து...

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தன் மற்றும் அவரது புதல்வரின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வவுனியாவில் நேற்றுஇடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகோதரப் படுகொலை ஊடாக இழக்கப்பட்ட இரு உயிர்களை இங்கே நினைவுகூருகின்றோம். இன்று நாம் சந்திக்கும் துன்பியல்களுக்கு இது ஒன்றே காரணமாக அமைந்துள்ளது.

இன்று நாம் ஐக்கியத்தைப் பற்றிப் பேசுகின்றோம். முன்பு எம்மிடம் ஆயுதம் இருந்த போது ஐக்கியம் பற்றிப் பேசவுமில்லை, சிந்திக்கவும் இல்லை. இன்று எம்மிடம் ஆயுதம் இல்லை. அதனால் ஐக்கியத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். எம்மிடம் ஆயுதம் இருந்திருந்தால் அது பற்றிப் பேசியிருக்கமாட்டோம். எமது ஆயுதங்களே பேசிக்கொண்டிருக்கும். இதுதான் உண்மை. நாம் எல்லோருமே தவறுவிட்டிருக்கின்றோம். அனைத்தும் முடிந்த பின்பு ஐக்கியத்தைப் பற்றிப்பேசுகின்றோம்.

இன்று மிதவாதத் தலைவர்களைப் பார்த்து இயக்கங்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கின்றன. நாங்கள் அவர்களைப் பார்த்துக் குறைசொல்வதற்கு எங்களுக்குத் தகுதி இருக்கின்றதா? போராட்ட இயக்கங்கள் அனைத்தும் தமிழ் மக்களது விடுதலை மற்றும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் ஒன்றிணைந்து செயற்பட முடியுமா? ஒரு நாளும் இல்லை. பின்னர் ஏன் மிதவாதத் தலைவர்களைக் குறைசொல்லிக் கொண்டிருக்கிறோம். அதனை நிறுத்த வேண்டும். இன்று வடக்குக்கு முதலமைச்சர் யார்? விக்கினேஸ்வரனா?, மாவையா? என்று பேசிக்கொண்டிருக்கிறோம். ஏன் வன்னியில் இருந்து ஒரு பெயரை உங்களால் உச்சரிக்க முடியவில்லை? எத்தனை போராளி இயக்கங்கள் இங்கு இருக்கின்றன. அதற்குள் இருந்து ஒரு முதலமைச்சரின் பெயரை உச்சரிக்க முடியவில்லை. கிழக்கிலே அப்படியான ஒருவர் வரமுடியும் என்றால், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணசபையிலே வரமுடியும் என்றால், ஏன் வடக்குக்கு அவ்வாறு ஒருவர் வரமுடியாது? முன்னாள் போராளிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தகுதி இல்லையா? எங்களுக்குள் நாம் கேட்க வேண்டிய கேள்விகள் பல இருக்கின்றன - என்றார். (5.110)

## மேன்முறையீட்டு...

சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். கடந்த 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளையை வழங்கியிருந்தது. டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தது. இருப்பினும் டெனீஸ்வரன் வகித்த அமைச்சுப் பொறுப்புக்கள் அவரிடம் மீளவும் ஒப்படைக்கப்படவில்லை. அமைச்சர் சபை மாற்றியமைக்கப்படவுமில்லை.

இது தொடர்பில் கடந்த 10ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் ஆராயப்பட்டிருந்தது. இன்றைய தினம் சிறப்பு அமர்வு நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அனுப்பி வைத்துள்ள கேள்வி பதில் அறிக்கையில் இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

'மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றதே?' என்ற கேள்விக்கு,

சில தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவை. முன்னைய தலைமை நீதியரசர் ஒருவருடன் அவரின் தலைமையின் கீழ் நான் அமர்வில் இருந்தபோது அவர் தீர்மானம் ஒன்றை அமர்வில் இருந்து கொண்டே விடுக்க எத்தனித்தார். உடனே நான் இவ்வாறு தீர்மானம் அளித்தீர்களானால் நடைமுறைப்படுத்த முடியாது போய்விடும் என்றேன். அதன் பின் அத் தீர்மானம் திருத்தி வழங்கப்பட்டது. ஆகவே சில தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவை. அதனால்த்தான் உயர் நீதிமன்றத்தின் உதவியைநாடியுள்ளோம். உயர்நீதிமன்றத்தின் முன் வழக்கு இருக்கும் போது எந்தளவுக்கு அதன் உள்ளடக்கப் பொருள் பற்றி விமர்சிக்கலாம் என்பது என்ற 'மன்றாய்வில்' கோட்பாட்டின் பாற்பட்டது. இது சம்பந்தமாக ஏற்கனவே நான் மாகாண சபையின் கடைசி அமர்வின் போது எனது கருத்தை வெளியிட்டுள்ளேன். அதைத் திரும்பவும் இங்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நம்புகின்றேன் - என்றுள்ளது. (5)

## சரணடைந்த....

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளுடன், காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தினரின் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் பங்கேற்றே மேற்படி சிறுமி தனது தந்தை எங்கே என்று கேள்வி எழுப்பினார்.

2009ஆம் ஆண்டு போரின் இறுதியில், அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்புடன் நூற்றுக்கணக்கான போராளிகள் உள்படப் பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர். இவர்களை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் இராணுவத்தினர் ஏற்றிச் சென்றிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் திரைப்படப் பிரிவில் கடமையாற்றிய திலக் என்பவரும் சரணடைந்திருந்தார். அவரது ஒன்பது வயது மகளே மிக உருக்கமாகத் தனது அப்பாவைத் தேடித்தருமாறும் தான் இதுவரை அப்பாவின் முகத்தைப் பார்க்கவில்லை என்றும் கோரியிருந்தார்.

இதன் போது மண்டபத்தில் இருந்த கிராம அலுவலர்கள் உள்படப் பலர் கண்ணீர் விட்டு அழுதனர்.

இந்தச் சிறுமி 2009ஆம் ஆண்டு பதுங்குழிக்குள் பிறந்தாள் என்றும் தனது அப்பாவின் முகத்தை இதுவரை காணாதவர் என்றும் சிறுமியின் அம்மம்மா குறிப்பிட்டார். (5.214)

## இன்றைய...

கேற்பதானது, அமர்வை ஏற்றுக் கொள்வதாக அமைந்து விடும் என்பதால், சிறப்பு அறிக்கையைச் சமர்பித்து வெளியேறுவதற்கு அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

ரெலோவின் உயர்மட்டக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. உயர் மட்டக் குழுவில் இல்லாத வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் நேற்றைய கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். வடக்கு மாகாண சபையின் இன்றைய சிறப்பு அமர்வு தொடர்பிலேயே நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

'ஆளுநர் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டார். இதேபோல் முதலமைச்சரும் சட்டமுறையாகச் செயற்படவில்லை. தற்போது கூட ஆளுநரும் முதலமைச்சரும் கலந்து பேசி தீர்வு காணமுடியும். தீர்வு கண்டபின் முதலமைச்சர் விரும்பினால் அமைச்சரவையை மாற்றியமைக்க முடியும். இதனாலேயே இந்த அமர்வு தேவையற்றது' என்ற முடிவை ரெலோ எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

இந்த முடிவை, சிறப்பு அமர்வில் அறிவித்த பின்னர் ரெலோ உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

வடக்கு மாகாண சபையில் போக்குவரத்து அமைச்சராகக் கடமையாற்றிய பா.டெனீஸ்வரன் ரெலோ அமைப்பின் சார்பிலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கினார் என்றும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டார் என்றும் தெரிவித்து டெனீஸ்வரனை கட்சியிலிருந்து நீக்குவதாக ரெலோ அறிவித்தது. இந்தப் பின்னணியில் அவர் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்திருந்தார். வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்குக்கு எதிராக டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். கடந்த 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளையை வழங்கியிருந்தது. டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தது. (5.26)

## ஆளுநர்...

இன்று பதிலடி கொடுக்கவுள்ளார். வடக்கு மாகாண சபையில் டெனீஸ்வரன் விவகாரம் தொடர்பில் இன்று சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது. இந்த அமர்வில் கடும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த அமர்வில், அமைச்சரவையின் பெயர்ப் பட்டியலை வழங்குமாறு கோரி ஆளுநரிடமிருந்து எந்தக் கடிதமும் தனக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் வடக்கு மாகாண ஆளுநர், அது தொடர்பில் முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு அவர் பதில் வழங்கியிருந்தார் என்றும் தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில், ஆளுநரின் கடிதம், அதற்கு முதலமைச்சர் அனுப்பிய பதில் கடிதம் என்பவற்றை சில தரப்புக்கள் ஆவணங்களாகப் பெற்றுள்ளன. அவற்றை இன்றைய அமர்வில் அவர்கள் சமர்பிப்பார்கள் என்று தெரியவருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர், கடந்த அமர்வு முடிந்த பின்னரே, அதாவது 10ஆம் திகதியே ஆளுநரின் கடிதம் தனக்குக் கிடைத்ததாகத் தெரிவித்திருந்தார். அதுவும் பொய்யானது என்பதை நிரூபிக்கும் வகையில் சில ஆதாரங்கள் திரட்டியுள்ளதாகவும் அதுவும் இன்றைய அமர்வில் முன்வைக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர், டெனீஸ் விவகாரம் தொடர்பில் வழக்கு உயர் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. அதனால் ஆராய முடியாது என்று சாரப்பட கருத்து வெளிப்படுத்துவதால் அதற்கும் இன்றைய அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் பதிலடி கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விவகாரம் மக்களின் இறைமையுடன் தொடர்புடையது. அது தொடர்பில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவது பற்றி மாத்திரமே பேசப்படும். இது நீதிமன்றில் நிலுவையிலுள்ள வழக்கில் மூக்கை நுழைப்பதாக அமையாது என்று அவர்கள் அமர்வில் சுட்டிக்காட்டுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை, ஆளும் கட்சி உறுப்பினர்கள் நேற்று இரவு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (5)

## இளைஞர்களை...

தன் தெரிவித்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தன் மற்றும் அவரது புதல்வரின் 20ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வவுனியாவில் நேற்றுஇடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

1983ஆம் ஆண்டு ஜீலைக் கலவரத்தின் பின்னர் பேரினவாத அரசிடமிருந்து தமிழ் மக்களைக் காக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். போராட்டக் களத்துக்கு நாம் செல்லும்போது எமக்கு 20வயது. இலட்சியத்துக்காகவே போராடச் சென்றோம்.

எங்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டோம். தமிழ் மக்களின் நிர்க்கதியான நிலைக்கு இதுவும் காரணம்.

ஆயுதப் போராட்டத்தை தொடக்கி அல்லது தூண்டிவிட்டவர்கள் அதன் தலைவர்களோ அல்லது போராளிகளோ இல்லை. எங்கள் மிதவாதத் தலைவர்கள் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தமிழீழத் தீர்மானத்தின் மூலம் பல இளைஞர்களை உசுப்பேற்றி விட்டார்கள். அவர்களை ஆயுதம் ஏந்த வைத்தார்கள். ஆனால் அதே மிதவாதத் தலைவர்கள், ஜே.ஆர். கொண்டு வந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்காமல் வாய்மூடி இருந்தார்கள். அந்தச் சட்டமே இளைஞர்களின் அழிவுக்கு வித்திட்டது. முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கும் காரணமாக அமைந்தது.

தந்தை செல்வநாயகத்திலிருந்து தற்போதைய எதிர்கட்சித் தலைவர் வரையும் சிங்கள இனவாதத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். தமிழ் மக்களின் அரசியல் இராஜதந்திரம் என்பது கறையான் அரித்துப் போன ஒரு நிலையிலேயே இருக்கின்றது.

தமிழ் மக்களின் விடுதலையை விரும்புவர்களாக இருந்தால் நாம் கட்சி அரசியலை மறந்து ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். நாம் தேர்தல் அரசியலில் மூழ்கிப் போய் இருக்கின்றோம். இராஜதந்திர ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய அரசியல் நிலை எங்களிடம் இல்லை. இன்று இருக்கும் அரசியல் தலைவர்கள், வெறும் அடிமைகளாகவே இருக்கின்றார்கள். இவ்வாறான வரலாற்றுத் தவறுகள் நடக்காமல் இருக்கவேண்டுமாக இருந்தால் மூத்த அரசியல்வாதிகள் அனைவரையும் ஒன்றிணைத்து, விட்டுக்கொடுப்பை ஏற்படுத்தும் உதாரண புருசர்களாக மாற்ற வேண்டும் - என்றார். (5.110)

## ஓ.எம்.பியை...

கிளிநொச்சி, ஜீலை 16

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை (ஓ.எம்.பி.) ஒருபோதும் நம்பத் தயாரில்லை. எங்களுக்குப் பன்னாட்டு விசாரணையேவேண்டும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணிக்குச் சந்திப்பு நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

கூட்டுறவாளர் மண்டபத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் அவர்களது உறவினர்கள் நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர். பணியகத்துக்கு எதிராகத் தமது போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதைப் போன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்தக் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது. கூட்டுறவாளர் மண்டபத்துள் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் 11 பேர் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர்.

'இந்தப் பணியகம் பன்னாட்டுச் சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்கானது. காலத்தை கடத்துவதற்கானது. இதுபோன்ற பல ஆணைக்குழுக்கள் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துக்கு ஆணைக்குழுக்கள் மூலம் தீர்வு கிடைக்கவில்லை.

எமது அனுபவங்கள் ஊடாக இந்தப் பணியகத்திலும் நம்பிக்கையில்லை. இந்தப் பணியகத்தை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். நாங்கள் கையளித்த உறவுகளுக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விக்கு எங்களுக்குப் பதில் கிடைக்கவேண்டும்' என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கூட்டுறவாளர் மண்டபத்துக்கு வெளியே பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் நடந்த கவனவீர்ப்பில், போராட்டம் நடத்தியோர் அமர்வு நடந்த மண்டபத்துக்குள் நுழைந்திருந்திருந்த நிலையிலேயே, பொலிஸ் பாதுகாப்பு கிளிநொச்சியில் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.6.214)



## நெய்மருக்கு ஆதரவுக்கரம் நீட்டினார் இன்பான்ரினோ

உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் எதிரணி வீரர்களால் அதிக முறை பவுல் செய்யப்பட்டு கீழே விழுந்த போது, அவர் நடிப்பதாக கடும் விமர்ச னங்கள் எழுந்த நிலையில் நெய்மருக்கு ஆதர வாக பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் இன்பான்டினோ கருத்து தெரிவித் துள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதியில் பிரேசில் அணி 2:1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணியிடம் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது. முன்னதாக நாக் அவுட் சுற்றில் மெக்சிகோ அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான நெய்மர், எதிரணி வீரர் காலை தட்டிவிட்டார் என்று சில அடி தூரத்துக்கு உருண்டு சென்று விழுந்தார். இதுதொடர்பாக ஆட்டம் முடிவடைந்ததும் மெக் சிகோ அணியின் பயிற்சியாளர் கடும் விமர்சனம் செய்தார். நெய்மர் வேண்டுமென்றே நடித்து நேரத்தைக் கடத்தியதால் தங்கள் அணியின் ஆட்டத்திறன் பாதிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட் டினார். இந்நிலையில் நெய்மர் களத்தில் விழும் காட்சிகளை கேலி செய்து ரசிகர்கள் காணொலி களைப் பதிவிட்டனர். இவ்வாறிருக்க நெய்ம ருக்கு ஆதரவு தெரிவித்தார் பன்னாட்டு கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் இன்பான்ரினோ.


"நெய்மர் சிறந்த வீரர், அற்புதமான திறன் கொண் டவர். அவர் குறித்து எதிர்மாறான வார்த்தையை என்னால் கூறமுடியாது. நெய்மர் ஜாம்பவான் வீரர்களில் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை" என்று இன்பான்ரினோ மேலும் தெரிவித்தார். (ம)




## வென்றது வளர்மதி

யாழப்பாணம், ஜூலை 16

புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன் னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வளர் மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமனாறு கலையரசி விளையாட் டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக் கில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)



# ஆசிகாவுக்கு கறுப்புப்பட்டி

யாழப்பாணம், ஜூலை 16

பளுதூக்கல் போட்டியில் தனக்கென்று தனி யான முத்திரை பதித்துள்ள வீராங்கனையான ஆசிகா கராத்தே போட்டியில் கறுப்புப் பட்டி யைத் தனதாக்கினார்.

இவருக்கான சான்றிதழ் சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்ரநெஷனல் சிறிலங்கா அமைப்பின் தலைமை ஆசிரியரும், பரீட்சக ரும், கராத்தே ஒப் ஜப்பான் சம்மேளனத்தின் பன்னாட்டு அயலுறவுத்துறை பணிப்பாளருமா கிய சிகான் அன்ரோ டினேஸால் அண்மை யில் வழங்கி வைக்கப்பட்டது. (ம-422)

# இந்தியாவுக்குப் பதிலடி இங்கிலாந்து கவனிப்பு!

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் 86 ஓட்டங்களால் இங்கி லாந்து அணி அபார வெற்றிபெற்றது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இதனால் இந்த இரண்டாவது ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெற்றால் அந்த அணி கிண் ணம் வெல்வதை உறுதிசெய்யும். இதனால் தொடரில் தனது இருப்பை உறுதிசெய்ய இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை இங்கிலாந்துக்கு இருந் தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்க ளில் 7 இலக்குகளை இழந்து 322 ஓட்டங்க ளைப் பெற்றது. அதிகபட்சமாக ரூட் 113 ஓட் டங்களையும், மோர்கன் 51 ஓட்டங்களை யும், வில்லி 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 3 இலக்குகளை கைப்பற்றினர். உமேஸ் யாதவ், பாண்டியா, சாகல் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற் றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 236 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந் தது. ரெய்னா 46 ஓட்டங்களையும், கோக்லி 45 ஓட்டங்களையும், டோனி 37 ஓட்டங்க ளையும் பெற்றனர். பிளங்கட் 4 இலக்குகளை யும், வில்லி, ரசீட் இருவரும் தலா 2 இலக்கு களையும் கைப்பற்றின. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழப்பாணம், ஜூலை 16

புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரிய குட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளை யாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு அணி மோதவுள்ளது. (ம-23)

## சென். மேரிஸ் இறுதிக்குள்

யாழப்பாணம், ஜூலை 16

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்துத் தொடரில் சென். மேரிஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யங்கம்பன்ஸின் மைதானத் தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது. சிறந்த வீரனாக நவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியின் சுதாகரன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-23)

## இளைஞர் அசத்தல்

யாழப்பாணம், ஜூலை 16

புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரிய குட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப் பாய் இளைஞர் அணி வென்றது.

சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சண்டிலிப்பாய் இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

# 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் டோனி

இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி பன்னாட்டு ஒரு நாள் அரங்கில் 10 ஆயிரம் ஓட் டங்கள் என்ற மைல்கல்லைக் கடந்தார்.

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத் தில் டோனி 37 ஓட்டங்களைச் சேர்த்தார். இதையடுத்தே அவர் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற அடைவைக் கடந்தார். சச்சின், கங்குலி, ராவிட் ஆகி யோருக்கு அடுத்தபடியாக 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற அடைவைக் கடந்த நான்கா வது இந்திய வீரராக டோனி உள்ளார். ஓட்டமொத்தமாக 12 ஆவது பன்னாட்டு வீரராகவும் டோனி தன்னைப் பதிவுசெய்தார். 10 ஆயிரம் ஓட் டங்கள் என்ற அடைவைக் கடந்த இரண்டாவது இலக்குக் காப்பாளராகவும் டோனி உள் ளார். இந்த அடைவை எட்டிய ஒரேயொரு இலக்குக் காப்பாள ராக சங்கா இருந்தார். தற்போது அவருடன் டோனியும் இணைந்தார். (ம)



# பிரான்ஸ் உலகச்சம்பியன்




கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில்குரோசியாவைத் தோற்கடித்துக் கிண்ணம் வென்றது பிரான்ஸ். பிரான்ஸின் வெற்றியை அடுத்து கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் தொடர்ந்தும் ஐரோப்பாவிலேயே நிலைபெறுகிறது. கடந்த வருடம் ஜேர்மனி சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**முதல் பாதி**

கொண்டாட்டங்கள், கோலாகலங்கள், பரபரப்புக்கள் என்று எதற்கும் பஞ்சமில்லாத வகையில் மொஸ்கோ நகரம் விழாக்கோலம் பூண்டிருக்க ஆரம்பமானது உலகக்கிண்ணத்துக்கான இறுதி மல்லுக்கட்டல். குரோசிய அணி நேற்று அதிகம் பதற்றமடைந்திருந்தமை உண்மை. அதிலும் அந்த அணியின் பயிற்சியாளர் ஆட்டம் ஆரம்பிக்கும் முன்னர் இருந்தே சிறிது பரபரப்பாக இருந்தார். ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் பிரான்ஸுக்கு பிரீகிக் வாய்ப்புக் கிடைத்தது. கோல் கம்பத்துக்கு .மேலாகப் பந்தைத் தட்டிவிடுவதற்காக குரோசிய அணியின் வீரர் மரியோ மேலெழுந்த போது அது அவரின் தலையில் பட்டு 'ஓன் கோல்' ஆனது. அடுத்த பத்து நிமிடங்களில் குரோசியா கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் இவான் பேர்சிக். ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் குரோசிய வீரர் பொக்ஸ் பகுதிக்குள் வைத்து பந்தைக் கையால்தட்ட பிரான்ஸுக்கு பெனால்டி வாய்ப்புக் கிடைத்தது. அற்புதமான கோலாக மாற்றினார் கிரீஸ்மன். ஆக, குரோசிய தனது தலையில் தானே அடுத்தடுத்து மண்ணைப் போட்டுக்கொண்டது. 2:1 என்று பிரான்ஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.



**இரண்டாம் பாதி**

இரண்டாம் பாதியில் பிரான்ஸின் வீரர்கள் மின்னலெனச் சீறிப் பாய்ந்தனர். முதல் பாதிக்கு முற்றிலும் வேறுபட்ட வகையில் பிரான்ஸின் வேகம் அமைந்தது என்றால் அது மிகையில்லை. 58ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் போக்பா. இந்தக் கோல் பிரான்ஸுக்கும் குரோசியாவுக்கும் இடையிலான கோல் இடைவெளியை அதிகப்படுத்தியதுடன் குரோசிய வீரர்களை மனதளவில் சோர்வடையச் செய்தது என்றும் சொல்லிக் கொள்ளலாம். 65ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் இளம் வீரர் மப்பே கோலொன்றைப் பதிவுசெய்து அனைவரையும்வியக்கவைத்தார். மப்பேயின் கோல் பிரான்ஸின் வெற்றியை கிட்டத்தட்ட உறுதி செய்தது. அதன் பின்னர் இரண்டு அணகளும் விடாமல் போராடின. பிரான்ஸ் வீரர்கள் தமது வெற்றியைத் தக்கவைக்கவும், குரோசிய வீரர்கள் அதைத் தட்டிப்பறிக்கவும் கடுமையாக முயன்றுகொண்டிருந்தனர். எனினும் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படவில்லை. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வென்றது பிரான்ஸ்.

**பரஸ்பரம் கண்ணீர்**

பிரான்ஸ் வெற்றிபெற்றதற்கான இறுதி விசில் ஊதப்பட்டதும் இரண்டு அணியினரும் பரஸ்பரம் கண்ணீர் மல்கினர். பிரான்ஸ் வீரர்களின் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராகவும் குரோசிய வீரர்களின் கண்ணீர் ஆதங்கக் கண்ணீராகவும் அமைந்தது. பிரான்ஸில் கீரீஸ்மன், போக்பா, உம்ரிரி ஆகியோர் அதிகம் உணர்ச்சிவசப்பட்டனர். குரோசியாவில் அணித் தலைவர் மோவிக், பெர்சிக், ராகிடிக் ஆகியோர் கண்ணீர் மல்கினர்.

**வியக்க வைத்த குரோசிய அணி**

உலகச்சம்பியனாக பிரான்ஸ் நேற்று மகுடம் சூடினாலும் குரோசியாவுக்கு நேற்றைய ஆட்டத்தில் வாய்ப்புக்கள் தராளமாகவே இருந்தன. 14 உதைகளை குரோசியா மேற்கொண்டிருந்தது. இது பிரான்ஸ் மேற்கொண்ட உதைகளை விட இரண்டு மடங்கு அதிகம். ஆட்டத்தில் 66 வீதமான நேரம் குரோசியா பந்துடமையைக் கொண்டிருந்தது. இதுவும் பிரான்ஸை விட இரண்டு மடங்கு அதிகம். பிரான்ஸ் மேற்கொண்ட பரிமாற்றங்கள் 285. குரோசிய மேற்கொண்ட பரிமாற்றங்கள் 529. பிரான்ஸுக்கு கிடைத்த மூலை உதை வாய்ப்பு 2. குரோசியாவுக்கு ஆறு வாய்ப்புக்கள் கிடைத்தன. ஆக, அனைத்து வகையிலும் பிரான்ஸை வீழ்த்தக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்த குரோசியா, தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆட்டத்தில் தடுமாற்றியமை துரதிஸ்டமே.

(ம)







# உலகக்கிண்ண விருதுகள்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் விருதுகள் விவரம் நேற்று அறிவிக்கப்பட்டன.

தங்கக் கையுறை (சிறந்த கோல் காப்பாளர்) விருது பெல்ஜியம் அணியின் கோல் காப்பாளர் திபாவ். அதிக கோல்களைப் பதிவுசெய்தவருக்கான விருது (தங்கக் காலணி) இங்கிலாந்தின் அணித் தலைவர் ஹரி கேன். தங்கப் பந்து விருது குரோசிய அணியின் தலைவர் லூக்கா மோவிக். இளம் வீரருக்கான விருது பிரான்ஸின் கிலியான் மப்பே ஆகியோருக்குக் கிடைத்தன.

(ம)

# வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் மீண்டும் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 16

"தெற்காசியாவில் நடைபெறும் கால்பந்தாட்ட பிறீமியர் லீக் தொடர்களில் வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் தொடரை முதலிடத்துக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம்" இவ்வாறு தெரிவித்தார் வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்துத் தொடரின் தலைவர்.

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் தொடர் நான்கு சுற்றுக்கள் முடிவடைந்த நிலையில் இடை நிறுத்தப்பட்டிருந்தது. அதை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் திண்ணை விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தொடரில் 12 அணிகள் விளையாடுகின்றன. எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து ஆட்டங்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன. யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் பெரும்பாலான ஆட்டங்கள் இடம்பெறும். கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் சில ஆட்டங்கள் இடம்பெறும். இதுவரை காலமும் தொடருக்கு முதன்மை அனுசரணை என்று எவரும் இருக்கவில்லை. நிசா நிறுவனம் முதன்மை அனுசரணை வழங்கவுள்ளது. 12 அணிகளிலும் வெளிநாட்டு வீரர்களும் இடம்பிடித்துள்ளனர். இதனால் எமது வீரர்கள் அவர்களின் நுட்பங்களைக் கற்றுக்கொள்ளவும் இந்தத் தொடர் வாய்ப்பை வழங்குகிறது. வவுனியா மாவட்ட இளைஞர்கள் போதைப் பொருளுக்கும், யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்கள் வாள் வெட்டுக் கலாசாரத்துக்கும் அடிமையாகியுள்ள நிலையில், அவர்களை மீட்க இவ்வாறான தொடர்கள் அவசியமாகின்றன" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-114)

# விம்பிள்டன் தொடரில் கெர்பரிடம் கிண்ணம்



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் ஜேர்மனிய வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர்.

லண்டன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கெர்பரை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மோதினார். ஆரம்பம் முதல் இருவரும் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். எனினும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற் கெர்பரிடம் சென்றது. இரண்டாவது செற்றில் வெற்றிபெற்றால் மட்டுமே ஆட்டத்தில் தனது இருப்பை தக்கவைக்கலாம் என்ற நிலை செரீனாவுக்கு ஏற்பட்டது. எனினும் இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கினார் கெர்பர். முடிவில் அவர் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார். (ம)


வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள (நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்) நிறுவனத்துக்குக் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு O/L, A/L சித்தியடைந்த அனுபவமுள்ள / அனுபவமற்ற பணியாளர் தேவை.

**விற்பனையாளர்** - ஆண்/ பெண் - வயதெல்லை - 22 தொடக்கம் 35 வரை

**களஞ்சியப்படுத்துநர்** - ஆண் - வயதெல்லை 30 தொடக்கம் 40 வரை

**குறிப்பு:**- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (AKN/496)(11.17)

நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்

A-9, கண்டி றோட், கிளிநொச்சி. (பழைய வைத்தியசாலை முன்பாக)

071 792 3721, 021 228 3872



SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர்

வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், இளைஞர் யுவதிகள்

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின்

முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 21.07.2018

1. காலை 08-10 3.மதியம் 01-03

2. காலை 10-12 4.மாலை 03-05

வாரநாள் பிரிவுகள் (செவ்வாய், வியாழன்) ஆரம்பம் – 19.07.2018

1. காலை 08-10 2. காலை 10-12

SAAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,

021 320 3313 077 1570 486



வேலை வாய்ப்பு



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரில்

இயங்கும் E.S. நிறுவனத்திற்கு

வரவேற்பாளர்கள்

தேவை. அனுபவம் உள்ளவர்கள் மற்றும்


பழக விரும்புபவர்கள் நேரில்

சமுகம் அளிக்கவும்.

இன்று (16.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 12.00 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

E.S Printers

இல. 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அரியாலையின் நூற்றாண்டு சுதேசிய விழாவை முன்னிட்டு நேற்றுப் பட்டம் விடும் போட்டிகள் வெகு கோலாகலமாக நடைபெற்றன. பிற்பகல் 2 மணியளவில் அரியாலை திறந்தவெளி மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. (ம-161)


A/L 2018

இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றும்

புவியியல் மாணவர்களுக்கான

"கருத்தரங்கு"

▼ காலம் - ஜூலை - 20,21,22

▼ இடம் - DMI - ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

▼ ஆரம்பம் - 20.07.2018, வெள்ளி - 2pm

ஆசிரியர் – N.BABU

077 936 5087



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.